22 AUG 1964

உதயம்

'உதயம்' செப்டம்பர் இதழும்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.


| ஒளி-10 | ஆகஸ்டு & செப்டம்பர் 1964 | கதிர்-4 & 5 |
|---|---|---|


சபாநாயகர் திரு. எஸ். செல்லபாண்டியன்
திரு. அசோக்மேத்தா
மத்திய அமைச்சர் திரு. எஸ். கே. பாட்டீல்
முதலமைச்சர் திரு. பக்தவத்சலம்
மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்
அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன்
திருமுருக கிருபானந்தவாரியர்
திரு. " தேரையர் "
திரு. " நாட்டுப்புறம் "
திரு. மு. நமசிவாயம்
திரு. எல். எஸ். கரையாளர்
கவிஞர் கண்ணதாசன்
கலைஞர் எஸ். டி. சுந்தரம்
மத்திய அமைச்சர் திரு. சஞ்சீவ ரெட்டி
திரு. வைரவன்
திருமதி எஸ். அம்புஜம்மாள்
திரு. அருண்
திரு. அருணன்

ஆகியவர்களின் கட்டுரைகளும், கதைகளும், மற்றும் ஏராளமான துணுக்குகளும் இடம் பெற்றுள்ளன.


பல கோணங்களில் காமராஜ் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் பலவும் நிறைந்துள்ளன.

# காமராஜ் மலர்



# உதயம்

ஆசிரியை:
சகுந்தலா திருஞானம்



# ஆராயும் வேளையில்

ஆரோக்கிய வாழ்விற்கு ஆகாரம் சம நிலையில் சத்துப் பொருள்கள் கலந்ததாக இருக்க வேண்டும். சூரியன் மார்க் கோதுமைப் பொருள்கள் முழுக் கோதுமையின் நல்ல தன்மைகள் அனைத்தையும்—புரதச் சத்து, கார்போ ஹைட்ரேட்டுகள், A & B வைட்டமின்கள்—கொண்டவை, சுத்தமானவை, சுகாதாரம் மிக்கவை. கையால் தொடப்படாமல், நவீன முறையில் அரைக்கப்பட்டு, இயந்திரங்களாலேயே மூடைகளாக்கப்படுகின்றன. பிஸ்கோத்துகள், கேக்குகள், பூரிகள் தயாரிக்க சாலச் சிறந்தவை.



RISING SUN BRAND

## சூரியன் மார்க்

### மைதா, சூஜி, ஆட்டா

தயாரிப்பாளர்கள்:


**செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிட்.**

330, தம்பு செட்டி தெரு, சென்னை-1

போன்: 21043, 21044 & 21045

தந்தி: "MATHOORAN"

EP-CFM-2, TAM.



# வழிகாட்டும் தலைவா! வாழ்க பல்லாண்டு!!

சத்திய சாட்சியாக தூய இதயத்தோடு, வழிகாட்டும் தலைவர் காமராஜரை பல்லாண்டு வாழ்க என வணங்கி வாழ்த்துகிறோம்.

அதுவும் புனிதமான ஆகஸ்டு சுதந்திரத் திரு நாளில் ஒரு சுதந்திரச் சிற்பியின் பிறந்த நாள் பெருவிழாவை யோட்டி பால்லாண்டுகூறி வாழ்த்துரைப்பதில் பெருமை கோள்கிறோம், பெருமிதப்படுகிறோம்.

ஏழைகளை காக்கவும் தீயவர்களை அடக்க வும் மன்னர்கள் இருந்த காலம் மலையேறிப் போய்விட்டது.

மக்கள் தங்களைத் தாங்களே பரிபாலித்துக் கோள்ளும் ஜனநாயகம் இனறு அரசாளுகிறது.

இந்திய நாட்டின் 45 கோடி மக்களும் விரும்பி வேண்டி எடுத்துக் கோண்ட தலைவ ராக காமராஜ் விளங்குகிறார்.

காமராஜ் அவர்களுக்கு இந்த நாடுதான் குடும்பம். உண்மைதான் அவர் கோள்கை, தேசபக்திதான் அவருடைய நேறி. போது நலப் பணிதான் அவருடைய தோழில்.

நேருஜிக்குப்பின் யார் என்ற கேள்வி உலகம் பூராவிலும் எதிரோலித்தது. பல ஆண்டுக் காலம் எதிரோலித்தபடி இருந்தது. நேருஜி மறைந்த சேதி கேட்டதும் என்ன நடக்குமோ என்று உலகம் விதிர் விதிர்த்து நின்றது.

அப்போது தோன்றிய பிரச்னையைத் தீர்த்து வைத்து, காமராஜ் சரித்திர புருஷரானார்.

காந்திஜியின் கொள்கையும் நேருஜியின் கோள்கையும் இந்தியாவில் நிலைத்துவிட்டன. இந்தியாவின் சுதந்திர அரசு நிரந்தரம் பெற்ற அரசு என்பதை உலகத்து நாடுகளுக்கெல் லாம் உணர்த்தியவர் காமராஜ்.

தலைவர் காமராஜ் அவர்களால் நாடு இது வரை அடைந்ததைவிட இனி அடையப் போகும் நன்மைகள் அதிகம். அந்தப் பலன் களை நாம் அடைய அவரது கரங்களைப் பலப் படுத்துவது நம் கடமை.

காங்கிரஸ்தான் அவருடைய கரம்,காங்கிரஸ். தான் அவருடைய நெஞ்சின் உரம். காங்கிரஸ் தான் அவருடைய உயிர். காங்கிரஸ் என்றால் சேவைக்கு உரிய கருவி என்பதே போருள். மக்கள் சேவைக்காக ஓடியாடி அலைந்து பணி யாற்றியபடி இருக்கிறார். அவரைப் புரிந்து கோள்வோமாக.

நாமும் நம் தலைமுறையும் தழைத்து வாழவும் நம் எதிர்கால சந்ததியினர் சுகமாகவும் சுபிட்ச மாகவும் வாழவும் வழிகாட்டும் தலைவா, நீ பல்லாண்டு வாழ்க என பிரார்த்திக்கிறோம்.

ஜெய் ஹிந்த்!




இந்தப் பண்டிகை நாட்களில்
அழகுக்கும் சிக்கனத்துக்கும்

சிக்கனத்தையும், வனப்பையும் சேர்தது்க்கொடுப்பது கோ - ஆப்டெக்ஸ் ஆடைகளே

புடவைகள் – வேஷ்டிகள் – செக்குகள் –
ஷர்டிங்குகள் – சோளிரகங்கள் முதலியன.

கண்ணைப் பறிக்கும் வர்ணங்கள், ரம்யமான டிஸைன்கள்
நேர்த்தியான நெசவு— இத்தனையும்— அத்துடன் சிக்கனமும்.

கோ-ஆப்டெக்ஸ்
ஆடைகள்

**தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்**

எழும்பூர் :: சென்னை—8.



# மக்களின் நம்பிக்கைக்குரியவர்

**சபாநாயகர் உயர்திரு. எஸ். செல்லப்பாண்டியன்**

தலைவர் திரு. காமராஜ் அவர்கள், பாரதத்தின் மிகச்சிறந்த அரசியல் வாதியாகவும், சிந்தனையாளராகவும் இன்று விளங்கி வருகிறார். நமது ஒப்பற்ற தலைவர் தேச பிதாம காத்மாகாந்திஜி, அவர்களின் உத்தமசீடரும், ஆசியஜோதியும் ஆன நேருஜி அவர்கள் ஆகிய இவ்விருவர்களின்காலத்திற்குப்பின் பாரத சமுதாயமும் அரசாங்கமும் என்ன ஆகுமோ என்று உலகமக்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.

அநேகமாக எல்லோருமே இந்தியாவின் எதிர் காலத்தைப்பற்றி சந்தேகமும் அவநம்பிக்கையும் கொண்டிருந்தனர், மேலும் சுதந்திரப் போராட்ட காலத்தில் பங்கெடுத்துக் கொண்ட ஆற்றல் வாய்ந்த தலைவர்கள் ஒரு சிலரைத் தவிர பலரும் நேருவுக்கு முன்னதாகவே மறைந்து விட்டனர்.

ஜனநாயக அரசியல் திட்டத்தின் அமைப்பில் ஜனநாயகத்திலும், சமதர்மத்திலும் நம்பிக்கை யில்லாத பலர் இன்று நாட்டில் தோன்றி இருக்கின்றனர். ஜாதி, வகுப்பு, மதம், மொழி, பணம், படை இவற்றை ஆதாரமாக வைத்து பல குட்டித்தலைவர்கள் நாடெங்கிலும் தோன்றியிருக்கின்றனர்.

நாட்டில் ஒற்றுமையுடன் ஜனநாயகம் வளர்ந்தோங்குமோ என்று கலங்கி நின்ற இச்சந்தர்ப்பத்தில் பண்பும், அறிவும், ஆற்றலும் நிறைந்த திரு. காமராசர் அவர்கள் உள்ளத்தில் உறுதியுடனும், தெளிந்த தீர்க்க தரிசனத்துடனும் ஏக மனதாக பாரத நாட்டின் பிரதம மந்திரி அவர்களை தேர்ந்தெடுக்கும் பெரும் பணியை ஆற்றினார். அதுமட்டுமல்லாது பஞ்சாப் ராஜ்யத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பத்தைப் போக்கி ஒரு ஸ்திர நிலையை ஏற்படுத்தினார். ஜனநாயகத்தில் தனிமனிதனுடைய ஆற்றலோ, ஆள்பலமோ அவசியமும் இல்லை, நிலைக்கவும் முடியாது என்பதை ஒரு சாதாரண மனிதரை அந்த ராஜ்யத்தின் முதல் மந்திரியாக தேர்ந்தெடுத்திருப்பதின் மூலம் தலைவர் காமராஜ் நிரூபித்துவிட்டார். அது நமது தலைவரின் பாராட்டத்தக்க அரசியல் ராஜதந்திரமாகும்.

இன்று நமது நாட்டிலுள்ள பிரச்னைகள் பல. காஷ்மீர் பிரச்னை, மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள், உள்நாட்டு பிரச்னைகள் இவற்றை எல்லாம் ஆழ்ந்த கருத்துடன் ஆலோசித்து முடிவு செய்யும் திறமை வாய்ந்த தலைவர் காமராசர் தான் என்று இந்திய மக்கள் பரிபூரண நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். எல்லாவற்றிற்கும் இறைவன் அருள் புரிவாராக.

### தமிழன்னையின் பிரதிநிதி !

உடம்பிலே உள்ள உஷ்ணத்தைத் தெரிவிக்க கருவி இருப்பது போல மக்கள் மனதில் இருக்கிற ஆசாபாசம் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும் சக்தி காமராஜ் அவர்களுக்கு இருக்கிறது. வடநாட்டுக் காரர்கள் காமராஜ் அவர்களுடன் உரையாட வேண்டும் என்பதற்காக தமிழ்க் கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். இன்று தமிழ் அன்னை காமராஜ் மூலமாக பாரத நாட்டில் வீற்றிருக்கிறார்கள். காமராஜ் சொன்னாலும் புரிந்து கொள்வார், சொல்லாவிட்டாலும் புரிந்து கொள்வார்.

—ஒ. வி. அளகேசன்

# இந்த நூற்றாண்டின் ராஜதந்திரி



அசோக் மேத்தா

காமராஜர் சிறந்த சமுதாய உழவர். கீழே உள்ள மண்ணை மேலே கொண்டு சென்று ஆழ உழுதால் விளைச்சல் பெருகும். அதுபோன்று சமுதாயத்தின் அடித்தட்டில் உள்ள மக்களை மேலே கொண்டு வரப் பாடுபடும் சமுதாய உழவர் காமராஜ். அவர் இந்த நூற்ருண்டின் ராஜதந்திரியும்கூட.

ரஷியாவுக்கு ஒரு லெனின். பிரான்சிற்கு ஒரு டி—காலே. அதுபோன்று பாரதத்திற்கு நமது தலைவர் காமராஜ்.

புரட்சிகரமான சோஷலிச சமுதாயத்தை அமைக்க நம்மிடையே கட்டுப்பாடு வேண்டும். கட்டுப்பாடில்லாத வெறும் புரட்சி வெடித்துவிடும். கட்டுப்பாடுடன் நம்மை அழைத்துச் செல்ல காமராஜர் கிடைத்திருக்கிருர். அவர் கட்டுப்பாட்டின் இலக்கணம்.

நமது சமூகப் புரட்சியின் வரலாற்றில் அடுத்த 10 ஆண்டுகள் நெருக்கடியான காலமாக இருக்கும். இந்தக்காலம் 1947—ம் ஆண்டிற்கு முந்திய விடுதலைப் போராட்ட காலத்தை விடக் கடினமாக இருக்கும்.

கம்யூனிஸ்ட் நாடுகளில் அல்லது சர்வாதிகார நாடுகளில் அல்லது ஓரளவு வாம்புக்குட்பட்ட ஜனநாயக நாடுகளில் சமூகப் புரட்சியை ஏற்படுத்துவது எளிது. ஆனல் இந்தியா புரட்சியை மக்களின் சம்மதத்துடனும், ஒத்துழைப்புடனும்தான் ஏற்படுத்த விரும்புகிறது. இந்தியாவில் இந்த மாற்றத்தை மக்களே செய்வர். அதனுல்தான் ஜனநாயக சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிருேம்.

தேங்கிய நிலையிலிருந்து புரட்சிகரமான மாறுதலை நோக்கிச் செல்ல மக்கள் விரும்புகிருர்கள் என்பதை காமராஜர் அறிவார். நாங்கள் ஏன் காங்கிரசுக்குத் திரும்பி வந்தோம்? ஏனெனில் பொறுப்பு மிகப் பெரியது என்பதை உணர்ந்துவிட்டோம். பொறுப்பில் பங்கு கொள்ளுமாறு காமராஜ் சோஷலிச சக்திகளுக்கு அழைப்பு விடுத்ததும் அவருடன் ஒத்துழைக்க நாங்கள் விரும்பினேம்.

மக்கள் சக்தியில் நம்பிக்கை கொண்ட காமராஜ் நெருக்கடியான காலங்களில் வழி காட்டுவார் என்ற நம்பிக்கை உண்டு. 21-வது நூற்ருண்டின் சிற்பி காமராஜர். 21-வது நூற்ருண்டுக்காக சிந்தித்துப் பாடுபடும்படி காமராஜரை காலம் கேட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த நூற்ருண்டின் தேவைகளையும், விருப்பங்களையும் பற்றி காமராஜர் சிந்திக்க வேண்டும். அதற்கான அடித்தளத்தை இப்போதே அமைக்க வேண்டும்.

இந்த ஆண்டு உலகின் இருபெரும் ராஜதந்திரிகளை இழந்தோம். ஆனல், அதே சமயத்தில் ஒரு அரும் பெரும் ராஜதந்திரியை சரித்திரம் பெற்றுவிட்டது. அவர்தான் நமது தலைவர் காமராஜ்.

மலை ஏறி உச்சியை அடைவதில் பல கஷ்டங்கள் உண்டு. ஆனல், மலை ஏறும்போது முதல் கட்டம் சுலபமாக இருக்கும். அதற்கு அடுத்த கட்டம் சிறிது கடினமாக இருக்கும். முதல் இரு கட்டங்களையும் சுலபமாக நாம் நேருவின் தலைமையில் கடந்துவிட்டோம். இப்போது கடினமான கட்டத்தில் இருக்கிருேம். இந்த கட்டத்தில்தான் தலைவர் காமராஜ் நம்மை அழைத்துச் செல்லும் வழிகாட்டியாக விளங்குகிருர். மலையின் சிகரத்தை அடைந்துவிடுவோம் என்பது வழிகாட்டியின் திடமான நம்பிக்கையாகும். அதனுல்தான் காமராஜரின் விழாவை ஜனநாயக சோஷலிச விழாவாகக் கொண்டாடுகிருேம்.

## அதில் என்ன தப்பு?

சமதர்மத்தில் என்ன கெடுதல் இருக்கிறது? பட்டினியாக இருப்பவர்கள் எத்தனை நாளைக்கு இப்படியே இருப்பது? ஒரு சிலர் செல்வத்திலும், பலர் சாப்பிடக்கூட இல்லாத நிலைமையிலும் இருக்கலாமா? இந்த வேறுபாடு போய் எல்லோரும் சமமாக இருக்க வேண்டும். என்பதுதான் சமதர்மம். அதில் என்ன தப்பு? —காமராஜ்


தங்கை பேரர்களுடன் தலைவர்




இதயம் குளிரும் "உதயம்" விருந்



பெற்றதாயுடன் பாரதத்தலைவன்








'பூ'பாரம் தாங்கும் புதுமைத்தலைவன்!



வழிகாட்டியி வழிகாட்டி



# இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பவர்

எஸ்.கே.பாடீல்

இந்த நாட்டின் மிகப் பெரிய தலைவரின் பிறந்த தின விழாவில் கலந்துகொள்வதில் பெருமைப்படுகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், தமிழக முதல் அமைச்சராகவும் காமராஜர் ஆற்றிய பணிகளைக் குறித்து முதல் அமைச்சர் பக்தவத்சலம் சொன்னவைகளை மொழிபெயர்த்துக் கேட்டேன்.

தமிழக முதல் அமைச்சர் பதவியைத் துறந்தபோது அவரது புகழ் மேலும் ஓங்கி வளர்ந்தது.

அவர் தமிழகத்தின் தலை விதியை மட்டும் நிர்ணயிப்பவர் அல்ல, இந்தியாவின் தலை விதியை நிர்ணயிப்பவராக காமராஜர் இருக்கிறார்.

**காந்திஜி இறந்தபோது அவரிடம் பயிற்சி பெற்ற நேரு, படேல் போன்றவர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியம் நமக்கு இருந்தது. அவர்கள் காட்டிய வழியில் நாடு முன்னேறியது.**

நம்முடைய நேரு மறைந்தபோது உண்மையிலேயே நாம் ஆதரவற்ற அனாதைகளாக இருந்தோம். நேருவுக்குச் சமமான தலைவர் இல்லாமல் இருந்தோம்.

அந்த நெருக்கடியான நேரத்தில் காமராஜர் பொறுப்பேற்று ஜனநாயகத்தை நிலை நாட்டினார். ஜனநாயகம் என்றும் இந்த நாட்டில் நிலைத்து நிற்கும் என்பதைக் காட்டிவிட்டார்.

மற்ற நாடுகள் சுதந்திரம் பெற்று பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கும் நேரத்தில் இந்தியா சுதந்திரம் பெற்று 17 ஆண்டுகள்தான் ஆகி இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் நேருவுக்குப் பிறகு புதிய பிரதமரை எந்த வகையில் ஜனநாயக முறைப்படி தேர்ந்து எடுக்கப்போகிறோம் என்ற அச்சம் இருந்தது.

காமராஜர் யாரைக் குறிப்பிட்டாரோ அவரை நாங்கள் ஏக மனதாக தேர்ந்து எடுத்தோம். அத்தகைய அரும் பெரும் சாதனையைச் செய்தவர் காமராஜர்.

மிகவும் நெருக்கடியான நேரத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக ஆனார். இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு அவரிடம் வந்தது. நெருக்கடி நேரத்தில் காமராஜர் தலைமை ஏற்றிராவிட்டால் என்ன கதி ஆகியிருக்குமோ?

காமராஜரின் பணி இன்னமும் முடியவில்லை. அவர் இன்னும் பல்லாண்டுகள்-100 ஆண்டுகள் வாழ்ந்து நாட்டுக்கு வழிகாட்ட வேண்டும்.

காமராஜர் தலைமை ஏற்ற பிறகு ஜனநாயக சோஷலிசத்தை அமைக்கக் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. அதற்காக தம்மையே அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்.

காமராஜர் இந்த நாட்டில் உள்ள 45 கோடி மக்களுக்கும் 22 கோடி வாக்காளர்களுக்கும் தலைவர். அப்படிப்பட்ட தலைவர் இன்னும் பல ஆண்டுகள்—100 ஆண்டுகள் திடகாத்திரத்துடன் வாழவேண்டும்.

### தேவையே
### முன்னேற்றத்தின் அறிகுறி

எப்பொழுதும் தேவை ஏற்படுவது வளர்ச்சிக்கு அடையாளம். முன்பெல்லாம் கிராமங்களில் சட்டைத் துணி போடமாட்டார்கள். இப்பொழுது அப்படியில்லை. எல்லோரும் சட்டை போடுகிறார்கள். ஆகவே நிறைய துணி வேண்டியிருக்கிறது. துணிகளைத் தயாரிக்க ஆலைகள் வைக்க வேண்டும். ஆகவே தேவை ஏற்படுகிறதென்றால் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

—காமராஜ்

திரு. காமராஜ்

அவர்களுக்கு

எங்கள் நல்வாழ்த்துக்கள்!

# முருகன் டிரான்ஸ்போர்ட்

கடலூர் என். டி.

Telephone:

Office: 84 Residence: 11

உரிமையாளர்: **M. முருகேசன்**

தென்னாற்காடு மாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளாக ரஸ்தா பிரயாணிகளுக்கு சிறந்த முறையில் சேவை செய்து வருவதோடு தற்போது வட ஆற்காடு, தஞ்சை மாவட்டங்களிலும் ரஸ்தா பிரயாணி களுக்கு சிறந்த சேவை செய்து வருகிறது.

★

பாண்டிச்சேரியிலிருந்து காரைக்காலுக்கு

(கடலூர் - பரங்கிப்பேட்டை - சிதம்பரம் - சீர்காழி மாயூரம் - கொல்லுமாங்குடி - நெடுங்காடு வழியாக) நேர் பஸ் போக்குவரத்தும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

# காந்தி, நேருவுக்கு அடுத்தபடி காமராஜ்



முதலமைச்சர் எம். பக்தவத்சலம்

முதலமைச்சர் திரு, எம். பக்தவத்சலம் அவர்கள் நீண்ட நெடு நாட்களாக தலைவர் காமராசருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். காங்கிரஸ் கட்சியில் போட்டியும் பூசலும் ஏற்பட்ட காலங்களில் கூட அவர் தலைவர் காமராசருக்கு எதிரணியிலும், காமராசரது அணியிலும் மாறி மாறி இருந்து எதிர்த்தும், ஆதரித்தும் நின்று நெருங்கிப் பழகியவர். அவ்வப்போது ஏற்பட்ட கட்சி விவகார விஷயங்களில் காமராசருடன் மாறுபட்ட கருத்துக்கள் இருந்திருப்பினும் திரு, பக்தவத்சலம் அவர்கள் ஒரு நிகரற்ற தேசியவாதி, தீவிர காங்கிரஸ்காரர். தலைவர் காமராசர் அவர்களை இன்று ஒப்பற்ற தலைவராக காண்பவர். எனவே அவர்கள் காமராஜ் அவர்களை காந்தி, நேருவுக்கு ஒப்பிட்டுச் சொல்லி யிருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

காந்தி, நேருவுக்கு அடுத்தபடி பெரும் தலைவர் காமராஜ். நமது தலைவர் காமராஜர் 45 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து நாட்டுக்காகப் பாடுபட்டு வருகிறார். ஓய்வு, அயர்வு, தன்னலம் இல்லாமல் நாட்டு மக்கள் நிலை உயர வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் பாடுபட்டு வருகிறார். அதுதான் காமராஜரின் பெருமை.

தமிழகத்தில் பல சாதனைகளைச் செய்தார். வறுமையையும் அறியாமையையும் ஒழிக்க பல திட்டங்கள் போட்டு நல்வழி காட்டினார். அப்படிப் பட்டவர் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஆகியிருக்கிறார். இன்று அகில இந்தியாவும் காமராஜரை எதிர்நோக்கி நிற்கிறது.

நமது பிரச்னைகள் அனைத்தும் தீர காமராஜர் மீது முழு நம்பிக்கை வைக்கவேண்டும். இன்று அவர் உலகம் போற்றும் தலைவராக இருக்கிறார். நேரு மறைந்த பிறகு எப்படி சமாளிக்கப்போகிறோம் என்று தவித்த நேரத்தில் காமராஜ் தலைமை கிடைத்தது. துரதிர்ஷ்டத்திலும் பேரதிர்ஷ்டம் இருந்தது.

ஜனநாயக சோஷலிசம் பற்றி பேசினல் மட்டும்போதாது. அதன் தத்துவத்தை உணர்ந்து நிறைவேற்றவேண்டும். ஜன நாயகசோஷலிச தத்துவத்தை காமராஜர் நன்கு உணர்ந்தவர். மக்களின் நாடியை, மனோபாவத்தை நன்கு உணர்ந்தவர். இன்னும் சில ஆண்டுகளில் ஜனநாயக சோஷலிச லட்சியத்தை நிறைவேற்றும் ஆற்றலைக் கொண்டவர்.

காமராஜரின் ஒப்பற்ற ஆற்றலை ஒரு சில சம்பவங்களை வைத்து எடுத்துக் காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பிரச்னைகளை நுட்பமாக உணர்ந்து அவைகளுக்குத் தீர்வு காணும் சிறந்த ஆற்றல் திரு. காமராஜுக்கு உண்டு. இத்தகைய ஆற்றல் மிகுந்தவர் அதிகம் பேசுவதில்லை என்பது ஆச்சரியமானதுதான் குறைவாகப் பேசுவதே சிறந்த ஒரு அரசியல்வாதியின் இலக்கணம் ஆகும்.

பிரதமர் நேரு சென்ற மே 27-ந் தேதி மறைந்தார் என்ற அதிர்ச்சி ஒருபுறம் இருக்க, அதனல் ஏற்பட்ட நிலைமையை எபபடிச் சமாளிக்கப் போகிறார்கள் என்ற கவலை எலலோரையும் சூழ்ந்துகொண்டது. நமது நாட்டுக்கு வெளியேயும் இந்த கவலை இருந்தது. ஆனல் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே திரு. காமராஜ் நிலைமையைச் சமாளிக்க முன்வந்த முறை அவரிடத்தில் உள்ள தனிப்பெரும் நம்பிக்கையை அதிகப்படுத்தியது.

**விடுதலைப் போரில்....**

சரித்திர முக்கியத்வம் வாய்ந்த இந்த நிகழ்ச்சி நமது சிந்தனையை சுதந்திரப் போராட்ட காலத்துக்கு இழுத்துச் செல்கிறது. 1942-ல் நடைபெற்றசோதனையை நினைவூட்டுகிறது.

1942 ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்குப் போயிருந்தோம். "வெள்ளையனே! இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மறுநாள் காலை நாங்கள் காந்திஜியைச் சந்திக்க செல்லவிருந்தோம். விடியற்காலையிலேயே காந்திஜி போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு எட்டிவிட்டது.

நாங்கள் அந்த நிலையில் சென்னைக்குப் புறப்பட்டோம். வெளியே தலைவர்கள் கைது செய்யப்படும் செய்திகள் வந்து கொண்டிருந்தன. நாங்களும் கைதாகாமல் சென்னைக்குத் திரும்பிவிடுவோம் என்ற நம்பிக்கை இல்லை.

முன் தயாரிப்பு இல்லாமல் இந்த இறுதி இயக்கம் துவங்கிவிட்டது என்பதை அப்போது உணர்ந்தோம். "எப்படி இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தப் போகிறோம்" என்ற கவலை திரு. காமராஜுக்கும் ஏற்பட்டது. 'கடவுள்தான் உதவி செய்யவேண்டும்' என்று அவர் கூறினர். அப்படிச் சொன்னதோடு அவர் சும்மா இருந்துவிடவில்லை. அரக்கோணம் ஸ்டேஷனிலேயே இறங்கினர். தன்னல் இயன்ற அளவு கவனம் செலுத்திவிட்டு ஒரு வாரத்திற்குள் எங்களோடு சிறையில் வந்து சேர்ந்துவிட்டார்.

**ராஜாஜி விவகாரம்**

இந்தச் சிறைவாசம் முடிந்து 1945-ல் வெளிவந்ததும் ராஜாஜி சம்பந்தப்பட்ட கட்சிப் பிரச்னை காத்திருந்தது. அதையும் திரு. காமராஜ் சமாளிக்கவேண்டியிருந்தது. நுட்பமாக இதையும் அவர் சமாளித்தார்.

1949-ல் சட்டசபை பொதுத் தேர்தல் நடத்தி மந்திரி சபையும் அமைக்கவேண்டியிருந்தது. இதையும் திறம்படச் செய்து சென்னை மாநில பிரதிநிதிகள் எல்லோருடைய மதிப்பையும் திரு. காமராஜ் பெற்றிருக்கிறார்.

**வெறும் உழைப்பல்ல**

சுதந்திரப் போராட்டத் தொடக்கத்தில் இருந்து தொடர்ந்து பங்கெடுத்துக் கொண்டு அதுபற்றிய நுட்பமான கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு சில தலைவர்களுள் திரு. காமராஜும் ஒருவர். தலைவர்களுள் அவர் சிறந்த தலைவர்.

பிரச்னைகளை நன்ருக ஆராய்ந்து தீர்வு காணும் வகையில்தான் அவரது உழைப்பு அமைந்திருக்கிறது. பிரச்னைகளை நுட்பமாகக் கிரகித்துக் கொள்வதோடு தமது பல்வேறு அலுவல்களுக்கிடையே பல நூல்களைப் படித்து உணர்ந்து பிரச்னைகளை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய அற்புதமான ஆற்றல் அவருக்கு உண்டு.

மாற்றிலாப் பொன் மனத்தான் மாசிலாக் குணமிகுத்தான்
வேற்றுமை யெல்லாம் இந்த வீரனைக்கண்டால் வீழ்ந்து
ஆற்றிடும் கடமை காணும் அன்புள்ள ஊழியர்க்கு
காற்றினைப் போல வந்த **காமராஜ் அண்ணல் வாழ்க !**

# தேவர் பிலிம்ஸ்

17, டாக்டர் நாயர் ரோடு,

சென்னை - 17.




கோட்டை அதிகாரம் கொடிகள் கௌரவங்கள்
கூடிய பட்டாளக் கூட்டமெல்லாம்
நாட்டைக் காக்காவிட்டால் நமக்கினி ஏதென்று
நல்லவன் வல்லவன் வந்துவிட்டான்!
பாட்டன்பாட்டி தந்த பட்டயம் என்றெண்ணி
பட்டம் பதவிக்குச் சண்டையிட்டார்
போட்டி மனிதரின் போக்கினை மாற்றிட
புதிய வழியொன்று காட்டவந்தான்!
பட்டணச் சீமானும் படியாத சுப்பனும்
பாரில் சமதர்மம் பேச வைத்தான்!

பட்டிக் காட்டான் வேதனை நீக்கிட
பங்காளி ஓடோடி வந்துவிட்டான்!
சட்டமும் திட்டமும் சர்க்கார் சலுகையும்
சனங்களுக்கே அன்றி யாருக்கென்று?
தட்டியே கேட்டு நம் தலையை நிமர்த்திட
தம்பிரான் நம்பிக்கை தந்து விட்டான்!
பட்டம் பதவிகள் மந்திரி வேலைகள்
சட்டை பழசென்று தள்ளிவிட்டான்
தட்டிக்கதர் துண்டை தோளில் போட்டுக்கொண்டு
தெருவுக்கு நம்பக்கம் வந்துவிட்டான்!
கத்திக் கத்திச் சும்மா ஊரைச் சுத்திவந்தால்
கல்யாண சாப்பாடு வந்திடுமா?
சத்தியமாகவே செயல்புரிவோம் என்று
கச்சை கட்டிக்கொண்டு வந்துவிட்டான்!
சாந்தி தவழ்ந்திட சக்தி பெருகிட
செல்வத் தொழில் யாவும் ஓங்கிடவே,
காந்திமகான் கண்ட கிராமத்து ராஜ்ஜிய,
காமராஜ் மன்னவன் வந்துவிட்டான்!
பண்டித நேருவின் இலட்சிய எல்லையை
புதிய சமதர்ம ஜோதியினை
பாரத மெங்கிலும் பூரணமாக்கிட
பாரத ரத்தினம் வந்துவிட்டான்!
ஆழக்கடல்போல சிந்தனையான்—செயல்
ஆடும்புயல் போல ஆயிரமாம்!
ஆடாத மாமலை போலவன் நெஞ்சத்தின்
ஆழத்தை யாரேனும் கண்டதுண்டா?
ஏழை ஊழியரின் ஏகப் பிரதிநிதி
எங்கள் தோழன் அண்ணன் வாழியவே
ஏழேழ் பிறவிக்கும் இந்தியர் எண்ணத்தில்
இமயத்து வான்புகழ் வாழியவே!

# மாறுபட்ட தலைவர்

இந்தியா தேசம் சுதந்திரமடைவதற்கு முன்பு, காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கு இருந்த மகத்துவம் மிகப் பெரிது. தலைவர்களுக்கெல்லாம் தலைவர், ஆற்றல் மிக்கவர், கட்சி விவகாரங்களிலும் தேசிய நடவடிக்கைகளிலும் இறுதி முடிவு சொல்ல வல்லவர் என்பதால் அப்பதவிக்கு இருந்த மரியாதை மிக அதிகமானது. நாடு சுதந்திரமடைந்த பிறகு, காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கு உரிய—ராஷ்டிர பதி பதவிக்கு உரிய—ஒளிப் பிரகாசம் கொஞ்சம் குறைந்தது, ஆனால் நேருஜி மறைவுக்குப் பின்பு, அப்பதவி மீண்டும் தன் பழைய மகிமையை எய்திவிட்டது.

தலைவர் கர்மராஜ் மற்ற தலைவர்களிலிருந்து மாறுபட்டவர். ஆக்ரோஷமான பேச்சோ, சிறியதைப் பெரிதாக்கும் அமர்க்கள மனோபாவமோ, நடுநாயகமானவர் என்று தம்மைக் காட்டிக் கொள்ளும் பான்மையோ இவரிடம் கிடையாது. இவர் சாமானிய மக்களின் தலைவர். சாதாரணமான பட்டிக்காட்டு ஆசாமி போல ஆஜானுபாகுவான தோற்றம். வலிமையான உடல் கட்டு; கிராமவாசிகளுக்கே உரிய பெருந் தன்மையான தோற்றம். சாதாரணமாக மனதை அலட்டிக்கொள்ளாத மனத் திட்பம் ஆகியவை அவரை பாமர மக்களின் தனிப்பெருந் தலைவராகக் காட்டுகின்றன.



நான்கு முழ வேஷ்டி, சற்று தளக்கமான அரைக்கைச் சட்டை, ஒரு துண்டு ஆகியவைகளோடு காட்சி தரும் அவர், சுமாரான வசதி உள்ள ஒரு குடியானவனைப்போலத் தான் தெரிகின்றார். ஆனால் இந்த சர்வ சாதாரணத் தன்மைதான் ஜனங்களின் உள்ளங்களை அவர்பால் கவர்கின்றது; அவர் பெரிய படிப்பாளி அல்ல, பட்டம் பெற்றவர் அல்ல, இருந்தும் அவரால் நாட்டு ராஜரீகத்தை எப்படி நடத்த முடிகிறது என்று பலர் வியந்தனர்.

ஆனால் படிப்பைவிடப் பெரியது அவரிடம் இருக்கிறது. சூட்சுமமான மதி நுட்பம் இருக்கிறது. சுத்த சுயம் பிரகாசமான இயற்கை அறிவு நிரம்பி இருக்கிறது. படிப்பினால் கிடைப்பதைவிட அதிகமான கிரகிப்பு சக்தியை அவர் பெற்றிருக்கிறார். அனுபவத்தினால், மற்றவர்கள் பெறுவதைவிட அதிகமான ஆழமான படிப்பினைகளை அவர் உணர்கின்றார். பல லட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களைத் துருவிப் பார்க்கிறார். அவர்களுடைய ஆசாபாசங்கள் அவருக்கு நன்கு தெரியும். மற்ற யாருக்கும் தெரிவதைவிட அதிகம் தெரியும்.

அவர் அதிகம் பேசுவதில்லை. ஆனால் கொஞ்சமாகப் பேசினாலும் அவருடைய பேச்சுக்கு, வாதத்துக்கு கவரும் வலிமை உண்டு. சில சொற்கள் மூலமே அவர் தம் கருத்துக்கு ஆதரவாக மக்களைத் திருப்பிவிடுகிறார். அது எதனால் முடிகிறது. உள்ளம் சுத்தம், உள்ளத்தில் ஒளி உண்டாவதினால் வாக்கில் ஒளி உண்டாகிறது. வர்ணனைகள், அலங்கார வார்த்தைகள் அவருக்குத் தேவைப்படுவதில்லை. செயல் புரியத் தெரியாதவர்கள்தான் மக்களை, வார்த்தை ஜாலத்தாலேயே மயக்கிக் கொண்டிருக்க வேண்டும். காமராஜ் அவர்களுக்கு அது அவசியமில்லை.

மனத் திட்பத்தில் காமராஜ், சர்தார் பட்டேலை நினைவூட்டுகிறார். குதர்க்கப் பேச்சும், வளவளவென்று போகும் வாதப் பிரதிவாதங்களும் பிடிக்காது. எந்த நிலைமையையும், எந்தப் பிரச்சினையையும் அதன் கேந்திராம்சத்தை வைத்து சடாரென்று புரிந்துகொள்ளுவார். பிரச்சினைகளைப் போட்டு குழப்பமாட்டார். அவசரப்படமாட்டார். வீண் மனோராஜ்யங்களும் செய்துகொள்ள மாட்டார்.

காமராஜ் அவர்கள் அரசியல் போராட்டத்தில் மன்னன். கட்சி யந்திரத்தை அற்புதமாக இயக்கத் தெரிந்தவர். இந்த விஷயத்தில் சர்தார் பட்டேலை விடவும் திறம் மிகுந்தவர்.

—“இல்லஸ்ட்ரேடட் வீக்லி”



# வேந்தனுக்குரிய வேலை! துறவிக்குரிய வாழ்க்கை!

பாரதத் தலைவர் காமராசர் நாட்டின் பாது காவலராக அல்லும் பகலும் உழைத்து வருகிறார். ஆனால் அவரது சொந்த நலனை பாது காக்க அவருக்கு என்று ஒரு குடும்பமோ, மனைவி மக்களோ இல்லை. இந்த இல்லாத குறையை இல்லாமலாக்கும் பணியை திரு. வைரவன் செவ்வனே செய்து வருகிறார். நாட்டை கண்ணும் கருத்துமாக காத்து வரும் அவரை வைரவன் காத்து வருகிறார். அவர் தலைவரைப்பற்றிச் சுவைபடச் சொல்வதைப் படியுங்கள்.

ஆட்சித் தலைவராக இருப்பவர் துறவியாக இருத்தல் சிறப்பு என்பது அரசியல் ஞானக் கொடு முடியான பிளாட்டோ அவர்களின் கருத்து. அவர் சொன்ன இலக்கணத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளக்குகிறது தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கை.

உணவு உடை, பேச்சு போன்ற எதிலுமே தலைவர் காமராஜ் எளிமையையும் சிக்கனத்தையுமே விரும்புவார்கள். ஆனால் கஞ்சத்தனத்தை விரும்பமாட்டார். அவர் முதல் மந்திரியாக இருந்தபோது வாங்கிய சம்பளத்தில் பெரும் பகுதியை உதவி நாடி வந்த ஏழைகளுக்கே கொடுத்து உதவினர். வீட்டுச் செலவு மாதம் 250 ரூபாய்க்கு மேல்போகாது' விருது நகரில் உள்ள' தமது அன்னையாருக்கு மாதம் 120 ரூபாய் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மீதியுள்ள பணத்தைப் பிறருக்குக் கொடுத்து உதவுவதிலேயே செலவிடுவார்கள். சிக்கனமாக வாழ்ந்து பிறருக்கு உதவுகிறார். உதவி பெறும் தகுதியுடைய ஏழைகள் வந்து ஒரு நாளும் வெறுங் கையோடு திரும்பியதில்லை.

தலைவர் அவர்கள் காலையில் தூங்கி எழுந்ததும் ஒரு கப் காபி; பகல் 12 மணிக்குச் சாப்பாடு; மாலையில் ஒரு கப் காபி; இரவில் இட்டிலியும் பாலும், இதற் கிடையில் அதிகப்படியாக காபி சாப்பிடுவதோ காலையிலும் மாலையிலும் சிற்றுண்டி சாப்பிடுவதோ கிடையாது.

## புத்தாடை உடுத்தியதில்லை

தீபாவளியின் போது கூடப் புது வேஷ்டி உடுத்துவது கிடையாது. ஆனால் வீட்டில் உதவிக்கு இருக்கும் மற்றவர்களை புது ஆடைகள் வாங்கிக்கொள்ளச் சொல்வார்.

இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை அவர் சட்டைகள் தைத்துக்கொள்வார். புதிய உடை

களை சலவைக்குப் போட்ட பின்பே உடுத்து வார். சட்டை வேஷ்டிமேலே மடித்துப் போட்டுக் கொள்ளும் அங்க வஸ்திரம் இதுதான் சென்ற 35 வருஷங்களாக அவர்கள் உடை. இதைத் தவிர அவர்கள் வேறு உடைகள் அணிவதில்லை.

காலையில் எழுந்ததும் ஒரு கப் காபி சாப்பிட்டு விட்டு, பத்திரிகைகள் படிப்பார். எல்லாத் தினசரிப் பத்திரிகைகளையுமே புரட்டிப் பார்ப்பார் ஒரு பத்திரிகையில் எல்லாச் செய்திகளையும் முழுக்கப்படித்து விட்டு மற்றப் பத்திரிகைகளில் தலைப்பு, தலையங்கம் பார்ப்பார்.

தம்முடைய அலமாரியையோ, பெட்டியையோ அறையையோ பூட்டுவது கிடையாது. கூட இருப்பவர்கள்தான் பாதுகாப்புக்காகப் பூட்டிவைப்பது வழக்கம் மாடிக் கதவு திறந்தே கிடக்கும் தமக் கென்று இந்த அகில இந்தியத் தலைவர் வைத்திருப்பவை உடைகள், உடைகள் வைக்க ஒரு பெட்டி,வெளியூருக்குப் போகும்போது கொண்டு செல்லும் ஒரு படுக்கை, ஷேவிங்ஸெட், சோப் பல் பிரஷ் ஒரு பேனு, ஒரு சிறு மேஜைக் கடிகாரம், ஒரு மூக்குக் கண்ணுடி ஆகியவைதான். டில்லி முதலிய வெளியூர் போகும்போது தவிர சட்டைப் பையில் அவர் பணம் வைத்துக் கொள்வதே இல்லை. தலைவருக்கு ஞாபகசக்தி மிகவும் அதிகம். வெகு நாட்களுக்கு முன்பு பார்த்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த வரைக்கூட மறக்கமாட்டார். மேஜைமேல் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் யாராவது சிறிது கலைத்து வைத்திருந்தாலும் அவர் கண்டு பிடித்து விடுவார். சொற்பொழிவுக்காகக் குறிப்புக்கள் தயாரித்து வைத்துக் கொள்வதும் இல்லை. படித்த விஷயங்களை ஞாபகத்தில் பதிய வைத்துக் கொண்டு சொற்பொழிவின் போது அவற்றை எடுத்துரைப்பது தான் வழக்கம்.

சுற்றி வளைத்துப்பேசி நேரத்தை வீணக்குபவர்களைக் கண்டால் தான் காமராஜ் அவர்களுக்கு மிகச் சங்கடமாக இருக்கும். சுருக்கமாக நேரிடையாக விஷயத்தைச் சொன்னுல் போதும். சொல்லுபவன் முகக் குறிப்பிலிருந்தே பிரச்னையின் ஆழம் நீளம் கனபரிமாணத்தைக் கண்டு பிடித்து, அதை நீக்குவதற்குரிய மார்க்கத்தையும் மின்னல் வெட்டுவது போலச் சொல்லிவிடுவார்.

காமராஜ் ஒரு ஞானம் மிகுந்த துறவித் தலைவர். ஆனுல் பாரத நாட்டுக்கு அவரே ஒரு பொக்கிஷம் போன்றவர். அவருக்குவேந்தனுக்குரிய வேலை ஆனுல் துறவிக்குரிய வாழ்க்கை!!


# நேருஜி வாழ்க்கை வரலாறு

(சம்பந்தம் எதிமுயது)

விலை ரூபாய் இரண்டு

வெளியிட்டோர் :

## வானதி பதிப்பகம்

82/11, பாண்டி பாஜார், தி. நகர் சென்னை - 17.

தொலைபேசி : 42810




திட்டமும் செயலும்



தலை
சீடர



நேருவும் வாரிசும்



தனியார் துறையும்
மக்கள் துறையும்




கம்யூனிச சோஷலிசமும்
ஜனநாயக சோஷலிசமும்




அரசியல் துறவியு
இல்லற துறவியு

பாரதக் காமராஜும்
பம்பாய் காமராஜும்



நேருக்கு நேர்





தொட்டது து





# ராமராஜரும் காமராஜரும்

திருமுருக கிருபானந்தவாரியார்

அருள் மொழி அரசு திரு முருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. இன்று நல்ல தூய தமிழில் அதுவும் தேன் சிந்தும் அழகு நடையில் நளினமும் நகைச் சுவையும் ததும்ப அருள் மழை பொழிந்து வரும் தெய்வத் திருமகனார் வாரியார் அவர்கள் நம் தமிழகத்தின் தவப் புதல்வர் திரு காமராஜரை ராமராஜருக்கு ஒப்பிட்டு எழுதியிருக்கும் இந்த கட்டுரை அமுதத்தை என்னென்று சொல்வது? படித்துப் பாருங்கள் !

உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் உயர்ந்து வாழ வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்.

உயர்வு பெறுவதில் பல வகையுண்டு. பதவியில் உயர்வது; படிப்பில் உயர்வது; செல்வத்தில் உயர்வது ; நிலபுலத்தில் உயர்வது ; சொல்லால் உயர்வது ; எழுத்தால் உயர்வது ; ஓவியத்தால் உயர்வது; காவியத்தால் உயர்வது ; இப்படி பல வகையில் உயர்வு பெறுகின்றார்கள். இந்த உயர்வு எல்லாவற்றிலும் சிறந்த உயர்வு எது தெரியுமா ?

உள்ளத்தால் உயர்வு பெறுதலே சாலவும் சிறந்தது ஆகும்.

வள்ளுவப் பெருந்தகையார் கூறுகின்றார்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம்: மாந்தர்தம்
உள்ளத் தனைய துயுர்வு.

வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும் ; அதுபோல் உள்ளம் உயர்ந்தால் மனிதன் உயர்வான்.

உள்ளம் உயர்வது என்றால் என்ன ? எல்லோரும் வாழவேண்டும் என்று எண்ணுகின்ற உள்ளந்தான் உயர்ந்த உள்ளம்.

(1) உள்ளத்தால் உயர்ந்தவர் இராமர். இராமர் திருவீதியில் உலாவும்போது, ஒரு ஏழை எதிரில் வந்தால் இவரே முன் மொழிபவராக "ஐயா! நலமா? வீட்டில் அம்மா! அப்பா நலமா? உங்கட்கு என்ன வேலை? உங்கட்கு ஏதாவது செய்ய வேண்டுமா ?" என்று பூர்வபாஷியாகக் கேட்பார்.

எதிர்வரும் அவர்களை எனையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர
எதுவினை! இடரிலை: இனிதுநும் மனையும் ?
மதிதரு குமரரும் வல்லியர் கொல்? எனவே,

இராமரைப் போல் காமராஜரும் தம்மைச் சந்திப்பவரிடம் முன்மொழிபவராக. முகமும் அகமும் மலர்ந்து, பொன்னுரை போல் இன்னுரை பகர்வார்.

காமராஜர் முதலமைச்சராகப் பல வருடங்கள் அரும்பணி புரிந்தார்.

ஒரு நாள் இரவு நான் முதல் வகுப்பு வண்டியிலேறி இரவு 2-30 மணிக்கு மாயூரத்தில் ரயிலை விட்டிறங்கினேன். அடுத்த பெட்டியில் பிரயாணம் புரிந்த காமராஜரும் இறங்கினார். நான் அவரைப் பார்க்கவில்லை. நான் என்னுடைய பூஜைப் பெட்டி

முதலிய சாதனங்களை இறக்கிவைத்து போர்டரைப் பார்த்து நின்றேன்.

காமராஜரை வரவேற்கப் பெரும் பெரும் அதிகாரிகள் பெரிய மனிதர்கள் பலர் திரண்டு நின்றார்கள்.

புகை வண்டியை விட்டு இறங்கிய காமராஜ் சிறிது தொலைவில் நின்ற என்னைக் கண்டு, அங்கிருந்து விரைந்து வந்து, "ஐயா! எங்கு போகின்றீர்கள்?" என்று அன்புடன் வினவினர். அப்போது அங்குள்ள எல்லோரும் என்னைத் திரும்பிப் பார்க்கலானார்கள்.

இத்தகைய இனிய பண்புகளை இயல்பாகப் படைத்தவர் காமராஜர்.

(2) பரம ஏழை; ஓடம் விடும் தொழிலன்; எளியவனான குகனை இராமர் தழுவி நீ என் தம்பி; இலக்குவன் உனக்குத் தம்பி; இந்தச் சீதை உனக்குக் கொழுந்தி" என்று கூறியருளினர்.

அதுபோல் காமராஜரும் ஏழை பங்காளராக எளியவர்க் குதவும் அறியராக, உற்றவர்க்குதவும் பெற்றியராக விளங்குகின்றார்.

இன்று எத்தனை ஏழைக் குழந்தைகள் அவரால் கல்விநலம் பெறுகின்றார்கள். எத்தனை ஏழைக் குழந்தைகள் உச்சிப் பொழுதில் உண்கிறார்கள்.

(3) இராமராஜர் கடலுக்கு அணை கட்டினர். காமராஜரும், எத்தனையோ அணை கட்டினர். ஆறுகட்குப் பாலம் கட்டினர்.

(4) இராமராஜர் பதவியைத் துறந்து சென்றார். காமராஜரும் பதவியைத் துறந்து சென்றார்.

(5) இராமசந்திரமூர்த்தி ஒன்றுக்கும் பற்றாத அணிலுக்கும் அருள்புரிந்தார்.

காமராஜர்—எளிய மக்களும் உயர்ந்து, கல்விநலம்-தொழில்வளம்-பொருள் நலம் பெறவேண்டும் என்று அல்லும் பகலும் உழைத்துவரும் தொண்டு சொல்லுந் தரமன்று; அது கல்லும் கனிந்துருகும் மாண்பு.

(6) இராமராஜர்:—வில்லின் வலிமையால் எல்லோரையும் தன் வசப்படுத்தினர்.

காமராஜர்:—சொல்லின் வலிமையால் எல்லோரையும் தன் வசப்படுத்தினர்.

(7) இராமர் இராவணாதி அசுரர்களை வதைத்தருளினர்.

காமராஜர் இன்று பசி வறுமை, அறியாமை முதலிய அசுரர்களை வதைத்துக் கொண்டேயிருக்கின்றார்.


நம் நாட்டில் எல்லோரும் படிக்கவேண்டும். ஏழைகள் எல்லோரும் பசியின்றி உண்ணவேண்டும்.

கூடுமான வரை மக்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று இம்மாபெரும் புண்ணிய சீலர், ஓயாது ஒழியாது, தன்னலம் எதுவும் இன்றி கர்ம யோகியாகத் தொண்டு புரிகின்றார்.

பண்பு, அன்பு, உழைப்பு, ஊக்கம், அரசியல், நேர்மை, உண்மை முதலிய எல்லா நற்குணங்களும் நம் மதிப்புக்குரிய காமராஜரிடம் இருக்கின்றன. ஒரே ஒரு குணம் இல்லை என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஒரு குணம் மட்டும் அவரிடம் மருந்துக்கும் இல்லை. அது என்ன குணம் தெரியுமா? ஆ! ஆ! அந்தக் குணந்தான் தன்னலம்.


எந்நலமும் உள்ள இப்பெருமானிடம் தன்னலம் என்ற ஒன்றுமட்டும் இல்லை. அது அவர் பார்க்கின்ற திசையில் கூட இல்லை.

வாழ்க ராமராஜர்!
வாழ்க காமராஜர்!
வெல்க ராமருடைய வில்!
வெல்க காமராஜருடைய சொல்!




# உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

# DPF பம்புகள்



DPF பம்புகளின் விசேஷ அம்சங்கள்.
குறைந்த செலவில்
அதிகத் தண்ணீர்
நீடித்த உழைப்பு
நிசப்தமான ஓட்டம்
குறைந்த கவனிப்பு

மோட்டாருடன் இணைக்கப்பட்ட DPF பம்பு



பால் பேரிங்குகள் பொருத்தப்பட்ட DPF பம்புகள் 2" முதல் 8" வரை எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

DPF பெல்ட் டிரைவ் பம்பு

## தண்டாயுதபாணி பவுண்டரி பிரைவேட் லிட்.,

பாப்பநாயக்கன் பாளையம்,

**கோயமுத்தூர்-1.** தந்தி : "மோட்டார் பம்பு"

போன் : 2419

Phone: 77

# N. V. BASHYAM REDDY & Co.,

**4, PUGH'S ROAD** **CUDDALORE-N. T.**

CALTEX DEALERS & DISTRIBUTORS

**CUDDALORE & NEYVELI**

*Stockists for* : Asbestos cement sheets, Pipes, Pipe Fittings.

*Stockists for* : Dalmia cement:

*Distributors for* Kirloskar oil engines.



# சேவையின் சின்னம்

— தேரையர் —

தலைவர் காமராஜரை பல கோணங்களில் கண்டு, பேசி, பழகி அறிந்தவர் 'தேரையர்.' 'உதயம்' வெளியிட்ட அத்தனை காமராஜ் மலர்களிலும் 'தேரையர்' காமராஜர் அவர்களைத் தமது இனிய தமிழ் எழுத்தால் படம் பிடித்துக் காட்டியுள்ளதை 'உதயம்' அன்பர்கள் அறிந்ததே. இந்த மலரிலும் அவர் காமராஜரை 'சேவையின் சின்ன'மாகக் கண்டிருப்பதை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

'பிறர்க்கு சேவை செய்தலே பிறவியின் பயன்,' என்ற பொன்மொழியின் திருவுரு நம் தனிப்பெருந் தலைவர் உயர்திருகாமராஜ். புத்தரையும், காந்தியையும், புனித நேருவையும் தமது துறவால் தொண்டால் துலக்கும் தொண்டர். பாரத நாட்டுக்கு செந்தமிழ் நாடு தந்த செல்வ மைந்தர். அன்னை சிவகாமி ஈன்ற சிங்கத் தமிழர். ஏழைகளின் தோழர். எளிமை, நேர்மை, உழைப்பு, ஊக்கம், நிர்வாகத்திறன் அரசியல் ஆற்றல் இவற்றில் சிறந்து விளங்குபவர். தானைத் தலைவனின் கம்பீரம், தத்துவ மேதையின் முகத்தோற்றம், உள்ளத்தில் உள்ளதை வார்த்தையில் வடிக்கும் பண்பு, வெள்ளம்போல் கருணை யாவும் ஒன்று சேரப் பெற்ற உன்னதத்தலைவர்.

பிறந்ததோ ஏழைக்குடி; வளர்ந்ததோ விருதுபட்டி; கொண்ட இலட்சியமோ தாய்நாட்டு விடுதலை; மூச்சும் பேச்சும் விடுதலைப்பணி; வீட்டை மறந்தார்; நாட்டுக்குத் தம்மை ஒப்படைத்தார். தூயதொண்டும், தியாக உள்ளமும், சுயநலமில்லாச் சேவையும் ஒரு ஏழைக் குடிமகனை எவ்வளவு பெரிய இடத்துக்கு உயர்த்தும் என்பதற்கு ஈடில்லா இலக்கிய மானுர்.

''இயற்கையிலேயே எனக்கு சுயவாழ்வில் பற்றுகிடையாது. அது பொது வாழ்விற்கு ஒத்தாசையாக அமைந்தது. பிறகு அதுவே பழக்கப்பட்டு விட்டது. என் சொந்த வாழ்வைப்பற்றி என்றுமே கவலைப்பட்டது கிடையாது. எந்நேரமும் என்னைப் பெற்ற நாட்டைப் பற்றியே எண்ணுகிறேன். நாட்டின் துயரத்தில் தனிப்பட்ட நபரின் துயரம் ஐக்கியமாகி விடுகிறது. வீடில்லாத பூசாரிக்கு கோயிலே அரண்மனையாவதுபோல், தேசீயப் பாசறை என் தாய் வீடாகிவிட்டது. இது ஒரு பதவியல்ல. சேவை செய்ய வந்ததொரு வாய்ப்பென்று கொள்ளவேண்டும்,'' எனத் தமது வாழ்க்கை தத்துவ விளக்கம் கூறி தமிழகத்தின் வழிகாட்டியானுர் நமதருந்தலைவர் உயர்திரு காமராஜ்.

''நேருவுக்குப் பின் யார்?'' என்று அகில உலகமே ஐயத்திலும், அச்சத்திலும் ஆழ்ந்த போது, ''இதோ நானிருக்கப் பயமேன்?'' எனச் சொல்லால் சொல்லாமல் செயலால் உலகுக்குஉணர்த்திய உத்தமர் உயர்திருகாமராஜ். ஆனுல் ஒப்பற்ற நேருஜியைப் போல் உயர் குடிப்பிறப்போ, பெரும் பணவசதியோ, சிறந்த கல்லூரிப் படிப்போ, ஏனைய பல வாழ்க்கை வளமோ வாய்ந்தவரல்ல அவர். எனினும் உண்மை உழைப்பும், தியாகத் தொண்டும், சுயநலமற்ற சேவையும் அவரைத் தரணி புகழ் தலைவராய் ஆக்கியுள்ளன.

அவருக்கு கல்லூரிப் படிப்பு அதிகமில்லை. அதனை அவர் வெளிப்படக் கூற ஒரு போதும் வெட்கப்பட்டதில்லை. 1959-ல் தாம் ஆற்றிய ஒரு சொற்பொழிவில்,'' பலர் என்னைப் படிப்பில்லாதவன், சாதாரணமான பூகோளம் கூட எனக்குத் தெரியாது என்கின்றனர். அவர்களுடன் எனக்கு மனக் கசப்பில்லை. ஆனுல் எனக்கு தமிழ்நாட்டின் எல்லா இடங்களும், சாலைகளும், நதிகளும், ஏரிகளும் தெரியும். அவற்றின் அருமை பெருமையும், பயனும் அறிவேன். வெவ்வேறு கிராமங்களில் மக்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதும் எனக்குத் தெரியும். இவையாவும் நேரிடையாகவே நானறிவேன். இதெல்லாம் பூகோள அறிவில்லை, வண்ணப் படங்கள் நிறைந்த புத்தகங்கள்தான் பூகோள மாகும் என்ருல் அத்தகைய பூகோளம் நான் படிக்காதது குறித்து எனக்கு கவலையேயில்லை,'' எனச் சுருங்கக் கூறி தமது உலக அறிவையும், வாழ்க்கை அனுபவத்தையும் விளக்கினுர். உலகமே அவர்க்கு சர்வகலாசாலை. அதிலுள்ள இயற்கையும், மக்களும், நிகழ்ச்சிகளுமே அன்ருடப் பாடம். அந்த அறிவே அவர்க்கு உறுதுணை. மக்களுக்கு அருஞ்சேவை செய்து அவர் வெற்றியுறுதற்கு அதுதான் வழிகாட்டி.

1903-ம் ஆண்டு பிறந்தார் அவர். தமது பள்ளிப் பருவத்திலேயே 1921-ல் நடந்த உப்பு சத்தியாகிரகத்தின்போது தேசீயத்தில் ஈடுபட்டார். அதிலிருந்து சுமார் இருபது ஆண்டுகள் வெறும் தொண்டராய், தியாகச் சுடராய்த் தாய் நாட்டிற்கு அருஞ்சேவை செய்தார். வேறு சிலரைப்போல் அவர்க்கு இலகுவில் தலைமைப் பதவியும், புகழும் கிட்டிவிடவில்லை. புகழ் ஏணியில் முதல் படியிலிருந்து அரும்பாடுபட்டு, பெருஞ்சேவை செய்து படிப்

படியாய் உயர்ந்தவர் அவர். உப்புச் சத்தியாக்கிரகத்தில் அவர்க்கு இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் கிடைத்தது. விடுதலையான பின் பத்து ஆண்டுகள் உண்மைத் தொண்டராய்ப் பணியாற்றினர்.

1931-ல் தான் அவர் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலும் ஒரு அங்கத்தினரானர். உடனே 1932-ல் வரிகொடா இயக்கத்தில் ஈடுபட்டு ஒரு ஆண்டு சிறை சென்ருர். பின் 1934-ல் விருதுநகர் வெடிகுண்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இறுதியில் விடுதலையானர். 1935-ல் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியின் காரியதரிசியானர். 1937-ல் சென்னை சட்டசபை அங்கத்தினராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல் 1941-ல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திலும், தனி நபர் சத்தியாகிரகத்திலும் பங்குகொண்டு சிறைப்பட்டார். அது சமயந்தான் அவர் விருதுநகர் நகரசபையின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் சிறிது காலம் விடுதலை பெற்றிருந்த அவர் மீண்டும் 1942-ல் சிறை சென்று இறுதியில் 1945-ல் விடுதலையானர். 1947-ல் அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினரானர். அவரது அரசியல் வாழ்வின் சிறப்பு அம்சம் 1939 முதல் 1954 வரை இடைவிடாது 15 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரசின் தனிப்பெருந் தலைவராய்ப் பணியாற்றியதே.

வேல்ஸ் இளவரசரின் சென்னை வருகையை எதிர்த்து 1921-ல் நடந்த போராட்டத்தைக் காண சென்னை வந்த உயர்திரு. காமராஜ் தமது நண்பருடன் கடற்கரையில் உலாவிய போது கோட்டை மீது பறந்த இங்கிலாந்து தேசக் கொடியைக் காட்டி, 'அந்த அன்னியக் கொடிக்குப் பதில் நமது தேசியக் கொடி கோட்டைமீது பறக்கும்வரை நமக்கு நிம்மதியோ, ஓய்வோ கிடையாது,'' என்ருராம். அதன்படியே அதே கோட்டையில் இந்திய மூவர்ணக் கொடியின்கீழ் 1954 முதல் 1963 வரை சென்னை முதல் மந்திரிப் பொறுப்பேற்று இந்தியாவிலேயே தலை சிறந்த நிர்வாகம் புரிந்து நமக்கெல்லாம் பெருமை தேடினர்.

அவரது அரும்பெருஞ் சேவையின் காரணமாக, பலர் எதனை நோக்கி ஓடுகிருர்களோ, அந்த ஆட்சி பீடம் அவரை நோக்கி ஓடிவந்தது. எனினும் சேவைக்காகத்தான் பதவியே தவிர சுயநலத்திற்காக அல்ல எனும் திண்ணமான எண்ணங் கொண்டவர் அவர். எனவே பதவியைத் துறந்தும் கட்சியின்மூலம் நாட்டுக்குச் சேவை செய்ய முடியும் என்ற உணர்வை 'காமராஜ் திட்டம்' மூலம் அவர் காங்கிரசில் உண்டாக்கினர். திட்டத்தை அளித்த அவரே அதற்கு வழிகாட்டினர்.

திடீரெனப் பாரதப் பிரதமர் நேருஜி மறைந்தும், அப்பதவியை ஏற்பது யாரெனும் தீவிர நெருக்கடி நாட்டில் ஏற்பட்டது. ''நாலே நாட்களில் அப் பெருஞ் சிக்கலை வெகு வேகமாகத் தீர்த்து வைத்த பெருமை காமராஜருக்கே உண்டு. அதற்காக அவரை எவ்வளவு பாராட்டினலும் தகும்,'' என்று ஆங்கில நாட்டுப் பத்திரிகை 'லண்டன் டைம்ஸ்' போற்றிப் புகழும் வண்ணம் நாட்டிற்கு அருஞ்சேவை புரிந்தார் அவர். அதனல் அவரைப் பாரத நாடு மட்டுமின்றி, அகில உலகமே வாழ்த்தியது. ஒருவரது


''பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்குந் தத்தந்
கருமமே கட்டளைக் கல்,''

என்ற வள்ளுவர் வாக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு உயர்திரு காமராஜ்.

''தலைமைத் தகுதியும், சேவைத் தன்மையும் ஒருங்கே கூடிய ஒருவர் உண்டென்ருல், அவர் நம் காமராஜ்தான். அவர் இனி தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமின்றி, இந்தியாவின் 45 கோடி மக்களிலுள்ள 25 கோடி வாக்காளரது ஜனநாயக வேட்கையின் தலைவருமாவார். இந்தியாவின் தலைவிதியே அவர் கையில்தான்.'' என்று அண்மையில் மத்திய மந்திரி திரு. பாட்டீல் அவரைப் பாராட்டினர். அதன்பின் திரு அசோக் மேதாவோ,'' ஒரு அரசியல் வாதி அடுத்துவரும் தேர்தல் குறித்தே எண்ணுவான்; ஆனல் ஒரு தேசத்தலைவன் வருங்கால சந்ததி குறித்து எண்ணுவான். உயர்திரு. காமராஜ் ஆதியில் ஒப்பற்ற தொண்டராய்ப் பணியாற்றி, பின் வெற்றிவாகை சூடும் அரசியல்வாதியாகி தற்போது தலை சிறந்த தேசத் தலைவராகி விட்டார்,'' எனப் புகழ்ந்தார்.

இவ்விதம் பல தலைவர்களும், பாமர மக்களும் யாவரும் உயர் திரு காமராஜரைப் போற்றிப் புகழ்ந்து மனமாரப் பாராட்டுகின்றனர். அவரது பிறந்ததின வாரம் பெரும் விழாவாகச் சிறப்புற நாடெங்கும் கொண்டாடப்பட்டது. காரணம், அவர் இல்லறப் பற்றற்று சேவையின் சின்னமாய், தியாகத்தின் திருவுருவாய் விளங்குவதே. அதனல் அவர்க்கு பட்டமும் பதவியும் தாமே வந்தடைகின்றன. அவர் பாரத ரத்தினமாயும் பாரதப் பிரதமராயும் திகழினும், அது அப்பட்டத்திற்கும், பதவிக்குமே பெருமை; சுயநலமற்ற சேவைக்குப் பாரதத்தாய் தரும் பரிசாம்.

''திருமணமே செய்யாது
தேசநலத் தொண்டே
ஒருமனதாச் செய்தார்
உத்தமர்—காமராஜ்
மாற்ருரும் போற்றும்
மாசேவைச் சின்னமே
ஏற்றுதும் என்றும்
வாழியவே!''



# வடக்கில்.... வளரும் காமராஜ்

ஆ. நமசிவாயம்

**வடக்கில் வளரும் இந்த காமராஜருக்கும் தமிழகத்தின் தவப் புதலவன் காமராஜருக்கும் ஏதாவது ஒட்டும் உறவும் உண்டா என்று கேட்டால் நீங்கள் ஆச்சரியப் படாமலா இருப்பீர்கள்? எல்லா காமராசரும் ஒரு காமராஜ் தானே என்றுதான் கேட்பீர்கள். ஆனால் காமராஜ் 'ஸ்பெஷலிஸ்ட்' திரு. நமசிவாயம் வடக்கில் வளரும் காமராசரைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார், படித்து விட்டுச் சொல்லுங்கள்!**

1962-ம் ஆண்டு காமராஜ் அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து எழுதும் எண்ணம் வந்து, அது சம்பந்தமாக விருதுநகர் புறப்பட்டேன்.

சென்னையிலிருந்து புறப்படும் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயிலில் விருதுநகர் சென்று இறங்கினேன். ரயில் தாமதமாக ஓடியதால் பிற்பகல் மூன்று மணி வேளை. அப்போது பெட்டி, படுக்கையுடன் ரயில் நிலையத்தை விட்டு வெளியில் வந்ததும் முதலில் நெருங்கிய ஜட்கா வண்டியில் ஏறி "காமராஜ் வீட்டுக்கு விடப்பா!" என்றேன்.

"காமராஜ் அம்மாவைப் பார்த்துவிட்டு அப்புறமா முனிசிபல் சத்திரத்துக்கு திரும்பிடணும். கொஞ்ச நேரம் அங்கேயே தங்கிவிட்டு, முனிசிபல் சத்திரத்தில் கொண்டு விட்டுவிடப்பா! உனக்குச் சௌகரியப்படலேன்னா, காமராஜ் வீட்டிலேயே விட்டுட்டுப் போயிடு, திரும்பறபோது வேறேவண்டி பார்த்துக் கொள்கிறேன்," என்று வண்டிக்காரரிடம் தெரிவித்தேன்.

வண்டிக்கார சாயபு கூறினார்; காமராஜ் வீட்டு வரைக்கும் ஜட்கா போக முடியாதுங்களே' அவர் வீடு ஒரு சின்ன சந்துக்குள்ளா இல்ல இருக்கு. அதுவும் ஒரு குறுகலான முட்டுச் சந்தாச்சுங்களே! வண்டி நேரே அங்ஙனே போய்த் திரும்ப முடியாதுங்களே! தூரத்திலேதான் நிப்பாட்டணும்."

"ஆமா, அவரு..... காமராஜ் வீட்டுக்கு வரும்போது கார்"

"மந்திரி ஐயா வந்தாலும் தெற்கு ரத வீதியிலேயே காரை நிறுத்திட்டு சந்தாலேதான் வீட்டுக்கு நடந்து போவாரு" என்றார் வண்டிக்காரர்.

"அவரு வீடு (காமராஜ் வீடு) பெரிய வீடா? இந்த மாதிரி இருக்குமா!" என்று பங்களா போன்ற பெரிய வீடு ஒன்றைச் சுட்டிக்காட்டிக் கேட்டேன்.

வண்டிக்கார சாயபு சிரித்துக் கொண்டே கூறினார்? "அவுக வீடு சின்னஞ் சிறியது தாங்கோ! பலபேர் மந்திரியோட வீடுன்னா பெரிய பங்களாவாக இருக்கும்னு நெனச்சுக்கிட்டு வராக! ஆனா வீட்டைப் பாத்தப்பறம் தான் நிலைமை புரியுது! அதிலேயும் வெளியூர்க்காரங்களுக்கு ஒரே ஆச்சரியமாப் போயிடுது! ஏன் ரெண்டு மூணு வருசத்துக்கு முன்னாடி, இப்படித்தான் வடக்கத்திகாரங்க புருஷனும் பெண்டாட்டியுமா ரெண்டுபேர் நம்ம ஜட்கா விலே ஏறிக்கிட்டு "காமராஜ் பங்களாக்கி ஜாவ்" என்று சொன்னாங்க என்றார் சாயபு.

"காமராஜ் பங்களா ஏதாவது கட்டியிருக்காரா, என்ன? என்று கேட்டேன்,

அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க! முதன் மந்திரின்னா, அவுக வீடு பங்களாவாகத்தான் இருக்கும்ணு நினைச்சி சொல்லியிருக்காங்க. ஆனா அப்போ எனக்கும் ஒரு சந்தேகம் வந்திட்டுது! ஐயா வரப்போ போறப்போ தங்கறத்துக்காக முதன் மந்திரியானப்புறம் ஒரு வேளை பங்களா, கிங்களா கட்டியிருக்காங்களோ என்னமோண்ணு சந்தேகம் வந்துட்டுது! எதுக்கும் வழியிலே வெசாரிபபோம்ணு வண்டியெ ஓட்டிட்டே போனேன்!

"வழியிலே விசாரிச்சியா" என்று கேட்டுத் தூண்டினேன்.

"ஆமாங்க மொதலாளி! வழியிலே போறப்போ அவரு—காங்கிரஸ் தொண்டன் ராமச்சந்திரன் எதிர்த்தாப்பலே வந்தாரு. வண்டியே நிறுத்திப்பிட்டு, கீழே எறங்கி, ரகசியமா காமராஜ் எதாச்சும் பங்களா கட்டியிருக்காரு? யாரோ வடக்கத்திக்காரங்க அவரோட பங்களாவுக்குப போகணும்ண்ணு சொல்றாக" என்றேன்.

அதுக்குமேலே தொண்டன் ராமச்சந்திரன் வடக்கத்திக்காரங்களோட எதோ இங்கிலிசுலே பேசிப்பிட்டு, அவரும் வண்டியிலே ஏறிக்கிட்டார்,

"அப்புறம் என்ன ஆச்சு" பேச்சைத் தொடர்ந்தேன் நான்.

"அந்த வடக்கத்திக்கார மொதலாளியும், அவுக சம்சாரமும் மந்திரியோட வீட்டைப் பாத்துட்டு அழுதுட்டாங்க சாமி! அப்படி அழுதுட்டாங்க! அந்த வடக்கத்திகார

அம்மா ஐயாவோட அம்மாவை கட்டிப் பிடிச்சிக்கிட்டு விடமாட்டேண்ணு பிடிவாதம் பிடிச்சாங்க! அப்புறமா அவுகளை ஏத்திகிட்டு திரும்ப ரயிலுக்கே கொண்டாந்து உட்டுட்டேன்.

எதுக்கு வடக்கத்திக்கார அம்மா பிடிவாதம் பிடிச்சாங்க.

வடக்கத்திக்கார அம்மா எதுக்குப் பிடிவாதம் பிடிச்சாங்க ? என்ன நடந்தது'' என்று கேட்டதற்கு ''எனக்கு சரியா புரியலே சாமி, நீங்க வேணுமின்னு அந்த தொண்டன் ராமச்சந்திரனையே கேட்டுப் பாருங்க, சரியா விபரம் தெரியலாமுங்க! வடக்கத்திக்காரங்க போகும் போது அவரோட விலாசத்தைக்கூட எழுதி வாங்கிட்டுப் போனுங்க'' என்று பேச்சை முடித்தார் வண்டிக்காரர்.

ஏறத்தாழ ஒரு மாதத்துக்குமேல் விருதுநகரில் தங்கி, அன்னை சிவகாமியை தினந்தினம், வேளைதோறும் சந்தித்து விபரம் கேட்பது, ஊரிலுள்ள பெரியவர், சிறியவர் முதல் பலரிடமும் பழகி, உரையாடி, கேள்விகள் பலகேட்டு காமராஜின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கேட்டுத் திரட்டிக்கொண்டிருந்தேன்.

இடையிடையே ஜட்காவண்டிக்கார சாயபு தெரிவித்த ''வடக்கத்திக்கார தம்பதிகள்'' நினைவு பளிச்சிடும்.

அன்னை சிவகாமியிடம் கேட்டதற்கு ''எத்தனையோபேர் வராக, போருங்க யாரைக் கேட்கறீங்க'' என்று கேட்டார்.

சில வருடங்களுக்கு முன்பு தொண்டன் ராமச்சந்திரனுடன் வந்தார்களாமே! என்று ஒருமுறை குறிப்பிட்டு அவரது நினைவைத் தூண்டிக்கொண்டிருந்தேன்.

அப்போது.........! ஒரு இளைஞர் உள்ளே நுழைந்தார். ''இந்த ராமச்சந்திரனையா சொல்றீங்க தம்பி'' என்று அன்னை கேட்டார்.

ஜட்கா வண்டிக்காரர் கூறிய விபரங்களைத் தெரிவித்தேன். ஆம்!

அதே ராமச்சந்திரன்தான் அவர், விட்டேனு அவரை! தொடர்ந்து பேசி, கேள்வி மேல் கேள்விகளைப் போட்டு வடக்கத்தி தம்பதிகள் அன்னை சிவகாமியைத் தரிசித்துச் சென்ற விபரத்தை அறிந்தேன்.

அந்தச் சம்பவம்:

வடநாட்டிலிருந்து குஜராத்தி தம்பதிகள் பிள்ளைப்பேறு இன்றி பல்லாண்டுகள் வாழ்ந்தனர். மகப்பேறு பெற்றிடப் பெரிதும் ஏங்கினர். நம் நாட்டு நம்பிக்கைப்படி, பிள்ளைப்பேறு பெறலாம் என்ற நம்பிக்கையுடன் நாடு பூராவும் சுற்றினர்! க்ஷேத்ராடனம் செய்தனர். ராமேஸ்வரத்தை நோக்கி ரயில் பயணம் செய்த போது விருது நகர் நெருங்கிற்று,

''காமராஜ் பிறந்த ஊர் விருதுநகர்'' என்பதைச் சக பிராணி ஒருவர் மூலம் தெரிந்து கொண்ட அந்த வடநாட்டுப் பிரயாணி தமது பயணத்தை நடுவில் முடித்தார். விருதுநகரில் இறங்கி காமராஜ் வீட்டைப் பார்த்துவிட்டு, அங்கு வசிக்கும் அன்னை சிவகாமியின் ஆசி பெறவேண்டும், அதன்மூலம் தமக்குப் பிள்ளைப் பேறு வாய்க்கும் என்ற பேராவலுடன் ஜட்காவில் ஏறிப் புறப்பட்டார்:

வழியில் தொண்டன் ராமச்சந்திரனைச் சந்தித்து அவரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு காமராஜர் இல்லத்தை அடைந்தார்.

காமராஜ் சிறிய வீடு இருந்த சந்து, அதன் குறுகலான அமைப்பு, அங்கே அன்னை சிவகாமி வீட்டுக் கட்டிலில் அமர்ந்திருந்த எளிமைக் காட்சி!

''ஊரெல்லாம் புகழும் முதன் மந்திரியின் தாயார் இப்படியா வசிக்கிருர்'' என்று வியந்தார். விக்கி விக்கி அழுதும் விட்டாராம்.

பாரதத்தின் தலைமகனாய் இன்று வளர்ந்திட்ட காமராஜரைப் பெற்ற அன்னை சிவகாமியின் மணிவயிற்றைக் கட்டித் தழுவினுள் தாய்மைக்காக ஏங்கித் தலயாத்திரை புறப்பட்ட அந்த வடநாட்டு மங்கை நல்லாள்.

''உங்கள் மகன்போல எனக்கொரு மகன் பிறக்கவேண்டும், அப்படி வாழ்த்துங்கள்'' என்று குஜராத்தி மொழியில் அன்னையை வேண்டிக் கண்ணீர் உகுத்தாள்.

அவரது கணவன்மூலம் ஆங்கிலத்தில் இதனைக் கேட்டுத் தெரிந்த ராமச்சந்திரன் அன்னையிடம் விபரம் கூறி வாழ்த்தும்படித் தெரிவித்தார்.

'எம்மகனுட்டமாய் ஏதுக்குப் பிள்ளைங்கற! அவன்தான் கலியாணம் கட்டாம போயிட்டானே ! எங்குடும்பந் தழைக்க வழிபண்ணலேயே!'' என்று பெற்றமனம் ஏங்கித் தவித்துக் குமுறியது.

வடநாட்டுத் தம்பதியர் விடவில்லை! சரி என்று இடுப்பிலிருந்த விபூதிப் பையை எடுத்து 'பழனி ஆண்டவன் அருளால் ஆம்பளைப் பிள்ளையா பொறக்கட்டும்' என்று அன்னை சிவகாமி வாழ்த்தி ஒரு சிட்டிகை விபூதியெடுத்துக் கொடுத்தார்.

விபூதியைப் பெற்று நெற்றியில் சிறிது பூசிக்கொண்டார். தனது வயிற்றில் தடவினுர் கொஞ்சம், மீதியை வாயில்போட்டுச் சுவைத்து விழுங்கினுர். பிள்ளைப்பேறு கிடைத்துவிட்ட பூரிப்போடும் பெருமிதத்துடனும் புறப்பட்டனர் அந்த வடநாட்டுத் தம்பதியார்.

மாதங்கள் பல உருண்டோடின. அடுத்த ஆண்டு நிறைவதற்குள் தொண்டன் ராமச்சந்திரனுக்குக் கடிதம் ஒன்று வந்தது.

''அன்னை சிவகாமியின் அருளாலும் ஆசீர்வாதத்தாலும் எங்களுக்கு ஆண்மகன் ஒருவன் பிறந்துள்ளான். காமராஜ் என்று அவனுக்குப் பெயரிட்டு வளர்த்து வருகிறோம்'' என்று அந்த வடநாட்டுத் தம்பதிகள் எழுதியிருந்தனர்.

வடக்கில் வளரும்
காமராஜ் வாழ்க !



# வருங்கால இந்தியாவை உருவாக்கும் தலைவர்

**அமைச்சர் ஆர். வெங்கட்ராமன்**

**அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைவர் காமராஜ் அவர்களுடன் நெருங்கிப் பழகிய நண்பர்; இணக்கமாக ஒத்துழைப்பில் பணியாற்றிய சக தலைவரின் ஆற்றலையும் சிறப்பையும் மட்டுமல்ல அவர் உள்ளத்து ஒளியையும் உள்ளடங்கு ஆற்றலையும் அமைச்சர் இக் கட்டுரையில் விவரிக்கிறார்.**

அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைவர் காமராஜ் அவர்களுடன் நெருங்கிப் பழகிய நண்பர்; இணக்கமாக ஒத்துழைப்பில் பணியாற்றிய சக. தலைவரின் ஆற்றலையும் சிறப்பையும் மட்டுமல்ல. அவர் உள்ளத்து ஒளியையும் உள்ளடங்கு ஆற்றலையும் அமைச்சர் இக் கட்டுரையில் விவரிக்கிறார்.

குடிப்பெருமை, அந்தஸ்து, செல்வம், பெரிய படிப்பு என்ற வசதிகள் ஏதுமில்லாமல் சாதாரண நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு உயர்ந்தவர்கள், சரித்திரத்திலேயே ஒரு சிலர் தான் உண்டு. அந்தச் சிலரில் ஒருவர் நமது அருமைத் தலைவர் காமராஜ்.

காமராஜ் அவர்களின் ஆற்றலையும் அவரது வளர்ச்சியில் உள்ள மர்மத்தையும், மறைந்த நமது அரும் பெரும் தலைவர் நேருஜி அவர்களே வியந்து கூறியிருக்கிறார். ''காமராஜ் அவர்களுக்கு ஒரு வல்லிசான பேராற்றல் இருக்கிறது. இடையூறுகள் அனைத்தையும் கடந்து மக்கள் பணியில் தொடர்ந்து முன்னேறிச் செல்லுவதில் அந்தச் சக்திதான் அவருக்கு கைகொடுத்து உதவுகிறது. காமராஜரின் வெற்றியின் ரகசியம் என்ன என்று இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் அரசியல் வாதிகள் பலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவருடைய ஆற்றலைப் பற்றிய மர்மம் என்றுமே புரியாத புதிராகத்தான் இருக்கப போகிறது.

தமது நெருங்கிய நண்பர்களுக்கே அவர் புதிராக இருக்கிறார். அவருடைய உள்ளத்தில் ஓடும் சில எண்ணங்களை யாருமே கண்டு கொள்ள முடிவதில்லை. மனித இயல்பைத் துருவி உணரும் சக்தி அவருக்கு இருக்கிறது. யாரையும் எதனையும் எளிதில் எடைபோட்டு விடுவார். வாய் சொல்லுவதை கேட்கிறமாதிரி தோன்றும். ஆனால் நெஞ்சில் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுகொள்வார். உண்மையிலேயே இந்தியாவின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் அவர்.

## மக்கள் சொல்லுவதே சரி!

அவருடைய கொள்கை ஆழமானது, மக்கள் சொல்லுவதுதான் சரி என்பது அவருடைய ஆழ்ந்த நம்பிக்கை. மக்கள் தங்கள் போக்கில் சரியாக காரியங்களைச் செய்துகொண்டு போவதில் சட்டங்களோ, விதிகளோ குறுக்கிட அவர் அனுமதிப்பதில்லை. அவர் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது பல சமயங்களில் பலர் வந்து, அரசாங்க ஆணைகள் குறித்தும் விதிகள் குறித்தும் புகார்கள் கூறியுள்ளனர். அதிகாரிகளைக் கேட்டாலோ சட்டப்படித் தான் நடந்துகொண்டிருக்கிறோம் என்பார்கள். இருப்பினும், கூறப்பட்ட புகார்களில் உண்மை இருந்தால், ஆணைகளையும், விதிகளையும் அவர் மாற்றத் தயங்கியதில்லை. மாற்றி, மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்திருக்கிறார்.

கோட்டையில் அரசாங்க மாளிகையில் உட்கார்ந்திருந்தால், எல்லாமே ஒழுங்காக நடக்கிறது என்ற எண்ணமே ஏற்படும். ஆனால் வெளியில் போகும்போதுதான், பலதரப்பட்ட மக்களைச் சந்திக்கும்போதுதான், பல குறைபாடுகள் தெரிகின்றன. அதனால், உண்மை நிலைமையைக் கண்டறிவதற்காகவும் கேட்டறிவதற்காகவும் அவர் மாநிலமெங்கும் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்.

எல்லா விவரங்களையும் அவர் அறிந்திருந்ததால் எதையும் எளிதில் கிரகித்துக்கொள்ளும் சக்தி அவருக்கு இருந்ததால், மாநில நிர்வாகத்தை பூரணமாக கட்டியாளக் கூடியவராக அவர் இருந்தார். நிர்வாக நடவடிக்கை ஒவ்வொன்றும், சரிதானா என்று மக்கள் கருத்துடன் ஒப்பிட்டு அவ்வப்போது அவர் சரி பார்த்துக் கொண்டிருந்தார்.

## அதே நிலை அதே வாழ்க்கை

எளிய நிலையில் இருந்து உயர் நிலைக்கு வந்தவர்கள் பலர் உலகில் இருந்திருக்கின்றனர் வளர்ந்த பிறகு பழைய நிலையையும், சுற்றுச் சார்பையும் மறந்தவர்களாகவே இருந்திருக்

கின்றனர். ஆனால் காமராஜரைப் பொருத்த வரை, அவர் எந்த உயர் நிலையை அடைந்தாலும் பொதுமக்களிடம் ஏழை எளியவர்களிடம் அவர் கொண்டுள்ள அன்புமாறவும் இல்லை; குறையவும் இல்லை.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில்தான் நாட்டின் உண்மையான முன்னேற்றம் இருக்கிறது என்று அவர் உறுதியாக நம்புகிறார். இதற்காக அவர் இரண்டு அடிப்படை திட்டங்களை வகுத்தார்.

## கல்வி என்னும் கண்

தமிழகத்தில் உள்ள எல்லா சிறுவர் சிறுமியரும், பள்ளிக்கூட கட்டணம் இல்லாமல், பகல் உணவு வசதியுடன் பத்தாவது வரை படிக்கவேண்டும் என்பது அவற்றில் ஒன்றாகும் மக்கள் கொஞ்சம் படித்திருந்தால் எப்படியாவது வாழ வழி தேடிக் கொள்வார்கள் என்பது அவரது நம்பிக்கை இதனால் அவர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவர் முதல் அமைச்சராக வருவதற்கு முன்பே, பேசிய கூட்டங்களில் எல்லாம், கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி இருக்கிறார். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புங்கள்; பிள்ளைகள் படித்தால்தான் இந்நாட்டின் வருங்காலம் சிறப்பாக இருக்கும் என்று கூட்டம் தோறும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர் கூறுவது வழக்கம்.

## தொழில் மயமாக்கும் திட்டம்

தமிழகத்தை துரிதமாக தொழில்மயமாக்குவது அவர் வகுத்த 2-வது திட்டமாகும். மக்களுக்கு வேலை வாய்ப்பும், வருமானமும் கிடைக்க தொழில் வளர்ச்சி அவசியம் என்று அவர் கூறினார்.

அவர் முதல் அமைச்சராக் பதவி ஏற்கும் வரை, தமிழகம் விவசாய மாநிலமாக இருந்தது. அவர் பதவிக்கு வந்ததும் துரித தொழில் வளர்ச்சிக்கான திட்டம் வகுத்து அமுல் நடத்தினார். புது முயற்சிகளுக்கு அரசாங்கம் பண உதவி செய்வது என்ற துணிகர முடிவையும் அவர் மேற்கொண்டார். இவற்றின் பலனாக விவசாய மாநிலமாக இருந்த தமிழ்நாடு அவரது பத்தாண்டு ஆட்சிகாலத்தில், இந்தியாவிலேயே அதிக தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாக மாறியது.

## பெரிய காரியம் சாதிப்பது எப்படி ?

ஒரு சமயம், ஒரு தொழில் நிறுவனத்துக்கு ஒரு கோடி ரூபாய் முதலீடு தேவை என்று நான் கூறினேன். ஆனால் இதைக் கேட்டு அவர் அசந்துவிடவில்லை. அந்த தொழில் முதலீடு செய்யத் தக்கது என்றால், அதற்கு ஊக்கமூட்ட வேண்டியதுதான் என்று அவர் சொன்னார். துணிச்சலான முடிவு எடுக்காமல் பெரிதாக எதையும் சாதிக்கமுடியாது என்றும் அவர் சொன்னார்.

தொழில்கள், நாடெங்கிலும் பரவலாக இருக்க வேண்டும் என்பதே அவர் கருத்து, சிறு தொழில்கூட எங்கு ஆரம்பிக்கப்படுகிறது என்பதில் அவர் அக்கறை காட்டினார்.

எந்தபொறுப்பானாலும்சரி, அந்த பொறுப்பை சமாளிக்கக்கூடிய சக்தி—திறமை படைத்தவர் அவர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டது, மிகக் குறுகிய மெஜாரிடியில்தான். ஆனால், சிறிது காலத்துக்குள், அசைக்கமுடியாத தலைவராக அவர் வளர்ந்துவிட்டார்.

அதேபோன்று படித்தவர்கள் நிறைந்த— அரசியல் அறிவு வளர்ந்த இந்த மாநிலத்தின் முதல் அமைச்சராக அவர் வந்தபோது, அவரால் எப்படி சமாளிக்க முடியும் என்று பலர் சந்தேகித்தார்கள். ஆனால் அவரோ, ஏற்ற பொறுப்பைவிட அவர் பெரியவர் என்பதை நிரூபித்துக்காட்டி விட்டார்.

## அசாத்தியம் என்பது இல்லை

அவர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும், மாநில மட்டத்தில் அவர் கண்ட வெற்றியை, அகில இந்திய அளவில் அவரால் காணமுடியுமா? பல மொழியினர்; பலபோக்கினர், பலதரப்பட்ட கருத்துடையோர் இருக்கிறார்களே, அவரால் எப்படி சமாளிக்க முடியும் என்று பலர் சந்தேகித்தனர். ஆனால் நமது பிரதம மந்திரி காலமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி நிலையை அவர் சமாளித்தவிதம், அவரால் முடியாதது ஒன்றும் இல்லை என்பதைக் காட்டுகிறது.

'நான் பெரியவன்' என்ற உயர்வு மனப்பான்மையும் அவருக்குக் கிடையாது. 'நான் தாழ்ந்தவன்' என்ற தாழ்வு மனப்பான்மையும் கிடையாது. சமுதாயத்தில் எந்த மட்டத்தில் உள்ளவர்களுடன் அவர் பழகினாலும், அவர் அவராகவே இருந்தார். அவர் மண்டைக்கனம் காட்டியதும் இல்லை, தாழ்ந்து போனதும் இல்லை.

## ஞான உள்ளம் நிறைவு உள்ளம்

ஏழை மக்கள் மத்தியிலும், எழுத்தறிவற்ற மக்களிடையேயும் பேசுகையில், 'இவர்களைவிட நான் உயர்ந்தவன் என்ற எண்ணத்தோடு அவர் பேசியதே கிடையாது. அதே போன்று படித்தமேதைகள், அயல் நாட்டு மேதைகள் அரசியல் வல்லுநர்கள் மத்தியில் பழகும்போது, அவர் தாழ்வு உணர்வு கொண்டதில்லை.

பொருளாதாரத்தில் மிகச்சிக்கலானவற்றைக் கூட எளிய முறையில் மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்வதில் அவருக்குள்ள திறமையும் ஒருவருடன் ஒருவர் பேசும் போது எப்படி பேசுவோமோ அதுபோல பொது மேடைகளில் அவர் பேசும் பாணியும், அவர் பெற்றுள்ள பரந்த அறிவும், மக்கள் மனதில் அவர் இடம் பெற உதவியுள்ளன.

களங்கமற்ற அவரது அந்தரங்க சுத்தியும், பழுதுசொல்ல முடியாத அவரது நேர்மையும், மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

### துறவி

'காமராஜ் திட்டம்' எனப்படும் அவரது திட்டம் குறித்து விவாதிக்கையில் 'இந்த நாட்டில் மன்னனை விட துறவிக்கே மதிப்பு அதிகம். சகல சொத்து, சுகங்களை உடையவனை விட, சொத்து சுகத்தை துறந்தவனே இங்கு அதிகமாக மதிக்கப்படுகிறான்' என்றார்.

அரசியலில் ஒரு துறவி போல அவர் வாழ விரும்பியதுதான், மற்ற தேசிய தலைவர்களை விட அவரை சிறந்தவராகத் தூக்கி நிறுத்தியிருக்கிறது.

நாட்டுக்கு அவர் செய்த சேவைகளை கணக்கிட்டுப் பார்க்கும் சமயம் இன்னும் வரவில்லை. வரலாற்றையே உருவாக்கும் பணியில் அவர் இன்று உள்ளார். இன்னும் கால் நூற்றாண்டுக்கு அவர் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும் என்று நாடு எதிர்பார்க்கிறது.

நமது தேசிய வரலாற்றில் காமராஜரின் பெயர் அழியாத இடம் பெறும்.


# ஒருபொழுதும் ஒத்துப்பார்க்காதீர்கள்...



உங்கள் குழந்தைகளை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் ஒததுப பார்த்தால் ஏமாற்றந்தான ஏற்படும் அதே மாதிரி மெட்ரிக் முறையையும், பழைய சேர், வீசை முறையையும் ஒத்துப் பார்ப்பது வீண வேலைதான. இதனால் உங்கள் நேரத்தை வீணடிபபதுடன, நஷடமும் அடைவீர்கள.

*துரிதமான சேவைக்கும், நேர்மையான வார்த்தகததிறகும் பொருள்களை*

**மெட்ரிக் யூனிட்டுகளில் வாங்குங்கள்**

Telegrams: "RANGAVILAS" Telephones. 2536 & 2537

# SRI RANGA VILAS

## GINNING, SPINNING & WEAVING MILLS LTD.,

(Incorporated in 1922)

PEELAMEDU P. O. COIMBATORE-4.

❋

**SPINNERS OF SUPERIOR KINDS OF**

**HANK YARN from Nf 2 to Nf 84**

**(2s to 100s Counts)**

**And**


**CONE YARN from Nf 17 to Nf 68**

**(20s to 80s) Counts.**

❋

*Managing Agents:*

P. S. G. & SONS.



# காலம் தந்த கருவி

பட்டிக்காட்டான்

**வறுமை அறவே நீக்க, சமதர்ம லட்சியத்தை சித்தியாக்க காலம் தந்த கருவி—காமராஜர்**

ராஜாஜி அன்று சேலத்தில் சாமர்த்தியம் மிக்க வக்கீலாக இருந்தார். அவருடைய அறிவாற்றல் கிராமங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் தெரிந்திருந்தது. பின்னர் அவர் காந்திஜிக்கு சம்பந்தி ஆனார். தென்னாட்டு காந்தி என்று பேர் பெற்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்தவர், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் தீவிரமாக ஈடுபட்டார். சி. பி. சுப்பையாவை நிறுத்தி வைத்து அவருக்காக வேலை செய்தார். சி. பி. சுப்பையா அந்தச் சமயத்தில் அற்புதமான பிரசங்கி. வெகு ரசனையாகவும், உணர்ச்சியோடும் மணிக் கணக்கில் பேசி கூட்டத்தினரை ஆகர்ஷிப்பார்.

இந்தக் கூட்டினை எதிர்த்து நின்றவர் காமராஜ். அந்த தேர்தல் போட்டியில் வெற்றியும் பெற்றார்.

அன்று தொடங்கி இன்றுவரை காமராஜர், தேர்தல் களத்தில் ஒரு ராஜராஜன். அலெக்சாண்டர், ஹன்னிபால் என்பதாக பெரிய பெரிய படைகளை நடத்திச் சென்றவர்கள் உலக வரலாற்றில் பலர் உண்டு. பெரிய பெரிய வெற்றிகளை எல்லாம் அவர்கள் அடைந்த விவரம் இன்று சரித்திர புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன.

ஜனநாயக யுகத்தில் ஜனநாயக முறையில், ஜனநாயக சாதனங்களை வைத்துப் போராடி, இவ்வளவு பெரிய வெற்றிகளை தொடர்ச்சியாக நீண்ட காலமாக அடைந்து வருபவர்கள் காமராஜருக்கு நிகராக யாருமே கிடையாது.

காமராஜர் எப்படி இவ்வளவு மகத்தான வெற்றிகளைப் பெறமுடிகிறது? இதற்கு சரித்திர ரீதியாக இரண்டொரு உதாரணங்கள் சொல்லலாம். முதலாவது பானிபட் யுத்தம். பாபருக்கும் இப்ராகிம் லோடிக்குமிடையே நடந்தது. இப்ராகிம் லோடி பெரிய படை வைத்திருந்தார். ஆனால் தோற்றார். பாபர் ஜெயித்ததற்குக் காரணம், புதிய போர்க் கருவியை அவர் உபயோகித்ததே ஆகும். அதாவது இந்தியாவில் முதல் தடவையாக பெருமளவில் ஆப்பிரிக்க பீரங்கிகளை பாபர்தான் உபயோகப்படுத்தினார். அதன் மூலம் வெற்றியும் பெற்றார். அதேபோல கட்டபொம்மன் கோட்டை தூளானது வெள்ளைக்காரன் பீரங்கியால் தான். பயன்படுத்தப்படும் கருவிக்கேற்ப போரின் போக்கு மாறுபடுகின்றது.

தலைவர் காமராஜ் இன்று வெற்றிமேல் வெற்றியாக ஈட்டுவதற்குக் காரணம் அவரது புதிய போர் முறையே ஆகும். இந்த யுகம் ஜனநாயக யுகம். இப்போது மக்கள் தேவை உணவு, உடை, கல்வி, சுகாதாரம். மக்களில் மிகப் பெரும்பான்மையோராக உள்ள ஏழைகளுக்கு இந்தத் தேவைகளை கிடைக்கச் செய்ய வேண்டும். வேறு பிரசங்கம் தேவை இல்லை; மேடை தேவையில்லை அரசியல் சதுரங்கங்கள் தேவை இல்லை.

காமராஜ் ஏழைகள் கட்சியில் நிற்கிறார். அவருடைய படை பெரிய படை. இதை விட வலிமை வாய்ந்த படை கிடையாது. ஜாதிச் சண்டை, வகுப்புச் சண்டை, உயர்வு, தாழ்வுச் சண்டை, எந்த கோஷங் களை ஏவினாலும், இந்தப் படையை அணு கிய மாத்திரத்தில் அவை முனை மழுங்கிப் போகின்றன.

காமராஜர் ஆட்சியை, திராவிட கழகத் தின் ஆட்சி என்று ராஜாஜியே வர்ணித் துப்பார்த்தார். நடக்கவில்லை.

படிக்காதவர்கள் ஆட்சி என்று சொல் லிப்பார்த்தார்கள். பலிக்கவில்லை.

காமராஜர் சொன்னால்தான் மக்கள் கேட்பார்கள். காமராஜர் சொல்லுவ தைத்தான் மக்கள் கேட்பார்கள். ஏன் அப்படி?

காமராஜர் மக்களுக்கு உரியவர். மக்க ளுடைய நலம் தான் அவருடைய நலம்.

வட வியட்னாம் கம்யூனிஸ்ட் ஜனாதிபதி யைப்போல அவருக்கு கட்டியிருக்கும் துணி தவிர வேறு உடமை இல்லை.

சொந்த வீடு இல்லை. வாடகை வீட் டில் வசிக்கிறார். தமது தாயாருக்கும் அவரைச் சார்ந்திருக்கும் தன் உற்ற உற வினருக்கும் அவர் மாதம் அளிப்பது 120 ரூபாய் ஏழையோடு ஏழையாக அவர் தாய் வாழ்கிறார்.

பல லட்சக்கணக்கான மக்கள் பிரம் மாண்டமான அளவில் காமராஜர் விழாக் கொண்டாடினார்கள். அவர்கள் காமராஜ ருக்காகவா விழாக் கொண்டாடினார்கள்? இல்லை. தங்களுக்காகக் கொண்டாடினர். அது மக்கள் விழா.

பெரிய பெரிய செல்வந்தர்களும் அந்த விழாவில் வந்து சேர்ந்து கொண்டிருப்பார் கள். அதற்குக் காரணம் காமராஜரின் தயவு பெறுவது என்பது சரியல்ல. மக்க ளின் சக்தியை அவர்கள் பார்த்தார்கள், அந்த பிரவாகப் பெருக்கை ஒழுங்குபடுத் தும் கரை கட்ட அவர்களும் ஒரு கை மண் அள்ளிப்போட்டார்கள்.

தங்கள் கட்சி எது என்பதை மக்கள் தெரிந்துகொண்டு விட்டார்கள். தங்கள் படை அணி எது என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

காமராஜ் அவர்கள் சொன்னது போல 1967ல் மட்டுமல்ல. 1977ல் கூட இதை இந்தச் சக்தியை அசைக்க முடியாது.

இந்தச் சக்திக்கு அசைவோ நலிவோ ஏற்பட்டால் ஏழைகள் நலம் பின் தள்ளப் படுகிறது என்பது பொருள்.

உண்மையை அறவே நீக்கி சமதர்ம லட்சியத்தை சித்தியாக்க, காலம் நமக்குத் தந்த கருவி காமராஜர். அவரது அணி யில் திரளுவோம். அவரது ஆணைக்குக் காத்திருப்போம்.

---

## சமதர்மம் என்றால் என்ன?

சமதர்மம் என்றால் என்ன? சமதர்மம் என்றால் பணத்தைப் பங்கு போடுவது அல்ல. உழைப்பைப் பங்கு போடுவதாகும். உழைப்பைப் பங்கு போட்டால் எல்லோருக்கும் கிடைக்கவேண்டிய நியாயமான ஓய்வும் ஊதியமும் கிடைக்கும்.

சமதர்மம் என்றதும் என்னமோ என்று நினைக்கவேண்டாம். தர்மம் சமமாய் இருக்க வேண்டும். அதாவது சமநீதி. தமிழில் சமதர்மம் என்பதை ஆங்கிலத்தில் சோஷலிசம் என்கிறோம். இப்பொழுது நமது சமுதாயத்தில் சமநியாயம் இல்லை, பணக்காரர்களுக்கு ஒரு நியாயம், ஏழைகளுக்கு ஒரு நியாயம், எல்லாவற்றிலும்.

—காமராஜர்

# KUNRU

# Wood Screws - Good Screws

*Sole Selling Agents :*

**M/s. THE BOMBAY COMPANY (P) LTD.,**

**169, BROADWAY : : MADRAS - 1.**

WITH THE BEST COMPLIMENTS.

*USE ALWAYS OUR SPECIAL*
*RAJA BRAND, SUNDARA BRAND, EYE BRAND*
*TOOR DHALLS—SUPERIOR AND GENUINE.*

## T.M.N.M. Somasundara Nadar Sons.

**SPICES EXPORTERS & IMPORTERS**

*Post Box No. 6*

**South Car Street, Virudhunagar.** (S. India)

*Branches :*

## T.M.N.M. Somasundara Nadar Sons.

**MERCHANTS & COMMISSION AGENTS**

**141, Anna Pillai Street, Madras-1.**

*

## T.M.N.M. Somasundara Nadar Sons.

**GENERAL MERCHANTS**

**268, Mari Manu Street, Tirupati (AP.)**

*Telegrams all places " CARDAMOMS "*

*Telephones 41. VIRUDHUNAGAR*

*31741 MADRAS.*

*221. TIRUPATI. (AP.)*

TRADE ENQUIRIES INVITED.



# காமராஜரும் சோஷலிசமும்

"அருண்"

*அகில* இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜரின் பிறந்த நாளை ஒட்டி "ஜனநாயக சோஷலிச வாரம்" கொண்டாடப்பட்டது.

காமராஜர் தமக்கு பிறர் புகழ் பாடுவதை விரும்புகிறவர் அல்ல. இதை நன்ருக அறிந்துள்ள காங்கிரஸ்காரர்கள், காமராஜருக்குப் பிடித்தமான ஜனநாயக சோஷலிசக் கொள்கையை மக்களிடையே பிரச்சாரம் செய்து காமராஜரின் அந்தஸ்தையும் கொள்கையையும் மேலும் உயர்த்தப் பாடுபடுகிருர்கள்.

### சோஷலிசம் பல ரகம்

சோஷலிசத்தில் பல ரகங்கள் உண்டு. ஹிட்லர் தமது சோஷலிசத்தை "தேசிய சோஷலிசம்" என்ருர். நாஜிசம் என்றும் அது அழைக்கப்பட்டது. அது ஆரிய இன உலக ஆதிக்கம், யூதப்பகைமை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு, ஆயுத பலத்தை நம்பிய "இசம்". மண்ணுசை கொண்ட அந்த தத்துவம மண்ணிலேயே புதைக்கப்பட்டது.

### ரஷிய சோஷலிசம்

மார்க்ஸ் முதல் ஸ்டாலின் வரை தங்கள் தத்துவத்தை சோஷலிசம் என்றுதான் சொல்லிக் கொண்டனர். அவர்கள் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி. இருந்தாலும் தத்துவத்தை சோஷலிசம் என்றே அதிகமாகப் பிரபலப்படுத்தினர். யு. எஸ். எஸ். ஆர். அதாவது யூனியன் ஆப சோவியத் சோஷலிஸ்ட் ரிபப்ளிக்ஸ் என்ற அவர்களது நாடுகள் அழைக்கப்படுகின்றன. வர்க்கப்போர் (முதலாளி-தொழிலாளி சண்டை) படுகொலைகள், யுத்தம் என்ற மா பெரும் கொலைகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது யு. எஸ். எஸ். ஆர். பக்கத்து சிறிய நாடுகளை ஆக்கிரமித்து தனது காலால் மிதித்து, தன்னுடன் ஐக்கியப்படுத்தி, தனக்குத் தானே "யு. எஸ். எஸ். ஆர்.' என்று பெயர் சூட்டிக் கொண்டிருக்கிறது ரஷியா.

ரத்த வெள்ளம் ஓடவைத்த நாஜி ஜெர்மனி, ஸ்டாலின் ரஷியா இரண்டும் அசுரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டவை.

இப்போது குருச்சேவ் தலைமையில் யு. எஸ். எஸ். ஆரில் 5 சதவிகித ஜனநாயகம் காணப்படுகிறது. மேற்கு ஜெர்மனியில் முழு ஜனநாயகம் உள்ளது.

மக்கள் பெருக்கெடுத்த சீனுவும் தன்னை சோஷலிச நாடு என்று அழைத்துக்கொண்டு வயிற்றுக்கு போதிய சோறு இல்லாமல் பக்கத்து நாடுகளை அடித்துத் தின்னலாமா என்ற கோரப் பசியில் உள்ளது.

### அமெரிக்கா

அமெரிக்காவில் ஜனநாயகம் உள்ளது சுபிட்சமும் உள்ளது, முதலாளித்துவம் மூலமே ஐசுவரியத்தைக் கண்டிருக்கிறது அந்த நாடு. இயற்கைச் செல்வம் நிறைந்த அமெரிக்காவை பல இனங்களின் சேர்க்கையால் பிறந்த விறுவிறுப்பான ஜன சமுதாயம் தொழில் வளமாக்கி உலகிலேயே ஆனந்த நாடாகவளர்த்துள்ளது. வீட்டு வேலைக்காரன்கூட சொந்த மோட்டார் வைத்திருக்கிருன்!

### நம் நாடு

பல சமஸ்தானங்கள் நிறைந்த நமது பண்டைய நாடு, மேலை நாடுகளில் விஞ்ஞானம் வளர்ந்த காலத்தில் உள்நாட்டுச் சண்டையில் ஈடுபட்டு, அதன் விளைவாக அன்னியனுக்கு அடிமையாகி, தொழில் வளம் பெருமல், நூறு ஆண்டுகளுக்குமேல் தவியாய்த் தவித்து, இப்போதுதான் தொழில் வளத்தில் முதல் படிவம் தேறியுள்ளது!

ஆனுல் இந்த நாட்டில் ஜனநாயகம் உண்டு. உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு இந்தியா தான். ஜனநாயக சோஷலிசத்தை நடைமுறையில் படிப்படியாகக் கொண்டுவரும் நாடும் இந்தியாவே.

பெரும்பாலான மக்களின் படிப்பின்மை காரணமாக ஜனநாயகம் தேர்தல் காலத்தில் பலியாவது உண்மையே. காசுக்கும், வகுப்பு, ஜாதி உணர்ச்சிக்கும் அடிமைப் பட்டு பல வோட்டர்கள் வாக்குரிமையை பாழ்படுத்துவது உண்மையே. ஆனுல், கல்வி வளர்ச்சி ஆக ஆக இந்த தீமைகளும் நீங்கிக்கொண்டே போகும்.

ஜனநாயக நாட்டில் 24 மணி நேரத்தில் முழு சோஷலியசத்தைக் காணமுடியாது! படிப்படியாகத்தான் காண முடியும். ஏன் என்ருல் பணக்காரர்களை துப்பாக்கி முனையில் பரலோகத்திற்கு அனுப்புவது ஜனநாயகப் பண்பல்ல. திடீர் பறிமுதல்களும் ஜனநாயக முறை யல்ல.

### காமராஜ் வழி

காந்திஜியும் நேருஜியும் காட்டி வந்த ஜனநாயக சோஷசப் பாதையைத்தான் காமரா

ஜும் காண்பிக்கிருர். அவர் கூறியுள்ளதை கவனிப்போம் :

''இன்று நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் ஏழைகள். அவர்களுக்கு போதிய சோறும் துணியும் இல்லை. ஜாகை வசதி இல்லை. 15 ஆண்டுகளில் நாம் பெருக்கிய செல்வம் எங்கே ஏழையின் குடிசையில் இல்லை. அங்கே உடைந்த பாத்திரமும் கிழிந்த துணியும்தான் உள்ளன.

''பெருகிய செல்வம் எல்லோருக்கும் பொது வானது. அதை அனுபவிக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. அதை வாங்கித்தர காங்கிரஸ் பாடுபடுகிறது. சோஷலிச தீர்மானத்தை நமது ஆவடியில் நிறைவேற்றினேம். அதன்படி சம தர்ம சமுதாயத்தை உருவாக்க பாடுபடு வோம்.''

இதுவே காமராஜ் எளிய முறையில் செய்யும் சோஷலிசக் கொள்கை விளக்கம்.

## பணக்காரர் நிலை

மிகப் பெரிய செல்வந்தர்கள் பற்றி காமராஜ ரின் கருத்து இதுதான் :

''ஐந்தாண்டு திட்டங்களால் பலனடைந்த பணக்காரர் நம் சோஷலிசத் திட்டம் குறித்து வருத்தப்படலாம். இதற்கு பயன் கோடிக் கணக்கான மக்களின் நலனை கவனிக்காமல் நாம் இருக்க முடியாது. ஏழைகளின் தர்மகர்த் தாக்களாக பணக்காரர்கள் இருக்கவேண்டும். என்று காந்திஜி கூறினர். மக்களை தர்மகர்த் தாக்கள் மறந்து விட்டால் நாம் சும்மாயிருக்க முடியுமா? திருப்பதி கோவிலில் தர்மகர்த்தாக் கள் இருக்கிருர்கள். உண்டியலில் விழும் கோடிக்கணக்கான ரூபாய்களை பக்தர்களின் நலனுக்காக அவர்கள் செலவு செய்கிருர்கள். அப்படி அவர்கள் செலவு செய்யாமல் தாங் களே எடுத்துக் கொண்டு விட்டால், நாம் சும் மாயிருப்போமா?

சுதந்திர இந்தியாவில் ஏழைகள் சுபிட் சத்தை அடைவார்கள் என்று காந்திஜி சொன் னர். அவர் சொன்னதை நிறைவேற்ற வேண் டியது காங்கிரஸ் பொறுப்பு,''

மேலை நாடுகளைப்போல நாம் முன்னேற வேண்டுமானல் கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்; விவசாயத் துறையில் புதிய முறைகளைக் கையாள வேண்டும்; நாடு தொழில் வளம்பெற வேண்டும்; பெருகும் செல் வத்தை யாவரும் பகிர்ந்து கொள்ள வழி வகை செய்ய வேண்டும் என்பது காமராஜரின் திட்ட வட்டமான கருத்து.

வயிற்றுக்குச் சோறு உண்டு என்ருலே கிராமச் சிறுவர், சிறுமியர் படிக்க பள்ளிக்கு வருவார்கள். ஆகவே, இலவசச் சாப்பாட்டுக்கு காமராஜ் ஏற்பாடு செய்தார். ஏழை பணக் காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோ ருக்கும் இப்போது எஸ். எஸ். எல். சி. வரை கல்வி அளிக்கப்படுகிறது. சோஷலிசத்திற்கு அஸ்திவாரம் இது.

## அதிகார வர்க்கம்

அரசாங்கம் தனது கொள்கைப் பிரகடனம் செய்தால் மட்டும் போதாது. அதிகாரிகள் அத்துடன் இணைந்து வேலை செய்யவேண்டும். சுதந்திர இந்தியாவில் அப்படி வேலை செய் கிருர்களா என்ருல், ''ஆம்'' என்று சொல்லி விடுவதற்கில்லை. பெரும்பாலான அதிகாரிகளி டையே பழைய ஜபர்தஸ்தே காணப்படுகிறது. மக்களின் சேவகர்கள் தாங்கள் என்பதை அவர்களில் பெரும்பாலோர் உணரவில்லை.

எஜமானர்கள் என்ற எண்ணம் இன்னும் இருக்கிறது. எதையும் பைசல் செய்வதில் பெரும்பாலான அதிகாரிகள் காலதாமதமே செய்கின்றனர். இதனல் ஊழல்களுக்கு இட மேற்படுகிறது.

எனவே, அவ்வப்போது அதிகாரிகளுக்கு மந்திரிகள் அதிர்ச்சி வைத்தியம் தரவேண்டும். அவர்களின் மனத்தை காலப்போக்குக்கு ஏற்ற வாறு வளைக்கவேண்டும்.

## இன்றைய தலைமை

விடுதலைப் போரில் வீரராக இருந்து, தேர்தல் போரில் தீரராக விளங்கும் காமராஜர் உண்மை யிலேயே ஜனநாயக சோஷலிசத்தில் நம் பிக்கை கொண்டிருப்பது இந்நாட்டின் அதி ருஷ்டம்.

கட்சித் தலைமையில் இவர் இருப்பதால் ஊழல் முதல் மந்திரி கெய்ரோன் விரட்டியடிக் கப்பட்டார். ஊழலில் இறங்கும் எல்லா மந்திரி களுக்கும் இதே கதிதான் என்று காமராஜ் எச் சரித்தும் விட்டார்.

அதிகார வர்க்கத்திற்கு இது ஒரு எச்சரிக்கை என்பதில் ஐயமில்லை.

## தூய உள்ளம்

ஜனநாயக சோஷலிய லட்சியத்தை நிறை வேற்றி வைக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் தூய உள்ளமுடையவர்களாக இருத்தல் அவசி யம். இல்லை என்ருல், லட்சியப் பிரகடனம் வெறும் ஏட்டுச் சுரக்காயாகவே இருக்கும்!

ஜனநாயக முறையில் சோஷலிசத்தை அடையும் பாதை நீளமானது. இது தவிர்க்க முடியாதது. ஜனங்களின் சம்மதம் பெற்று முக்கிய திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டு மாகையால், லட்சியத்தை அடைவதில் தாமதம் ஏற்படத்தான் செய்யும். ஆனல், லட்சியத்தை மட்டும் நிச்சயமாக அடைய முடியும்.

லட்சியத்தை அடைய யாத்திரை செல்லும் படகாகிய காங்கிரஸுக்கு காப்டனாக ஒரு தமிழர் இருப்பது குறித்து தமிழகம் இன்று பூரிப்படைவதில் ஆச்சரியம் இல்லை.

# வேண்டுகோள்!

துங்கநகர் இர. கதிரவன்.

அன்பின் தலைவர் வாழியவே!
தொண்டின் தலைவன் வாழியவே
எங்கள் தலைவன் வாழியவே!

நாட்டில் எளிமை வாழ்வைப் போற்ற
எளிய நீயும் சொல்வாய்
கடமையைப் பெரிதெனக் காட்ட
பதவியை உதறச் சொல்லி....
பலர்முன் நீயேசெய்து எங்கள்
பேரன்பை நீயும் பெற்றாய்!

ஆடிஓடிப் பணிபுரிந்து நாட்டு
வாட்டம் போக்க முயன்றிடுவாய்.
பதவியை என்றும் மதியாயே....
பணியை மகிழ்ந்து செய்வாயே...
குடத்துள் விளக்காய் இல்லாமல்
குன்றின் விளக்காய் ஒளிவீசும்

குன்று உந்தன் புகழதனை
உலக ஏடு பல கூறும்;
ஆடிஓடு வயதினிலே வசதியில்லாமல்
நற்கல்வி இழந்த நீயும்
ஆழ்ந்து அதனை உணர்ந்து அன்பாய்
வசதிபலவும் செய்தாய்.

இன்பமூட்டும் இலவசக் கல்வியோடு
இலவச உணவைத் தருவாய்
இங்கும் அங்கும் சென்றிடுவாய்
இனிய பலவும் நடத்திடுவாய்
தங்கத் தமிழில் பேசிடுவாய்
தங்கும் புகழைப் பெற்றவனே!

தரமாய் இருசொல் பேசிடுவாய்
தக்க பலவும் ஆற்றிடுவாய்
குறையா ஆயுள் பெற்றிடுவாய்
குறையாப் பணியை தொடர்ந்திடுவாய்
அன்பாம் நாங்கள் வேண்டுவமே...
இயற்கைத் தாயை மனமுவந்து

**Modern Weapons and quick Development**
**are the prime need of**
**National Defence**
**But both need lot of money**

*What should we do ?*

> *" We must add greatly to our savings by the purchase of bonds to help finance production and meet the increasing cost of National Defence."*
>
> *—JAWAHAR LAL NEHRU*

*Save as much as you can*
*&*
*Invest your money*
*in*

**NATIONAL SAVINGS**

***Buy***

- 12 - Year National Defence Certificates
- 10 - Year Defence Deposit Certificates
- Premium Prize Bonds

***and earn***

*Attractive Income-Tax Free Interest*
*on your savings*

*For details: Please contact District Organiser, National Savings.*

**ISSUED BY INFORMATION DIRECTORATE.**
**UTTAR PRADESH**



# சீரிய பண்புக்கு வாரிசு காமராஜ்

எஸ்.டி.ஜெயபாண்டியன்

## எளிமையில் காந்தி! தியாகத்தில் நேரு! உறுதியில் பட்டேல்!

நாட்டாண்மைக்கார வீட்டுப் பிள்ளையாக காமராஜ் 1903-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி விருது நகரில், குமாரசாமி நாடாருக்கும் சிவகாமி அம்மாவுக்கும் பிறந்தார். ஆருவது வயதை அடைந்ததும் தந்தை மறைந்தார். படிப்பில் மனம் ஈடுபாடு கொள்ளவில்லை. தன் மாமனுடைய துணிக்கடையிலும், காய்கறி கடையிலும் வேலைபார்த்து வந்தார். வியாபாரத்தில் அவருக்கு நல்ல கைராசி உண்டு. ஆனால் அவருடைய கவனம் வேறு பக்கம் திரும்பியிருந்தது.

இளமை முறுக்கு கொண்ட காமராஜ், அன்னை பாரதமாதாவின் அடிமை விலங்குகளைத் தகர்க்க வேண்டுமென்று, வீட்டுப்பாசம் பந்தமணைத்தையும் நீக்கி வீட்டைவிட்டுக் கிளம்பினார். தேசம் சுதந்திரம் அடையும் வரை கல்யாணப் பேச்சே கூடாது என்று சபதமெடுத்தார். மற்றவர்களைப் போல் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றவேயில்லை. அதனால் வீட்டாருக்கு வேண்டாத பிள்ளையாகவே அவருடைய பிள்ளைப் பருவம் கடந்தது.

இளமையில் சடுகுடு ஆட்டம் என்றால் அதிகப் பிரியம். அவருடைய தலைமையில் ஒரு குழு அமைந்திருந்தது. அந்த நண்பர்களின் உதவியால்தான் காங்கிரசின் இயக்க வேலைகளைக் கவனிக்க முடிந்தது. தினந்தோறும் பத்திரிகைகள் படிக்கத் தவறுவதில்லை. கதைகளில் நாட்டம் கொள்ளாமல், லெனின், கரிபால்டி, நெப்போலியன் போன்ற செயல் வீரர்களின் வரலாறுகளைப் படிப்பார்.

காங்கிரசின் கொள்கைகளும், நோக்கங்களும் காமராஜை வெகுவாக ஈர்த்தன. அந்தக் காலத்தில்தான் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரைப் பற்றியும், அவர் ஆரம்பித்த 'ஹோம் ரூல்' கிளர்ச்சி பற்றியும் கேள்விப்பட்டார். அந்த இயக்கத்தில் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்.

பஞ்சாப் படுகொலை நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியது. தேசத் தலைவர்கள் அதைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். காமராஜ் அவைகளைக் கவனமாகப் படித்தார். அவர் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த சுதந்திர தாகம் கனல் விட்டெரிந்தது. அன்று முதல் தேசீயத் தொண்டன் ஆனார்.

அடுத்தபடியாக மக்களைக் கவர்ந்தது கிலாபத் இயக்கம். முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து காந்தியின் தலைமையில் கிளர்ச்சி தொடங்கினார்கள். அதையும் கூர்ந்து கவனித்தார் காமராஜ்.

ஆங்கில ஆட்சியின் கொடுமைக்கு பரிகாரம் காண ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தார் காந்திஜி. காமராஜின் சிந்தனை அதிக வேகமாக இதில் இறங்கியது,

காங்கிரசின் இயக்க வேலையில் முழு மூச்சாக இறங்கிய காமராஜுக்கு, டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவின் தொடர்பு 1919-ம் ஆண்டு கிடைத்தது. காமராஜின் இளமை துடிதுடிப்பைக் கண்ட டாக்டர் அவரை இயக்க வேலைகளில் நிபுணர் என்று பிரகடனப் படுத்தினார். ஆபத்தான சமயத்தில்கூட காமராஜ் துணிச்சல், மதிநுட்பம் காட்டுவார் என்றும் கூறினார்.

தேசீய நடவடிக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து நடந்தன. கிளர்ச்சிகளிலும் காமராஜ் குதித்தார். தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தவர்களுக்காக, திருவனந்தபுரத்தில் ஒரு கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. அந்தப் பிரச்சனை சூடு பிடித்தது. காந்திஜி இதில் தலையிட்டு தீர்த்து வைத்தார். அதுமுதல் காந்தியிடம் தொடர்பு உண்டாயிற்று.

சத்தியமூர்த்தியின் சகா காமராஜ். காமராஜின் எளிமையும், எளிதில் புரிந்து கொள்ளும் சக்தியும், சிந்தனைத் தெளிவும், காரியமாற்றும் திறனும், கருத்தாழமும் சத்தியமூர்த்தியை வெகுவாகக் கவர்ந்தன. அவருக்கு உற்ற நண்பரும் ஆனார். 1935-ம் வருடம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் சத்தியமூர்த்தி. காமராஜ் காரியதரிசியாகப் பணியாற்றினார். 1937-ல்

நடந்த தேர்தலுக்கு, காமராஜின் உழைப்பு அசாத்தியமானது. காங்கிரஸ் வெற்றி பெற்ற தற்கு காமராஜின் இயக்க வேலைபாடுகளே காரணம் என்று கூறலாம். 1937-ல் காமராஜ் சட்டசபைக்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

காந்திஜி ஆரம்பித்த உப்புச் சத்தியாக்கிரகத் தில் பங்கு கொண்டார் காமராஜ். வேதாரண் யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகத்தில் காமராஜ் சட்டத்தை மீறியதற்காக இரண் டாண்டுகள் சிறைவாசம் சென்றார். 1931-ல் காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டபோது விடுதலையானார். அந்த ஒப்பந்தம் முறிந்தபின் ஆங்கில ஆட்சி தேசபக்தர்களைக் கொடுமைப் படுத்தியது. காமராஜ் கைதாகி ஒருவருடம் சிறையில் அடைக்கப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தில் காமராஜ் மொத்தம் 3000 நாட்களை சிறையில் கழித்தார்.

காமராஜ் 1940-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். இந்தத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. காமராஜ் ராஜாஜி பலப்பரீட்சை இதில்தான் ஆரம்பித்தது. காமராஜ் மூன்றே மூன்று ஓட்டுகள்தான் அதிகம் பெற்று வெற்றி கண்டார். ஆனால் குறுகிய காலத்தில் எல்லோ ரையும் தன் வசப்படுத்திக் கொண்டார் அசைக்க முடியாதத் தலைவரானார். அவர் அன்று கட்டிய தலைமை இன்னும் உடைபட வில்லை.

காமராஜ் 1946-ல் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். சுதந்திரம் பெற்றபின் நடந்த முதல் பொதுத் தேர்தலில் காமராஜ் மத்திய சட்டசபைக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் 1953-ல் ராஜாஜி தமிழக முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும், காமராஜ் பெரு வாரியான ஆதரவு பெற்று முதலமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அதனால் பார்லி மெண்ட் மெம்பர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, குடியாத்தம் இடைதேர்தலில் சட்ட சபைக்குப் போட்டிபோட்டு வெற்றி கண்டார்.

தேச சுதந்திரத்துக்கு முன் இதர சொத்து சுகவாழ்வெல்லாம் அற்பம் என்று உதறிவிட்டு, தன் வாழ்க்கை நெறியை முடிவு கட்டிவிட்ட காமராஜ், கரைபோடாத நாலு முழ வேட்டி யும், காலர் இல்லாத சாதாரண முக்கால் கை சட்டையும்தான் அன்று முதல் இன்று வரை அணிந்து வருகிறார்.

மதுரையில் காமராஜ் முதல் முதல் கண்ட காந்தி எளிய சந்நியாசிக் கோலம் தாங்கி, பிரம்மச்சாரிய வாழ்க்கை விரதம் பூண்டு காணப்பட்டார். அடிகளின் பேச்சு காம ராஜுக்கு புத்துணர்ச்சியை உண்டாக்கி, அந் நியரை விரட்டும் போராட்ட வீரனாக்கியது. காங்கிரஸ் மேடையில் காமராஜ் பேச ஆரம் பித்த முதல் பேச்சே வெற்றி பேரிகையாக அமைந்தது. காமராஜ் கேள்விக் குறிபோட்டுப் பேசுவது அன்றே ஏற்பட்டது. பாமர மக்க ளுக்கு சுலபத்தில் புரியுமளவுக்கு பேச முடிந் தது. அந்த முறையை இன்னும் காணலாம்.

மக்களே காமராஜின் பல்கலைக் கழகம். மக்கள் என்றால் மற்றதை மறந்து விடுவார். அவர்கள் விரும்புவதைச் செய்வதே தன் கடமையெனக் கருதுகிறார். பெருவாரியான மக்கள் விரும்புவதுதான் நடக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர். குறைபாடுகள் கேட்டு நிவர்த்திப்பதில் முக்கிய கவனம் செலுத்தினார். அதற்காக சட்ட திட்டங்கள் கொண்டுவர முன் வருவார். கொடுமையான சட்ட விதிகளை நீக்கவும் வேண்டியன செய் கிறார்.

கேள்விக் கல்விதான் காமராஜுக்கு அதிகம், மேதைகளோடும், அரசியல் வாதிகளோடும் பேசிப் பேசி பேச்சுத் தெளிவும், கேட்டுக் கேட்டு கேள்வி ஞானமும் விரிவடைந்து விட் டது, பாமரரோடு பேசும் பொழுது அவர் களுடைய உள்ள உணர்ச்சிகளையும் குறைபாடு களையும் உணர்ந்து விடுகிறார். மனிதரில் உயர்வு தாழ்வு பார்ப்பதில்லை. மேதைகளையும், தலைவர்களையும், வெளிநாட்டு முக்கியஸ்தர் களைக் காணும்போது தன்னைத் தாழ்த்திக் கொள்வதோ அல்லது குடியானவர்களையும் ஏழை எளியவர்களைப் பார்க்கும்போது தன்னை உயர்த்திக்கொள்வதும் கிடையாது.

மக்கள் மத்தியில் இவ்வளவு செல்வாக்கும் பெற்றுவர படிப்போ, பிறப்போ, பணமோ காமராஜுக்கு துணையாக இருந்ததுமில்லை, உதவியதுமில்லை, எளிய தடையும், உடை யும், மக்களுக்காகத் தன்னைத் தியாகம் செய்த தையும் தவிர அவருக்கென்று ஒன்று உலகில் இல்லை. இது சரித்திரத்திலே காண முடியாத அதிசயம்.

தடைகளையும் இடுக்கண்களையும் மீறி முன் செல்ல வேண்டுமானால் மாபெரும் சக்தி ஒன்று இருக்கவேண்டும். அந்தச் சக்தியை யாராலும் தெரிந்து கொள்ள முடியாது. அது என்றும் இரகசியமாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

காமராஜ் நிர்வாகத்தில் நுழைந்தபோது, அவரால் அதை இயக்கிச் செல்லமுடியுமா என்று பலர் ஐயம் கொண்டார்கள். ஆனால் வல்லவர் என்று சாதித்துக் காட்டினார். அவ ருக்கு எதுவுமே கடினமானதல்ல என்று நிரு பித்து விட்டார். மதிப்பிற்குரிய பிரதம மந்திரி மறைந்த நாடு அவல நிலையில் இருந்ததைவிட ஒரு நெருக்கடியான சூழ்நிலை இருக்க முடி யாது. அதைக் காமராஜ் அன்றி யாராலும் சமாளித்திருக்க முடியாது, என்றும் உலகுக்கு உணர்த்திவிட்டார்.

அவரது நிர்வாகத்தில் ஏற்பட்ட அபார முன்னேற்றங்களுக்காகத் தமிழகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. விவசாயத்தையே நம்பியிருந்த தமிழகம், காமராஜின் பத்தாண்டு கால ஆட்சியில், தொழில் வளமிக்க ராஜ்ய மாக மாறியது. கிராமங்களிலும் கூட பல்வேறு தொழில்கள் பெருகி இருப்பதக்கு உரிய பெருமை அவரைச் சாரும்.

கல்விவாசமற்ற மக்களுக்கு பள்ளி இறுதி வகுப்பு வரை கட்டாயப் படிப்பு வேண்டு மென்று உணர்ந்து இலவசப் படிப்புக்கு ஏற் பாடு செய்தார். ஏழைப் பிள்ளைகளுக்கு மத்தி யான உணவு கொடுத்து அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். படிப்பதால் ஊக்கம் பிறக்கும், அதனால் எந்தவகையிலாவது உழைத்து சம்பா திக்க வழி ஏற்படும், அதனால் நாடு முன்னே றும் என்று உணர்ந்த காமராஜ் பட்டித் தொட்டிகளெல்லாம் பள்ளிகள் அமைத்தார்.

நாட்டின் நாடித் துடிப்பை நன்கு உணர்ந்த வர் காமராஜ், காங்கிரஸ் வரலாற்றில் காமரா ஜின் தலைமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந் தது. காங்கிரசிலிருந்து பிரிந்து சென்ற சக்தி களெல்லாம், திரும்பவும் காங்கிரசில் கூடும் காலம் இது. அவர் அக்ரசானர் ஆனதும் ஜனநாயக சக்திகளும், சோஷலிச சக்திகளும் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்று சேர வேண்டுமென்று அறைகூவல் விட்டார். எல் லாரும் அதற்குச் செவிமடுத்துள்ளனர்.

புரட்சிகரமான திட்டங்கள் தீட்டுவதில் காம ராஜ் இணையற்றவர். மூத்த அமைச்சர்களெல் லாம் பதவி விலகி காங்கிரஸ் ஸ்தாபனத்தை கவனித்தால்தான் அதன் பலன் வளரும் என்று உணர்ந்து 'காமராஜ் திட்டம்' கொண்டு வந் தார். உலகத்திலே அது ஒரு புதுமையான திட்டமாக வரவேற்கப்பட்டது.

அமைச்சராக இருப்பதால் மக்களுடைய உண்மையான குறைகளைக் கவனிக்க முடிய வில்லை என்றும், அலுவகத்திருந்து மக்களின் குறைகளை கவனிக்க முடியாது என்றும் அறிந்த காமராஜ் பதவியை விட்டு விலக முன் வந்தார். காங்கிரஸ் தலைவர்களும், சட்ட சபை அங்கத்தினர்களும் ஊர் ஊராகச் சென்று வரவேண்டும் என்று விரும்பினர். அவர் கால் படாத ஊர் தமிழ்நாட்டில் கிடையாது. நேரில் மக்களைச் சந்திப்பதால் கண்ணால் பார்க்கவும், காதால் நேரில் கேட்கவும் முடிகிறது.

காமராஜ் சேவையில் தமிழ் அன்னை மகிழ் கிறாள். பரந்த பாரத நாட்டில் ஆங்கிலப் படிப் பில்லாமல், வேறு மொழியிலும் பயிற்சியில்லா மல், தமிழ் ஒன்றையேக் கொண்டு பிரச்சினை களைத் தீர்த்து நாட்டை ஒற்றுமையோடுக் கொண்டு செல்வதென்பது ஒரு அரிய சாதனை. ஆனால் காமராஜரைப் பொருத்த மட்டில் அவரது ஆற்றலுக்கு எதுவும் நிகரில்லை. இதற்கு மேலும் செய்யக்கூடியவர் என்பதை வருங்காலம் காட்டும்.

காங்கிரஸ் மகாசபையில், அக்ராசனர் பதவி பெரும் மகத்துவம் வாய்ந்தது. ஆனால் சுதந் திரமடைந்தபின் இந்தப் பதவியின் மதிப்பு குறைந்து வந்தது. காமராஜ் அந்தப் பதவியை அடைந்ததும், மீண்டும் பழைய பெருமை திரும்புகிறது. அக்ரசானர் பதவி, கட்சிக் கொள்கைகளையும், நாட்டுக்குரிய சீரிய காரியங் களையும் நடத்தும் கேந்திர பதவியாக உயர்ந்து விட்டது என்பதில் ஐயமில்லை.

காமராஜ் ஆஜானுபாகுபோல் உயர்ந்த உடல் கட்டமைந்தவர். பிரம்மச்சாரி. நேரு போன்ற தியாகி. உறுதியான கொள்கைக்குப் படேல் போன்றவர். காந்திஜியின் எளிமை— வாரிசும் கூட. காந்தி வளர்த்த காங்கிரசைக் கட்டிக் காத்து வளர்ந்து வருபவர். சாதனைகள் பல ஏற்பட காமராஜ் பல்லாண்டு வாழ்வாராக.

## எப்படி திருத்துவது?

பழைய காலத்தில் காசி யாத்திரை போவது என்றால் சிரமம், பல மாதங்கள் ஆகும். இப்பொழுது டில்லிக்கு வேண்டுமானாலும் சீக்கிரத்தில் போகலாம்; ரயில், மோட்டார், ஆகாய விமானம் எல்லாம் இருக்கின்றன. அதாவது நாட்டில் இன்று பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தேவைகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதை உணர்ந்து நாமும் வாழ வேண்டும். ஆனால் சிலர் இதை உணர மறுக்கிறார்கள். கட்டை வண்டியில் சவாரி செய்து கொண்டிருந்த காலம் தான் உயர்ந்தது என்கிறார்கள். அவர்களை எப்படி திருத்துவது.

—காமராஜ்

# கதர்
# கிராமத் தொழில்கள்

லட்சக் கணக்கான கிராம மக்களை

- ஓய்வு நேர வேலையும்
- உபரி ஊதியமும்

அளித்துக் காக்கின்றன

கதர் கிராமத் தொழில்களை ஆதரித்துக்
கிராமப் புனரமைப்புப் பணியில்
பங்கு கொள்வோமாக

**காதி இலாகா**

*தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் போர்டு*

# அற்புதத் தலைவர்



— எஸ். அம்புஜம்மாள் —

**பத்மஸ்ரீ எஸ். அம்புஜம்மாள் அமரர் சீனிவாசய்யங்கார் அவர்களின் அருமைப் புதல்வி. தியாகி சீனிவாசய்யங்கார் அவர்கள் ஒரு காலத்தில் அலங்கரித்து வந்த அ. இ. கா. கமிட்டித் தலைவர் பீடத்தை இன்று கர்மவீரர் காமராஜர் அவர்கள் அலங்கரித்து வருகிருர். இவரை ஒரு அற்புத மனிதராக பத்மஸ்ரீ அம்புஜம்மாள் காணும் விதத்தை நீங்களும் கண்டு களியுங்கள்.**

பாரத நாட்டின் விடுதலைக்காக இந்நாட்டிலே எண்ணற்றவர்கள் இளமையிலேயே ஈடுபட்டுத் தம் வாழ்வை வழங்கியதுண்டு. தம் இளமை எதிர்கால வாழ்வு, வாழ்வின்பம், மனைவாழ்வு பெற்ருேர் சுற்றத்தார் நிலை போன்றவற்றை சிறிதும் சிந்தியாது தாய்நாட்டின் விடுதலையே தம் வாழ்வாக வாழ்வின் பயனாக குறிக்கோளாகக் கொண்ட பலருண்டு. அத்தகையோரில் இன்று பாரத நாட்டின் அரசியலுக்கே கலங்கரை விளக்காய்த் திகழும் காமராஜும் ஒருவர். சிற்றூராக அந்நாளில் எண்ணப்பட்ட விருதுநகரிலே சாதாரண குடும்பத்திலே பிறந்த காமராஜர் இன்று அசாதாரண மனிதராக மட்டுமல்லாது, அகில உலகமுமே மூக்கில் விரல் வைத்து வியக்கும் அளவில் தீராத அரசியல் பிரச்னைகளை எல்லாம் தீர்த்து வைக்கும் திறமை பெற்றுவிளங்குகிருர். இதற்கு அவர் தம் தாய் நாட்டுப் பற்று தன்னலமற்ற தன்மை, ஓயா உழைப்பு, ஊக்கம், எளிய வாழ்வு, எவரோடும் பழகும் இதயம் எதையும் முடிக்கலாம் என்னும் உறுதியான உள்ளம் ஆகியவையே காரணம் எனில் மிகவும் பொருந்தும்.

மாடு, மனை, மக்கள், சுற்றம், அணி, மணி என்றில்லாது தாம் பிறந்த பொன்ளுட்டின் வாழ்வே-ஏழைகளின் வாழ்வே தம் வாழ்வாக மதித்து, மனைவாழ்வையே கருதாது அன்று தொட்டு இன்றுவரை பாடுபட்டு வரும் திரு. காமராஜரை தியாகி என்று பேசுவதா? மக்கள் துயர் துடைக்க வந்த மாபெரும் தீரர் என வாழ்த்துவதா? யான் அறியேன்.

எண்ணிறந்த மக்கள் ஏழைகளாய் நாயினும் மிக நலிந்து பஞ்சத்திலும் துன்பத்திலும் படாத பாடுபட்டுக் குற்றுயிராய் இந்நாட்டிலே கிடந்த நிலையிலே மனைவி மக்களைத் துறந்து காவி கட்டி, சடை தரித்துக் காட்டிலே இருந்து மூச்சைப் பிடித்து மூச்சை அடக்கி யோகத்திலே அமரும் வாழ்வைத் திரு. காமராஜர் விரும்பவில்லை. பாட்டாளிகளாகப் பாதைகளிலே கல்லுடைத்துப் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே ஆண்டவன் பொலிகின்ருன் என்று கவிதை மன்னன் தாகூரின் பொன் மொழிப்படி தரித்திர நாராயணராய் வயல்களிலே நிலங்களிலே புலங்களிலே பாதைகளிலே மலையடிவாரங்களிலே உழைத்து ஒட்டிய வயிற்றினராய் ஒடுங்கிய கனனத்தவராய் பணியாற்றிப் பட்டினியாய்க் கிடந்த பாரத தேச மக்கள் நிமிர்ந்துவாழ நெஞ்சம் குளிர்ந்துவாழ வாழ்வை வழங்கிய, தம்மை அர்ப்பணித்த அற்புத மனிதர் திரு. காமராஜர் எனில் மிகவும் பொருந்தும்.

மன்னருக்கு நிகரான செல்வ மரபிலே பிறந்து இளமையிலேயே இங்கிலாந்தில் கல்வி கற்று பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் தாய் நாடு திரும்பிய தலைவர் முடிசூடா மன்னர் நேருவின் சிந்தை பொன்னையும் புகழையும் நாடவில்லை; தாய்த் திருநாடு அந்நியர் ஆட்சியில் அல்லலுறுவதைக் கண்டு கலங்கியது; இந்நாட்டுப் பலகோடி மக்களின் விடுதலையில் ஈடுபட்டது. அதற்காகவே தம் இறுதி மூச்சு உள்ளவரை உழைத்தார். அவ்வாறே தென்னகத்தே மக்கள் துயர் கண்டு மனம் துடித்தார் காமராஜ்; அவர் தம் வறுமையும் ஏழ்மையும் கண்டு சிந்தை கலங்கினுர்; அறியாமை கண்டு வருந்தினுர். இவற்றை யெல்லால் நீக்கி இனிய

தமிழ் நாட்டை, இன்பப் பாரதத்தைக் காணுதலே தம் பிறவியின் பெரு நோக்க மாக வாழ்வின் குறிக்கோளாகக் கொண் டார். அன்று முதல் இன்றுவரை அதற் கெனவே பாடுபட்டு வருகிறார்,

தமது சலியா உழைப்பால், தன்ன லம் துறந்த தன்மையால் தியாகத்தால், தம்மையே தம் வாழ்வையே, நாட்டிற்காக அர்ப்பணித்த நற்பணியால் முதல் அமைச் சர் பதவி அவரைத் தேடி அடைந்து பெருமை பெற்றது. இதுகாறும் வர லாறு காணா வகையில் மாற்றாரும் போற் றும் முறையில் மக்கள் தலைவராய் அவர் ஆட்சி செலுத்திவந்தார். இந்நிலையில் பதவியைத் துறந்து மக்களோடு மக்களாய் ஏழையோடு ஏழையாய் தோள் கொடுத் துத் தொண்டாற்றி வாழ விரும்பிய நிலை யில் தம் முதல் அமைச்சர் பதவியைத் 'துறவிக்கு மன்னர் பதவியும் ஓர் துரும்பு' என்பது போலத் துறந்தார். அவரது பதவித்துறவு பாரத நாட்டு மக்கள் மனத்தை மட்டு மல்லாது, பாரிலுள்ள அரசியல் தலைவர்களை, அறிஞர்களை, தத் துவ ஞானிகளை—ஏன் – எல்லோரையுமே கவர்ந்தது.

சேவை செய்தற்குப் பதவி ஒரு கருவியாக இருத்தல் உண்மை எனினும் சேவை செய்வார்க்குப் பதவி இன்றியமை யாததன்று என்ற உண்மையை திரு. காமராஜர் நன்கு உணர்ந்தவர். ஆதலா லேயே பதவியைத் துறக்க முன்வந்தார். தமிழ்நாட்டுத் தலைமைப் பதவியைத் துறந்த அவரைப் பாரத நாட்டுத் தலை மைப் பதவியே நாடி வந்தது. "வேண் டாமை வேண்டவரும்" எனும் திருக்குற ளுக்கு எடுத்துக் காட்டாக அவர் வாழ்வு விளங்குகிறது.

திரு. காமராஜர் காட்சிக்கு எளியவர். சுருக்கமான சொல்லும், விரிவான செய லும் உடையவர். ஏழையின் தோழர்; எளியவரின் நண்பர்; ஏழை விவசாயி களின் பிரதிநிதி. தம்முடன் பழகியவர் எவராயிருப்பினும் தம் நிலை, பதவிச் சிறப்பு அனைத்தையும் மறந்து அவரை மறவாது, அவர் தம் நட்பைப் போற்று பவர்; அவர் தம் குலத்திடம் நன்றியுடைய வர். தம்முடன் வாழ்ந்த காலஞ் சென்ற திரு. சத்தியமூர்த்தி அவர்களிடம், அவர் குடும்பத்தினரிடம் அவர் கொண்டிருந்த அன்பும் பாசமுமே இதற்குச் சான்று. கனம் சத்தியமூர்த்தி அவர்கள் மண்ணை விட்டு மறைந்தாலும் திரு. காமராஜரின் மனத்தை விட்டு இன்றும் மறையவில்லை. இவ்வாறே இளம் பருவந் தொட்டுத் தம் முடன் பழகிய பலரையும் அவர் மறந்த தில்லை.

நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலே பங்கு கொண்ட பலருள் என் தந்தை திரு. ஸ்ரீனிவாச ஐயங்காரும் ஒருவர். சென்னை யிலே வழககறிஞராய் வாழ்ந்த அவர் தம் வாழ்வை நாட்டின் விடுதலைக்காக அர்ப் பணித்த செயல் நல்லார் பலரைக் கவர்ந் தது. திரு. காமராஜர் என் தந்தையின் பணி கண்டு, தியாகம் கண்டு, தொண் டுள்ளம் உணர்ந்து அவரிடம் ஈடுபட்டிருந் தார். ஆதலாலேயே ஆவடிக் காங்கிரஸின் வரவேற்புக் குழுத் தலைவியாக என்னை ஏகமனதாய்த் தேர்ந்தெடுத்தார். இது அவர் என் தந்தைமீது வைத்திருக்கும் மதிப்பைக் காட்டுவது மட்டுமல்லாது, மாதர்கள் இந்நாட்டிலே சிறந்த நிலை அடையவேண்டும் என்ற அவர் தம் எண் ணத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

திரு. காமராஜர் கல்வி, அரசியல் முத லிய பலவகைத் துறைகளிலும் மாதரினம் முன்னேற்றமுற வேண்டுமெனும் நன் னோக்கம் கொண்டவர். சிறப்பாகப் பட்டி தொட்டிகளிலே கிராமங்களிலே பாடு படும் பெண்களும் குழந்தைகளும் சிறந்த நிலை அடையவேண்டும் என்ற சிறந்த எண்ணம் படைத்தவர். எனவே, மாதர் குழந்தைகள் நலக் கூட்டங்கள் மகாநாடு கள் ஆகியவற்றிற்கு அவரை அழைக்கும் போதெல்லாம் அவர் தயங்காது வந்து அறிவுரை தந்ததுண்டு; ஆலோசகனைகள் வழங்கியதுண்டு. பஞ்சாயத்து ராஜ்ய மாக நாட்டை மாற்ற முயன்றபோது பஞ் சாயத்திலே உறுப்பினராகவும், மற்றும் பல நிலையிலும் மாதர்கள் பங்குகொள்ள வேண்டும் என நான் அவரிடம் கூறிய போது அதை அவர் வரவேற்றதுடன் அவ்வாறு மாதர்கள் பங்குகொள்ள வழி வகைகளை வகுத்தார். இப்படிப் பட்ட அந்த அற்புதத் தலைவர் நீடூழி வாழ்க !

Telegrams : VASANTA. Telephone : 5522.

# THE VASANTA MILLS LIMITED.

REGISTERED OFFICE:

**SINGANALLUR. : : COIMBATORE DT.**

Authorised Capital : Rs. 30,00,000.

Paid up Capital : Rs 25,50,000.

**SPINDLES : 48,124. LOOMS : 289**

**Managing Agents :—**

## R. K. SHANMUKHAM CHETTY & Bros.,


**SPINNING:**

**Ring yarn of all counts ranging from Nf. 17 to 84.**

| | |
|---|---|
| *SINGLE* | *DOUBLE* |
| *CHEESES* | *CONES* |
| *STAPLE FIBRE* | *GASSED AND MERCERISED* |

**MANUFACTURING :**

| | |
|---|---|
| *GADA* | *DHOTIES* |
| *MULLS* | *TOWELS* |
| *LONGCLOTH* | *TERRY TOWELS* |



# படிக்காத மேதை எனும்

( ஸி. ஆர்.

எழுத்தெண்ணிப் பலபயின்ற பெரியோர் தாமும்
எதிர்மாற்றம் இயம்புதற்கு இயலாவாறு
பழுத்த அறிவொளியோடும் பண்பினோடும்
பகுத்தறிவுச் செறிவோடும் பான்மையோடும்
செழுத்ததிறம் படைத்தபெரும் செம்மலைத்தான்,
செந்தமிழர் அன்பனைத்தான், தென்னவனைத்தான்
இழித்தமனம் படைத்த சிலர் ஏனோ வீணே
'எடறியா மேதை'யென இயம்புகின்றார்?
பழிச் சொலிதைக் கேட்கவுளம் பதைக்குதையோ,
'படிக்காத மேதை'எனல் பண்புதானோ?
எழுச்சிமனம் கொண்டு சகத் துள்ளோர் தமக்கு
எண்ணறிய நன்மைசெய எண்ணிநாளும்
விழிப்புடனே வேலை செயும் மேதை தன்னை,
விண்ணவரின் நல்லவனை, விருதுநகர்
தழைக்கவந்த வித்தகனை, தமிழர் நெறியால்
தனிவடவர் தமையேவெல்லும் தகையவனை,
தலைய மைச்சன் இறந்துபட்டு நாடுதோளா
தவிதுயரில் ஆழ்ந்தபோது மீகாமகை
அலைகடலில் நாவாயூர்ந் தமைதியோடு
அருங்கரைக்குக் கொணர்ந்தவனை, அல்லல்மிஞ்சி
மலையளவாய் மாசுபடர் பாஞ்சாலத்தில்
மாஞாலம் வியக்கவழி வகுத்தவனை,
சிலைவடித்த மேனியனை, தீந்தமிழர்
நிலைகெடுப்போர் பகைகெடுக்கும் நெஞ்சகனை,

# பழிச்சொல் வேண்டாம்!

நரசிம்மராஜ் )

குலைநடுக்கம் கொளக் குறைவாய்க் கூறுகின்றார்.
குந்தாணிக் கல்போலக் குந்திருந்து
மலைமலையாய் எழுத்தெண்ணி மண்டைவீங்க
மாளாது படித்தவர்தாம் மேதையாமோ?
கலைக்கூடப்பட்டங்கள் நற்சான்றிதழ்கள்
கணக்கற்றுப் பெற்றவர்தாம் கலைஞராமோ?
விலைமதிப்பு இல்லாத அனுபவத்தால்
வேணதிறன் பெற்றவர்கள் மேதையன்றோ?
'படித்தல்' எனில் புத்தகத்தைப் படித்தலென்னும்
பண்பற்ற முறையதனை தகர்க்கவேண்டும்;
தொடுத்தவியன் புவியெல்லாம் பொருள்களெல்லாம்
தோலாத கலைசெப்பும் கூடமென்றும்,
முடித்ததிறன், மூதுணர்வு, மெய்ம்மைஞானம்
முழுதுடைய பெரியோரே மேதையென்றும்
'படித்த' சிலர் அறியுந்திறன் பெற்றுவிட்டால்
'படிக்காத மேதை' எனும் இனமே இல்லை.
துடிக்கிற எந்தனுளம் சொல்லப்போனல்
சுடர்வாளை எடுத்தவர்தம் உயிரைத்தானும்
குடிக்ககரம் பதைக்கிறது, குற்றமில்லை;
குறுமுயலார்க் குணர்வில்லை, கொள்கையில்லை;
படித்தபெரும் பிரம்மாக்கள், பதவிப் பித்தால்
பச்சோந்திச் செயல்புரியும் பிரகஸ்பதிகள்
நடிக்கின்ற நாட்கத்தில் நமனுய்த்தோன்றும்
நம் காமராஜூ ஒரு மேதை, மேதை!

திண்டுக்கல் "அங்கு விலாஸ்
M. V. முத்தையா பிள்ளை" வாசனைப் புகையிலை
தின்பண்டம் போன்றது, ருசி யுள்ளது.

## "அங்கு விலாஸ் வாசனைப் புகையிலை"

எங்கும் கிடைக்கும்.

*சோல் ஏஜண்டு:*

**E. இசக்கி அம்மாள்**

***நாகர்கோயில் & வள்ளியூர்.***

(கன்னியாகுமரி ஜில்லா & திருநெல்வேலி ஜில்லா.)



# விருதுநகர் சிறுவன்

**வி**ருதுநகர் வீதியில் விளையாடிக்கொண்டிருந் அந்தச் சிறுவனின் காதில் 'வந்தே மாதரம்' என்று ஒரு குரல் விழுந்தது. அவன் உள்ளத்தில் வேகம் பிறந்தது. அதுவரை அவன் கேட்டறியாத அந்தக் கோஷம் வந்த திசையை நோக்கி ஓடினான். சுவரில் எழுதியிருந்த பெரிய எழுத்துக்களை எழுத்துக் கூட்டி படித்துக் கொண்டிருந்தான் தோழன் ஒருவன். 'வந்தேமாதரம்' என்று தானும் ஒரு முறை வாய்விட்டுக் கூறினான். தீக்குச்சிகள் துரத்திக்கொண்டு வந்தனர். அந்தக் கணமே சுதந்திரத் தீ அவன் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

வேலையோ ஜவுளிக் கடையில்; சிந்தனையோ அன்று நடைபெறப் போகும் அரசியல் கூட்டத்தில். 'தலைவர் வரதராஜுலு நாயுடு பேசப்போகிறார். அதை கேட்காமல் எப்படி இருப்பது?' என்று துடித்தான் அந்தச் சிறுவன். குறித்த நேரத்தில் தன்னை விடுவிக்க வேறோர் ஆள் வரவில்லை பொறுமையை இழந்தான், கடையைப் பூட்டினான். சாவிக்கொத்தை முதலாளி வீட்டில் கொடுத்துவிட்டு எடுத்தான் ஓட்டம்! வாய் முணு முணுத்துக் கொண்டேயிருந்தது, 'வந்தேமாதரம்' 'வந்தேமாதரம்!'

தன்னைப் பெற்ற தாய்த் திருநாடு அடிமைபட்டு அவதியுறும் நிலையை நினைத்துக் கொண்டே ஒருநாள் படுக்கச் சென்றவன் பாரத அன்னை வந்து தன்னை அழைப்பது போல் கனவு கண்டான். நாட்டுப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வது என்று உறுதி பூண்டான்.

சிறுவனாக காமராஜ அன்றுபூண்ட உறுதியும், கொண்ட லட்சியமும் இன்றுவரை மாறவில்லை, மறையவில்லை. நாற்பது ஆண்டுகளாக நாட்டைத் தவிர வேறு சிந்தனையே இல்லாமல் அல்லும் பகலும் உழைத்து, உயர்ந்துவிட்ட தியாக வாழ்வு அவருடையது.

எளிய தொண்டனாகத் தொடங்கி, பெரிய தலைவனாக உயர்ந்து, இன்று அறுபத்திரண்டாவது பிறந்த நாளை நோக்கி வீறு நடைபோடும் வரலாற்று நாயகனான காமராஜர், இந்த மண்ணிலே பிறந்து, இந்தக் காற்றையே பருகி, இந்த நீரையே அருந்தி, இந்நாட்டு எழை மக்களின் இன்னல்களை அகற்றவே பணிபுரிந்து, நூற்றுக்கு நூறு பாரதத்தின் செல்வ மகனாக வளர்ந்திருப்பவர்.

அவர் பட்டப் படிப்பு படித்ததில்லை; மேல்நாடுகளுக்குச் சென்றதில்லை; ஆனால் நம் நாட்டு மக்களின் பிரச்னைகளை நன்றாக அறிந்திருக்கிறார். உலக சிந்தனையாளர்களைச் சந்தித்து அவர் உரையாடாமல் இருந்திருக்கலாம்; ஆனால் சுயமாகச் சிந்தித்து, சீராகச் செயலாற்றும் திறன் படைத்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, 'அரசியல்வாதிகள் பேச்சைக் குறைத்து, செயலை அதிகப்படுத்த வேண்டும்' என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

நாட்டுப் பற்றும் மக்கள் சேவையும் அவருடைய இரு கண்கள் என்றால், கட்டுப்பாடு உணர்ச்சி அவருடைய மூச்சு.

இன்று ஆளும் கட்சியில் நிலவும் ஒற்றுமையின் சின்னமாகவும் கட்டுப்பாட்டின் காவலனாகவும் அவர் திகழ்கிறார். ஒப்பற்ற தலைவர் நேருஜியின் மறைவுக்குப் பின்

மத்திய ஆட்சியும், ஆளும் கட்சியும் சிதறிச் சின்னாபின்னமாகாமல் காத்தது. தற்போது உருவாகியிருக்கும் கூட்டுத் தலைமைதான். கட்டுக்கோப்பான அந்தக் கூட்டுத் தலைமையை நாட்டுக்கு அளித்த பெருமையில் பெரும் பங்கு காமராஜரைத் தான் சாரும்.

மகாத்மாஜி சுதந்திரம் பெற்றுத் தந்தார். பெற்ற சுதந்திரம் சிதறிப் போகாமல் காத்துத் தந்தார் படேல். நிலைத்து விட்ட சுதந்திரத்தின் பயனைப் பெறும் பொருட்டு ஜனநாயக சோஷலிசப் பாதையை வகுத்துக் கொடுத்தார். நேருஜி, காந்திஜியின் எளிமையும், படேலின் மன உறுதியும், நேருஜியின் பரந்த நோக்கும் ஒருங்கே அமையப்பெற்ற காமராஜ். நேருஜி வகுத்துக்கொடுத்த 'நடு வழி'யில் அசையாத நம்பிக்கை கொண்டவர். நடைமுறைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுப்பதில் நிகரற்றவர். ஆகவே, இன்று நாடு இருக்கும் சூழ்நிலையில் செயல் வீரர் காமராஜ், ஆளும் கட்சிக்குத் தலைமை தாங்குவது இயற்கை உருவாக்கித் தந்திருக்கும் ஒரு பெரும் வாய்ப்பு. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நம் கடமை.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் நிர்வாகத்தை ஏற்று நடத்த எவ்வாறு காங்கிரஸ் கட்சி இன்றியமையாததாகி விட்டதோ, அவ்வாறே இன்று காங்கிரஸ் கட்சிக்குக் காமராஜரின் தலைமையும் இன்றியமையாததாகி விட்டது.

—"ஆனந்தவிகடன்,"

TATA
MERCEDES
BENZ

THE STAR
THAT HAULS A FORTUNE

DIESEL TRUCK AND BUS CHASSIS

DEALERS FOR COIMBATORE & NILGIRI DISTRICTS

**THE GOUNDER AND COMPANY**

9/69, JAIL ROAD, COIMBATORE

Phone: 3377 (3 lines) Grams: "GOUNDERCO" Post Bag - 512

Head Office,—4-A, Goods-shed Road, Pollachi. Phone: 327 (2 lines)

O

TATA MERCEDES-BENZ Service Centres AT Coonoor Road, Ootacamund ... Phone 461 & 462
Coimbatore Road, Pollachi ... Phone 182

# Sri Narayanan Bus Transports

Prop: K. LOGANATHAN

**49, General Patters Road, Mount Road, Madras-2.**

Phone No.
Office 84794


Phone No.
Residenc 86593

## S. N. B. T. LORRY SERVICE

We efficiently do our Transport Service in transporting goods from one place to another

Also we have tourist Bus for the use of Pilgrims and Picnic Parties with Comfortable seating arrangement.

**S.N.B.T.**


Elegant
PROCESS
QUALITY
BLOCK
MAKERS
PHONE. 87288
PROPRIETOR
M. SUBRAMANIAN
M/S ELEGANT PUBLICITIES, MADRAS. 2
PHONE OFFICE: 84784 Res: 86878
Somu.



# நேருஜியின் லட்சியத்தை வெற்றியாக்கியவர் காமராஜ்

மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம்

**தலைவர் காமராஜ் அவர்களைப் பற்றி மத்திய அரசாங்க உணவு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் இந்த அற்புதமான எழுத்துரையைப் படைப்பதிலே மகிழ்ச்சியடைகிறோம்.**

**இந்தக் கட்டுரை சாதாரணமான கட்டுரை அல்ல. மிக அரிதான அரசியல் நுட்பங்களைக் கொண்டது.**

**யாரை எப்படி மடக்கவேண்டும் என்பதில் சமர்த்தரான காமராஜ் நேருஜியை மடக்கியது எப்படி ?**

**புகழ் பெற்ற காமராஜ் திட்டம் மீண்டும் இரண்டாம் முறை அமுலாக்கப்பட்டது எப்போது? அதனால் விளைந்த விளைவு என்ன ?**

**வடக்கு வாழவேண்டும் என்பதற்காக அங்கே ஒரு நிறுவனம்—கட்சி ஏற்படுத்தப்படுமா ?**

**இந்தக் கேள்விக் கெல்லாம் சுவையான பதில் தருகிறது இக் கட்டுரை.**

சென்ற ஆண்டு காமராஜ் திட்டம் என்று ஒரு திட்டம் உருவானதை நாடு அறியும். காமராஜ் திட்டம் என்றால், அதன் பெயரால் சில மந்திரிகளை வீட்டுக்கு அனுப்பினார்கள் என்றுதான் பலருக்குத் தோன்றும். காமராஜ் திட்டத்திலே என்ன இருக்கிறது என்பதைப் பற்றி பலருக்குச் சந்தேகம், குழப்பம். ஆனால் அது எந்த நிலையில் உருவானது என்பதைக் கவனிக்கவேண்டும்.

நாம் சுதந்திரம் பெற்று, அந்த சுதந்திரத்தினுடைய பலனை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகக் காங்கிரஸ் பதவி ஏற்றது. பதவி ஏற்பதன் மூலமாகத்தான், மந்திரிசபை அமைப்பதன் மூலமாகத்தான். அரசாங்க நிர்வாகப் பொறுப்பை ஏற்பதன் மூலமாகத்தான், மக்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த அடிப்படையில்தான் காங்கிரஸ் 1946க்கு முன்பே பதவி ஏற்று, 1947-ல் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு தொடர்ந்து, ஏதோ ஒரு ராஜ்யத்தைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலும், ராஜ்ய சர்க்கார்களையும் அமைத்து நடத்தி வருகிறது. இதன் காரணமாக காங்கிரஸ்

ஸ்தானத்திலே, அதிகாரத்திலிருந்து, அந்த நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்துவதுதான் நம்முடைய லட்சியம். அதிலேதான் மதிப்பு இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டதன் காரணமாக காங்கிரஸ் ஸ்தாபனத்திலே ஒரு பலவீனம் ஏற்பட்டுவிட்டது. அந்த பலவீனத்தை எப்படி தவிர்த்து, எப்படி காங்கிரஸுக்கு ஒரு புதிய சக்தி கொடுத்து, இன்னும் தொடர்ந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டும், அந்த நிலைமை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி நமது மதிப்பிற்குறிய காலஞ் சென்ற ஜவஹர்லால் நேரு அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுதுதான் காமராஜ் திட்டம் உருவாகியது.

### சக்தியூட்ட வேண்டும்

காமராஜ் அவர்கள் சொன்னார்கள். தொடர்ந்து எல்லா தலைவர்களும் பொறுப்பிலே இருப்பதனால் மற்ற காங்கிரஸ்காரர்களுக்கும் இதுதான் லட்சியம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அதிகாரத்தில் இருப்பது ஒரு காரியத்தைச் சாதிப்பதற்காக. மக்களுக்காக நல்ல திட்டங்களை வகுத்து நல்வாழ்வு கொடுப்பதற்காக இப்பேர்ப்பட்ட காரியங்களைச் சாதிக்க வேண்டுமானால் வெறும் மந்திரிகளால் மட்டும் சாதிக்க முடியாது. இந்த மந்திரிகளை நியமிக்க ஒரு ஸ்தாபனம் இருக்கிறதே தவிர, அதிலே லட்சிய சக்தி இருந்தால்தான் மந்திரிகளும் நல்ல முறையில் பணியாற்ற முடியும். ஆகையினால் அந்த சக்தி குறைந்து கொண்டு போகிறபோது, எப்படி பாட்டரியில் சார்ஜ் இறங்கிவிட்டால், மறுபடியும் சார்ஜ் கொடுக்கவேண்டுமோ அதேபோல் கட்சிக்கும் சார்ஜ் கொடுத்து புதிய சக்தியை உண்டாக்கவேண்டும்.

அதற்கு என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்திக்கின்ற போதுதான் காமராஜ் அவர்கள் சொன்னார்கள், எல்லா தலைவர்களும் பதவியிலே இருந்துகொண்டு இருப்பதற்குப் பதிலாக கட்சி வேலை செய்து, மக்களிடத்திலே சென்று, மக்களிடம் இருக்கின்ற குறைகளை நேரடியாகக் கண்டு, மந்திரி என்ற முறையிலே மட்டுமல்ல, காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலேதான் கண்டு பிடிக்க வேண்டும், குற்றம் குறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும், மக்களிடம் நெருங்கிப் பழக வாய்ப்பு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

### சொந்த அனுபவம்

அவருடைய அனுபவத்தையே சொன்னார்கள். அவர் முதலமைச்சரான பிறகு ஒவ்வொரு தடவையும் முயன்றபோது, மக்களிடம் சென்று, பழகி என்னென்ன கருத்தைச் சொல்லுகிறார்கள் என்பதை அறிந்து அதன்படி காரியம் செய்யவேண்டும் என்று எண்ணுகிறபோது, பதவியில் இருக்கிற காரணத்தால் அதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்படுவதில்லை. மக்களுடைய மனதில் இருப்பதைத் தெரிந்து கொள்ள அவகாசம் இல்லை என்பதைப் பற்றிச் சொல்லி, ஆகையினால் இன்றைக்குத் தொடர்ந்து பதவியில் இருக்கிற தலைவர்கள் விலகி, காங்கிரஸ் கட்சிப் பணியில் ஈடுபட்டு, மக்களிடையே நெருங்கிப் பழகும் சக்தியை உண்டாக்கினால், புதிய சக்தி உருவாகும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஜவஹர்லால் நேரு அவர்கள் "நல்ல யோசனை, இதைப்பற்றி ஆராய வேண்டியதுதான்" என்று உணர்ந்து சஞ்சீவிரெட்டியார் ஊர் ஹைதராபாத்திலே தான், இதற்கான ஆலோசனை நடந்தது. ஆலோசித்து நேருஜி ஒரு முடிவுக்கு வந்தார்கள். இன்றைய நம் காங்கிரசுக்கு ஒரு புதிய சக்தியைக் கொடுக்கும் யோசனை என்றால், அதை அடிப்படையில்தான் ஏற்படுத்த முடியும் என்பதை ஒத்துக் கொண்டார்கள்;

நேரு அவர்கள் அவருக்கே உரிய பாணியில் சொன்னார்கள் 'இதற்கு முதல் முதலாக நான் தான் வழி காட்ட வேண்டும், பிரதம மந்திரிபதவியிலிருந்து நான் விலக வேண்டும்'' என்று சொன்னார்கள். உடனே காமராஜ் அவர்கள் நேருஜி இம்மாதிரி சொல்லுவதாக இருந்தால் நான் என்னுடைய திட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்'' என்று சொன்னார்.

**"நீங்கள் விலகிய பிறகு எங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முடியாது. நீங்கள் தொடர்ந்து பிரதமராக இருந்து மற்றவர்கள் விலகி கட்சியைப் பலப்படுத்துவதன் மூலமாக அரசியல் துறையிலும், அரசாங்கத் துறையிலும், கட்சித்துறையிலும்,**

தேசியத் துறையிலும் புதிய சக்தி பெற்று பணி புரிய முடியும். நீங்கள் பதவியைத் துறந்துதான் பணி புரிய வேண்டும் என்பதில்லை. நீங்கள் விலகக் கூடாது. நீங்கள் விலகுவேன் என்று சொன்னால், இந்தத் திட்டத்தை அப்படியே வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன் என்று சொன்னார்கள். சரி, இந்தத் திட்டத்தை காரியக் கமிட்டியில் ஆலோசனை செய்ய வேண்டும் என்று வந்தது. காரியக் கமிட்டி ஆலோசனை செய்த போதும் பண்டித நேரு அவர்கள் "நான் தான் முதலிலே வழி காட்ட வேண்டும்" என்று சொன்னார்கள். நம்முடைய தலைவர் காரியக் கமிட்டியில் முன்கூட்டியே தீர்மானம் செய்து விட்டார்கள். பண்டித நேரு அவர்கள் விலகும் யோசனையை காரியக் கமிட்டி ஒத்துக் கொள்ள வில்லை. பிரதமராக இருந்தாலும், நாட்டுத் தலைவராக இருந்தாலும், கட்சியைச் சேர்ந்தவர் என்ற முறையில் காரியக் கமிட்டி சொல்வதை ஒத்துக் கொள்ள வேண்டும் என்பதாலே, முதலிலே காரியக் கமிட்டியிலே தீர்மானம் செய்து விட்டார் காமராஜர். யாரை எப்படி மடக்க வேண்டும் என்பதிலே சமர்த்தர். நீங்கள் தானே வழி காட்ட வேண்டும், காரியக் கமிட்டியில் நீங்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது நீங்கள் அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்டு விட்டார். அவர் தொடர்ந்து பணி ஆற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மற்றவர்கள் வெளியே வரவேண்டியவர்கள் வந்தார்கள் இதற்குப் பிறபட்டு தான் நமது ஒப்புயர்வற்ற தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்கள் புவனேஸ்வரத்தில் நோயுற்றார்கள். அதற்கு பிற்பாடு, மே மாதத்தில் மறைய வேண்டிய காலம் வந்தது. அவர் நோயுற்ற காலத்தில் காமராசர் சென்னையில் இருந்தார். செய்தி கேட்ட உடனே டில்லிக்கு விரைந்தார். உலகத்திலே எங்கு சென்றாலும் இந்த நாலு, ஐந்து வருஷகாலமாக எந்தப் பத்திரிக்கையைப் பார்த்தாலும் நேருவுக்குப் பின்னால் யார்? என்ற பிரச்னை தான். நேருவுக்குப் பின்னால் இந்தியா என்னவாகும் என்ற பிரச்னை, குழப்பம், கலவரம், ஒருவருக்கொருவர் அடி தடி இவைகள் எல்லாம் நடக்கும் என்று நினைத்தார்கள். இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட "நாங்கள் இப்பொழுது வேண்டுமானால் ஒட்டிக் கொண்டிருக்கிறோம், அவர் போன பிறகு துண்டு போட்டு விடலாம்' என்று நினைத்தார்கள். ஜவஹர்லால் நேருவுக்குப் பின்னால் நமது நாட்டினுடைய கதி என்ன ஆகப்போகிறது, யார் தலைவராக வர முடியும் என்பதைப் பற்றி எல்லாம் ஒரே சிந்தனையாக இருந்தது. அதுவும் நேருஜி திடீரென்று மறைந்ததற்குப் பிறகு காங்கிரஸ் கட்சியில் கூட பலருக்கு நம்முடைய கட்சியே பிளவுபட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

**காமராஜ் திட்டம் மீண்டும் அமுல்**

அன்று தான் காமராசர் திட்டம் மறுபடியும் அமுலாகி விட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படை என்ன? யாரும் பதவிக்கு ஆசைப்படக் கூடாது. அந்த லட்சியம் மறுபடியும் வந்தது. லட்சிய அடிப்படையில் இருக்கிறபோது பதவிக்கு ஆசைப் படுகிறவர்கள் ஒதுங்கி நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த அடிப்படையில் தான் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொள்ளும் நிலைமை ஏற்படாமல், அங்கே இருக்கிற கருத்துக்களை ஒன்று படுத்தி ஏகமனதாக பிரதம மந்திரி பதவியைத் தேர்ந்தெடுக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டது. அதுவும் ஒரு வாரத்திற்குள்ளாக அந்த நிலைமை சமாளிக்கப்பட்டு, விட்டது. ஒரு வாரம் கூட ஆகவில்லை, புதிய தலைவர் தேர்ந்து எடுக்கப்பட்டு, எந்த விதமான குழப்பமும் இல்லாமல் அமைதியான முறையில் காரியம் நடந்தது. நேரு அவர்கள் மறைந்த செய்தி கேட்டதும், ஆங்காங்கே சில இடங்களிலே, நம்ம ஊர்க்காரர்கள் இல்லை, வெளி நாட்டுக்காரர்கள் - பம்பாயில் சிலர் அவசர அவசரமாக மார்க்கெட்டுக்குப் போய் ஒரு பத்து பதினைந்து நாட்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வைத்து விட்டார்களாம், வெளியே கூட போக முடியாத ஒரு குழப்பமான நிலை ஏற்படப் போகிறது என்று. ஆனால் எந்த விதமான குழப்பமும் இல்லாமல் கலவரம் இல்லாமல் ஏகமனதாகப் பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுத்து, நிர்வாகம் தொடர்ந்து நடக்கும் நிலைமை ஏற்பட்டதைப் பார்த்து உலகமே வியந்தது!

**நேருஜியின் லட்சியத்தை காமராஜ் வெற்றியாக்கினர்**

17 ஆண்டுகள் பிரதமராக இருந்து நாட்டின் தலைவராக இருந்து நாட்டின் காரியங்களை நேருஜி நடத்திக் கொண்டு வந்தார்கள். அவர் அப்படி நடத்தி இருப்பதன் பலன் இப்போது தான் பிரதிபலிக்க வேண்டும், நாட்டிலே அவர் போனதற்குப் பிறகு அமைதியான நிலை இருக்கும்படி வைத்திருந்தால் தான் அவருடைய வாழ்க்கை லட்சியம், உழைப்பு வெற்றி பெற்றது என்று சொல்ல முடியும். பெரும் தலைவர் அவர்கள் போனவுடனே குழப்பம் என்றால் அந்த பெரும் தலைவருடைய வாழ்க்கை லட்சியத்திற்குப் பெரும் பாதகம் தான் ஏற்பட்டு இருக்கும். ஆகையினால் ஜவஹர்லால் நேருவினுடைய வெற்றி அவருடைய மரணத்திற்குப் பிறகு நிரூபிக்கப்பட்டது. அவருடைய லட்சியத்தை ஏற்று அமைதியான முறையில் நிர்வாகத்தை மாற்றி அமைக்கக்கூடிய தன்மையில் இருந்தோம் மக்களுடைய மனதைக் கவர்ந்து ஜனநாயக அடிப்படையில் அவர்கள் மனம் மாற வேண்டும், என்று ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொண்டு இருந்தது போல் இந்த மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டது. அது தான் இன்றைய தினம் நமது தலைவருடைய வாழ்க்கை வெற்றிகரமாக இருந்தது, முயற்சிகள் வெற்றிகரமாக முடிந்தது என்று நிரூபிக்க கூடிய சான்று ஆகும். அவருடைய சாதனைகள் நிரூபிக்கப்பட்டது, அதுவும் இந்த சோதனை காலத்தில் நிரூபிக்கப்பட்டது. காமராஜ் அவர்கள் தலைவராக வந்து இதை நிரூபித்துக் காட்டினர்.

காமராஜ் அவர்களுக்கும் நேரு அவர்களுக்கும் இருந்த அன்னியோன்னியமான தொடர்பைப் பற்றி ஒரு சிலருக்குத்தான் தெரியும். எத்தனையோ விதமான காரியங்கள், எத்தனையோ விதமான கருத்துக்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம். கடைசியில் ஜவஹர்லால் நேரு என்ன சொல்லுகிறரோ அது தான் முடிவு. அதே மாதிரி தான் சென்ற ஆறு, ஏழு ஆண்டு காலத்தில் காரியக் கமிட்டியில், காங்கிரஸ் ஆலோசனை மன்றங்களின் பல விஷயங்களைப்பற்றி ஆலோசனை நடந்து கொண்டிருக்கின்ற போது நானும் பங்கு கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. நெருக்கடியான சமயங்களில் கேட்பார் 'இதைப் பற்றி காமராசர் என்ன நினைக்கிறார்' அதைத் தெரிந்து கொண்டாயா' என்று கேட்பார். அவர் ஒத்துக் கொள்ளும் திட்டம் தான், ஒத்துக் கொள்ளும் கருத்து தான் என்று சொன்னால், 'ஆம்' என்று முடிவு செய்வார். அக்கிராசனர் பதவியை ஏற்றுக் கொண்டபோது கூட, ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார், இவர் ஏற்றுக் கொண்டார். நேரு அவர்கள் சொல்லி விட்டால் அது தான் கடைசி வார்த்தை. ஆகையினால் அந்தத் தொடர்புக்கு ஏற்றபடி, நட்புக்கு ஏற்றபடி அந்த அன்புக்கு ஏற்றபடி, நேரு அவர்களுடைய லட்சியம் இந்த நாட்டிலே நிலை பெறும் வகையில் நாம் எல்லோரும் நடந்து கொள்வது தான் நேருஜி அவர்களுக்கு நாம் காட்டக்கூடிய நன்றியாகும்.

காமராஜ் அவர்களுடைய சாதனைத் திறன் பற்றி மேலும் பல சொல்லலாம். வடக்கத்தியானுடைய ஆட்சியில் நாம் எல்லோரும் அடிமைப்பட்டு இருக்கிறோம் என்று ஒரு சிலர் சொல்லி வந்தார்கள். ஆனல் நிலைமை மாறிப் போய்விட்டது. அங்கே டில்லியில் போய்க் கேட்டால் எல்லோரும் தெற்கத்தியானாக இருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். ஜனாதிபதி பதவியிலிருந்து காங்கிரஸ் அக்ராசனர் வரையில் தெற்கத்தியார் வந்து விட்டார்கள் என்று சொல்லுகிறர்கள் சஞ்சீவி ரெட்டி மந்திரி சபைக்கு வந்தாகி விட்டது. டி. டி. கே. வந்தாகி விட்டது. சி. சுப்பிரமணியம் வந்தாகி விட்டது, வடக்கத்தியர் இப்பொழுதெல்லாம் தெற்கத்தியர் ஆட்சி என்று சொல்லுகிறார்கள், அவர்கள் இங்கே பார்த்துக் கற்றுக் கொள்ளுகிறவர்களாக இருந்தால், அங்கே ஒரு கட்சி ஆரம்பிக்கலாம். "வடநாடு வளர வேண்டும்" என்று அப்படி ஆரம்பிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ஜனநாயக சோஷலிசம் இன்றைய தினம் உலகத்திலே இருக்கக் கூடிய பேர் அறிஞர்கள், உலகத்திலே இருக்கும் பல பத்திரிகைகள், காமராசர் அவர்களுடைய லட்சியத்தைப் பற்றி, அவர் சாதித்து

இருக்கும் சாதனைகளைப் பற்றிப் புகழ்ந்து எழுதும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைய தினம் நாம் எல்லோரும் பெருமைப் படுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம், வாழ்த்துகிறோம். அவர் என்றும் வாழ்க, வாழ்க. இந்த சாதனைகள் மட்டுமல்ல, இன்னும் பல பெரிய சாதனைகளைச் செய்து, நம்முடைய தமிழ்நாடு மட்டுமல்ல நம்முடைய பாரதம் முழுவதும் இருக்கும் 45 கோடி மக்களும் புது வாழ்வு பெற்று அந்த புதிய வாழ்வினுடைய பலனைப் பெற்று பெரு வாழ்வு வாழ வேண்டும். அந்தப் புது வாழ்வுக்குத்தான் பெயர் ஜனநாயக சோஷலிஸம் பலபேருக்கு இது என்ன புதிதாக இருக்கிறதே என்று தோன்றும். இன்றைய தினம் மக்கள் பார்த்து யாரைத் தேர்ந்து எடுக்கிறார்களோ அவர்கள் தான் ஆட்சி நடத்த வேண்டும் என்பது தான் ஜனநாயகத்துனுடைய அடிப்படை. இன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சியிலே இருக்கிறது என்றால் மந்திரம் செய்து ஏமாற்றம் செய்தல்ல. கோடிக்கணக்கான மக்களுடைய ஆதரவைப் பெற்று ஜனநாயக முறையில், சமாதான முறையில், நம்மை எதிர்க்கிறவர்களுக்கும பாதுகாப்பு கொடுத்து, அவர்களும் பிரச்சாரம் செய்வதற்கு எல்லா வசதியும், சினிமா பிரச்சார வசதி முதற்கொண்டு, செய்து கொடுத்து அந்த ஜனநாயக அடிப்படையில் மக்களுடைய ஆதரவைப் பெற்று காங்கிரஸ் அரசாங்கத்தில் இருக்கிறது. என் கையில அரசாங்கம் வந்து விட்டது. என் கையில் நிர்வாகம் வந்து விட்டது. வேறு ஒரு கட்சியும் வேண்டாம் நாங்கள் இருந்தால் போதும் என்று சொல்லவில்லை, எதிர்ப்புக்கும் கட்சிகள் இருக்கட்டும். ஜனநாயகத்தில் எதுவும் நினைக்கலாம் என்று விட்டு விட்டிருக்கிறது.

ஜனநாயக அடிப்படையில் நம்முடைய நாடு நடக்க வேண்டும்' ஜனநாயக அடிப்படையில் அரசாங்கம் ஏற்பட வேண்டும். இன்றைய தினம் நாட்டில் இருக்கின்ற பஞ்சம் பட்டினி போக வேண்டும். ஜனநாயக சோஷலிஸத்தின் முதல் அடிப்படை, நாட்டின் ஒவ்வொருவருக்கும் வயிறார உண்ண உணவு கொடுக்க வேண்டும். 45 கோடி மக்களுக்கும் வயிறார உண்ண உணவு கொடுத்தாக வேண்டும், இது முதல் அவசியம். அதற்கு அடுத்தபடியாக நாட்டில் இருக்கும் மக்கள் எல்லோருக்கும் போதிய அளவு உடை உடுத்த வசதி செய்து கொடுத்து ஆக வேண்டும். பட்டு பீதாம்பரம் வேண்டாம், போதுமான உடை இருக்க வேண்டும். நாட்டில் இருக்கின்ற எல்லா குடும்பங்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும். நாட்டில் இருக்கின்ற மக்கள் எல்லோரும் நோயற்று வாழ வேண்டும். ஆனால் எவ்வளவு தான் நாம் நோயற்று வாழ வேண்டும் என்று சௌகரியம் செய்து கொண்டாலும் அதற்கு மீறியும் நோய் வந்து விடுகிறது அதை தீர்த்து வைப்பதற்கு ஒவ்வொரு ஆண், பெண்ணுக்கும் வைத்திய வசதி கொடுத்தாக வேண்டும். இது ஜனநாயகத்தினுடைய அடிப்படை. வீட்டில் உட்கார்ந்து கொண்டு பஜனை பண்ணினால் வந்து விடுமா? தேடிக் கொண்டு போனால் வந்து விடுமா? அதற்கான ஆற்றல் அறிவு மக்களிடம் வந்து ஆக வேண்டும். அவைகள் யெல்லாம் பெருவதற்கான அறிவும் மக்களிடம் வளர்ந்தால் தான் அந்த வாய்ப்பு வந்து சேர முடியும். ஆகையினால் இவைகளுக்கு எல்லாம் அடிப்படையாக இருக்கும அறிவு ஏதோ ஒரு சிறு கூட்டத்திற்கு மட்டுமல்ல, நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குழந்தைக்கும் போதிய கல்வி அறிவு கொடுத்தாக வேண்டும். இதை சாதிப்பது தான் சோஷலிஸம், வேறு ஒன்றும் அல்ல.

ஏற்றத் தாழ்வுக்கும் அளவு வேண்டும். இதைச சாதிபபதற்கான வழி வகைகள் வகுக்க வேண்டும், அப்படி சாதிப்பதற்கு வழி வகுக்கின்றபோது ஏதோ ஒரு சிலர் மட்டும் 100 கோடி 1000 கோடி என்று கணக்கு போட்டுக் கொண்டால், மக்கள் என்று வருகிறபோது, அது முடியாது என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகையினால இன்றைய தினம் பெரும் கோடீஸ்வர பிரபுக்கள் எல்லாம் கொஞ்சம் கீழ் படிக்கு வரவேண்டும் என்று சொன்னால் பொறாமையால் அல்ல. அவர்களுக்கு இருக்கும் தொல்லை எங்களுக்குத் தெரியும். வரிக்காரன் வருகிறபோது தொல்லை. போலீஸ்காரன் வரும் போது தொல்லை.

ஒளித்து வைத்திருப்பதைப் பிடிக்கின்றார்களோ என்ற பயம்.

இன்றைய தினம் அந்த நிலைமை மாறி நாட்டில் இருக்கக் கூடிய எல்லா மக்களுக்கும் இந்த அடிப்படையான தேவைகள் பூர்த்தியாக வேண்டும். பெரும் பணக்காரர்கள் என்ற நிலைமை இல்லாமல் எல்லோருக்கும் ஓரளவு வசதி இருக்கும் நிலைமை ஏற்படுத்த வேண்டும். மனிதன் என்று எடுத்துக் கொண்டால் 6 அடி உயரம், 5 அடி உயரம், 4½ அடி உயரம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இதற்கு மீறி 6½ அடியில் இருக்கிறார். இதையும் மீறி 10 அடிக்குப் போனால் மனிதன் என்று சொல்ல முடியாமல், மனிதனுக்கு ஓர் அளவு இருப்பது போல் ஏற்ற தாழ்வுக்கும் ஒரு அளவு இருக்க வேண்டும். அதை அமைக்க வேண்டும் என்று தான் நோக்கம். ஆகையினால் காமராசர் தினத்தைக் கொண்டாடுகிற போது, ஜனநாயக சோஷலிஸம் தான் நம்முடைய லட்சியம் அதை அடைவதற்கு நாம் எல்லோரும் அவருடைய தலைமையில் பாடு படுவோம் என்ற அடிப்படையில் இந்த தினத்தைக் கொண்டாடுகிறோம்.

அதிலே எப்போது வெற்றி காண்கிறோமோ அதுவே அவருடைய வெற்றியின் சிகரமாகும். அந்த வெற்றியை ஜனங்கள் தருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்கு ஆக எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டும். அதுதான் நாம் அவர்களை வாழ்த்துகிறபோது எடுத்துக் கொள்ளுகின்ற பிரதிக்ஞையாக இருக்க வேண்டும். ஜனநாயக சோஷலிசத்தை அமைப்பதற்கு அவருக்கு கை கொடுத்து, ஒத்துழைக்க வேண்டும்.

45 கோடி மக்களின் நல்வாழ்வு என்ற லட்சியம் கனவு இல்லாமல் நினைவாக மலர, நாம் நம்முடைய காலத்திலேயே பார்த்து, நம்முடைய தலைவர் முயற்சியாலே ஏற்பட்டிருக்கிறது என்ற பெருமிதத்தால் வாழக்கூடிய சீக்கிரத்தில், 65 வயதுக்குள் ஜனநாயக சோஷலிசம் மலர்ச்சி அடைவதற்கு எல்லோரும் பாடுபட வேண்டியது அவசியமாகும்.

## கிராம ராஜர் !

ஒரு தலைவர் மீது தங்களுக்கு உள்ள அத்தியந்த பந்த பாசத்தைக் காட்ட, அவர் பெயரோடு அடைமொழி சேர்த்துச் சொல்வது மக்கள் இயல்பு.

காந்திஜிக்கு மகாத்மா என்ற அடைமொழியே அவர் பெயர் போலவும் ஆகிவிட்டது.

நேருஜி அவர்கள் "மனிதருள் மாணிக்கமாக" மக்கள் உள்ளத்தில் வாழ்கின்றார்.

காமராஜரைப் பற்றிச் சொல்லும் போது கர்மவீரர் என்று சொல்லுகிறார்கள். இதில் க. கா. ஓசை பொருத்தம் இருக்கிறது. கடமை வீரர் என்பதைச் சூட்டும் முறையில் பொருள் செறிவும் உள்ளது.

ஆனால் 'கர்ம' என்று சொல்லும் போது, அந்த ஒலி சாஸ்திர அனுஷ்டானச் சொல் போல ஒலிக்கிறது.

காமராஜ் அவர்கள், தமிழகத்து கிராம மக்களின் சின்னமாகத் திகழ்கிறவர். கிராம மக்கள் வாக்கிலே நடமாடும் எளிய சொல், பொருள் நிறைந்த சொல் அவர்பெயரை அணி செய்ய வேண்டும்.

கிராமங்களுக்கு அறிவொளியூட்டி, மின்சார ஒளியூட்டி, அந்த மக்கள் வாழ்வில் புத்துணர்ச்சியையும் புதிய பொலிவையும் ஏற்படுத்தினார் நமது தலைவர். அதே சமயத்தில் சொல் சிக்கனத்தையும் விரும்புபவர். எனவே காமராஜர் என்பதற்குப் பதிலாக, ஆனால் அந்தப் பெயரையும் உள்ளடக்கியதாக ஒரு பெயரைச் சூட்டி நாம் மகிழலாம். காமராஜப் பெருந்தகையை இனி "கிராமராஜர்" என்று அழைத்தால் என்ன?

❋



# காலம் காட்டிய மூலிகை

"நாட்டுப்புறம்"

'நாட்டுப்புறம்' 'உதயம்' அன்பர்களுக்கு அதிலும் 'உதயம்' காமராஜ் மலர் படித்தவர்களுக்கு மிகப் பழக்கமான பெயர். தமிழில் நல்ல புலமையும், ஆங்கில இலக்கியங்களில் நன்கு தேர்ச்சியும் உடைய ஒரு சிறந்த எழுத்தாளர்-சிந்தனைச் சிற்பி. இந்தியத்தாயின் அடிமை விலங்கொடித்த வீரத்தளபதிகளில் ஒருவரும் கூட. சுதந்திரப் போராட்ட காலத்தில் தமது இளமைப்பருவத்தைக் கூட பலமுறை சிறையில் கழித்தவர். இன்றும் சிறைவாசம் போன்ற ஒரு கொடுமைக்கு உள்ளாகி சோர்ந்திருக்கும் நேரத்திலும் தலைவர் காமராஜரை 'காலம் காட்டி மூலிகையாக' காணும்போது தலைநிமிர்ந்து நிற்கிறார்.

"மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்", இப் பழமொழி நம்முடைய தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒன்றாகும். ஊருக்குப் பக்கத்திலே-கண்ணைக் கவரும் வகையிலே-கருத்துடன் பேணி வளர்க்கப்பட்ட அழகு குலுங்கும் ஒரு சோலை அமைந்திருக்கலாம். விண்ணோடு விளையாடும் எண்ணற்ற எழில் மரங்களும், கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் பூக்களும், மரகதக் குவியல் போன்ற பசுஞ் செடிகளும் கொடிகளும் ஆங்கே நிறைந்திருக்கலாம். எனினும், பிணியைப் போக்கும் அம் மாமருந்தைத் ... தேடி நெடுந்தொலைவிலுள்ள மலைக்குத்தான் செல்ல வேண்டும். அங்கிருந்து கிடைக்கும் அந்தச் செடிதான் போக்குவதற்கரிய பிணியைப் போக்கும் அருமருந்தாக உதவும்.

இப் பழமொழியின் கருத்தை நம்முடைய தமிழ் மக்கள் மருந்துக்கு மட்டுமல்லாமல், மற்றவர் நமக்கு உதவி செய்யும்பொழுதும் பயன்படுத்துகின்றார்கள். நம்மைச் சுற்றியிருக்கும் சுற்றத்தார்களும் உறவின் முறையார்களும் நமக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டு அதைத் துடைக்க இயலாது வாளாவிருக்கையில், நம்மோடு எவ்வகையிலும் உறவுகொள்ளாத ஒருவர் நம் இன்னலைத் துடைக்க நிற்பார். எனவே உறவினரல்லாத ஒருவர் நம்பால் அன்பு கொண்டு நம்முடைய துன்பத்தை நீக்கிய நேரத்திலும் இப் பழமொழியை நாம் பயன்படுத்துகின்றோம். "மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்" என்று சொல்லி, "அம்மருந்து போல்வாரும் உண்டு" என்றும் உதவிய நண்பரைப் பிணி போக்கும் மருந்தாக நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

மனிதனுடைய துன்பத்தைப் போன்றதே ஒரு நாட்டின் துன்பமும். ஒரு மனிதனுடைய துன்பம் சுருங்கிய அளவிலே அவனுக்கும், அவனைச் சார்ந்த குடும்பத்திற்கும் துயரத்தைக் கொடுக்கலாம். நாட்டிற்கு ஏற்பட்ட துன்பமோ, நாடு முழுவதும் பரவி, நாட்டிலே நிறைந்துள்ள மக்கள் அனைவரையும் வருத்தும் துன்பமாக விரியும். இதுதான் ஒரு நாட்டிற்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு.

ஒரு நாட்டின் துன்பத்தைப் போக்கும் நல்ல தலைவன் எப்படி வருவான்? என்பதை முன்கூட்டியே சொல்வது கடினம். காந்தியடிகள் நேருவைத் தன்னுடைய அரசியல் வாரிசாகக் கூறினாரென்றால, அந்தக் காலம் அமைதியான காலமன்று. அது நெருக்கடி நிறைந்த காலம். துன்பத்தை ஏற்க வேண்டிய நேரம். தியாகம் செய்ய வேண்டிய தருணம். எனவே, 'எனக்கு அடுத்தப்படியாகத் துன்பத்தை ஏற்றுக்கொள்பவர் இவர்; என்று அவர் நேருவைச் சுட்டிக்காட்டியதிலே மக்கள் எவருக்கும் இரண்டுவித எண்ணம் இல்லை. அனைவரும் அதை ஏற்றுக்கொண்டனர்' ஆனால் அமைதியான காலத்திலே 'எனக்குப் பிறகு இவர்தான் வருவார்' என்பதைக் குடியாட்சியில் யாரும் சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது. அவ்வாறு சொன்னால், அது குடியாட்சி அல்ல, குடியாட்சி என்ற பெயரால் முடியாட்சியே நிலவுகிறது என்றுதான் நாம் கூற வேண்டும்.

இவ்வுண்மையை நன்குணர்ந்த காரணத்தினால்தான் நேருவிடம், "உங்களுக்குப் பின் யார்?" என்று பன்முறை கேட்கப்பட்டபொழுதெலாம், குடியாட்சியிலே அசையாத நம்பிக்கையும், உறுதியும், பற்றும், அது தழைக்க வேண்டுமென்ற அடங்கா ஆர்வமும் கொண்ட அவர், தனக்குப் பின் இவர்தான் என்று எவரையும் குறிப்பிட்டுச் சொலலவில்லை. எத்தனையோ சிறந்த காரணங்களுக்காக அவர் போற்றப் பட வேண்டியவராயிருந்தாலும், இந்த ஒரு காரணத்திற்காக அவரை நாம் பெரிதும் போற்ற வேண்டும். குடியாட்சியின் ஒளி மிகுந்த கதிரவனை, எதேச்சாதிகாரத்தின் கார் மேகங்கள் சிறிதும் மறைக்காதவாறு அவர் நன்கு பாதுகாத்தார். நல்ல ஒரு நடை முறையை நம் நாட்டிற்கு வகுத்துத் தந்தார். இதனால் உள்ளத்திலும், உரையிலும், செயலிலும் தான் ஓர் உண்மையான குடியாட்சி வாதியே என்பதை உலகுக்கெல்லாம் காட்டி விட்டார்.

காலத்தின் வரம்பிலே அவருடைய வாழ்வும் ஒதுங்கிவிட்ட துன்பவேதனையைக் கண்டோம். எனினும் கடமை வழிகாட்ட "அவருக்குப் பிறகு யார்?" என்ற கேள்வி மறுபடியும் எழுந்தது. இந்நேரத்தில் பலர் பலவாறு விடை பகர்ந்தனர். அனால் ஆங்கிலப் பேரறிஞர் கார்லைல் (Carlyle) சொன்ன வண்ணமே நேரமும் காலமும் நாட்டிற்கு உரிய தலைவரை நேருவுக்குப்பின் தேர்ந்தெடுத்துள்ளன.

"The right man for the right hour" என்பதுதான் அறிஞர் கார்லைல் அவர்களுடைய சித்தாந்தம். "நேரத்திற்கு ஏற்ற பொருத்தமான மனிதன்" என்று இதைத் தமிழிலே சொல்லலாம். "நேருவுக்குப் பின் யார்?" என்று மற்றவர் வினா எழுப்பும்பொழுது, பெரும்பாலோர் காலத்தையும், நேரத்தையும் கணித்துப் பார்க்கவில்லை. குடியாட்சியிலே மக்களின் கருத்து எவ்வாறு உள்ளது? மக்கள் எந்தமாதிரியான தலைவரை விரும்பியுள்ளனர்? நாடு எவ்வகையான தொண்டினை அவரிடமிருந்து எதிர்நோக்கியுள்ளது? என்பவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தவர்கள் மிகக் குறைவே.

ஓய்வு ஒழிவின்றி பிறர் நலனையே அல்லும் பகலும் பேணி வளர்க்கக்கூடிய பெருந்தகை ஒருவரையே அந்நெருக்கடியான நேரத்தில் நாடு எதிர்பார்த்தது. அவர், தன் நலததை நாட்டின் பொதுநலத்திற்காகத் தியாகம் செய்யும் செம்மலாய் விளங்க வேண்டும். மக்கள் தம் குறைகளையும் முறைகளையும் அவரை எளிதில் கண்டு தெரிவிக்கும் செவ்வி உடையவராய் இருக்க வேண்டும். ஏழைகளின் உயர் வாழ்வுக்காக அயராது உழைக்க வேண்டும். வெறும் ஆரவாரத்தையும், பகட்டையும் மதிக்காத மாண்புடையோராய் திரண்ட செல்வத்தைக் கண்டோ, நிமிர்ந்த அதிகாரத்தைக் கண்டோ அஞ்சாதவராக இருக்க வேண்டும். உண்மையே அவருடைய கொடியாகப் பறக்க வேண்டும். இவ்வாறு உள்ள ஒருவரைத்தான் நாடு தலைவராக வரவேண்டுமென்று விரும்பியது. காலமும் நேரமும் அம்மாதிரியான தலைவரின் வருகையை எதிர்பாத்துக் கொண்டிருந்தது.

தக்க வேளையும் வந்தது. இந்தியாவிலுள்ளவர்கள் மட்டுமல்ல, உலகத்திலே உள்ள அரசியல் தந்திரிகள் அனைவரும் எதிர்பாராத வகையில் நேரமும் காலமும் திரு. காமராஜ் அவர்களே பொருத்தமான தலைவர் என்று பொறுக்கியெடுத்தது. இதைக் கண்டு அனைவருமே வியப்பு எய்தினர். காலதேவன் தன்னுடைய கையிலே ஒப்படைத்த கடமைகளை திரு. காமராஜ் அவர்கள், காசினியோர் வியப்படையும் வகையில் நிறைவேற்றி வைத்துள்ளார். இது காலத்திற்கேற்ற தலைவர் அவரே என்பதை நன்கு நிரூபித்துக் காட்டியதோடு, நேரத்தின் முடிவும் சரியானதே என்பதை அனைவருக்கும் காட்டியுள்ளது.

தான் எடுத்துக்கொண்ட காரியத்தை இனிதே நிறைவேற்றும் திறன் திரு. காமராஜ் அவர்களிடம் நிறைந்துள்ளது.

"மெய்வருத்தம் பாரார்
பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார்
அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்"

என்ற பாட்டிற்கு ஏற்ப ஒழுகும் ஆற்றல் வாய்ந்தவர் அவர். செல்வம் மனிதனுக்கு ஒரு கருவி. அது மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றும் ஓர் அடிமை என்பதை வாழ்க்கையிலே

கடைப்பிடிப்பவர் அவர். எக்காலத்திலும் செல்வம் அவரை அடிமைப்படுத்தியது கிடையாது. தற்காலத்திலே, பெரிய தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்களிடத்திலே காணக் கிடைக்காத இவ்வருங்குணத்தை, காலம் திரு. காமராஜ் அவர்களிடத்திலே கண்டது.

செல்வச் சீமான்களைக் கண்டு அவர் எக்காலத்திலும் அஞ்சியதே இல்லை. தமிழகத்திலே, 1952ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வெற்றி அடையவில்லை. நாட்டில் நிலவிய பஞ்ச நிலைமையே அதற்குப் பெரும்பாலும் காரணம். வாழ்விற்கு இன்றியமையாத வானம் பொய்த்து விட்டது. நிலமோ வளம் குன்றி விட்டது. மக்களோ, இயற்கையின் வளக் குறைவுக்கும் ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ்காரர்களே காரணம் என்று கருதினர். இந்நிலைமையைச் சில தன்னலக்காரர்கள், காமராஜ் அவர்களின் தலைமையால்தான் இவ்வாறு எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிட்டவில்லையென்று மேலிடத்தில் சென்று குறை கூறினர். காமராஜ் அவர்கள் தன்னுடைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியைவிட வேண்டி வந்தது.

அச்சமயத்தில் அவரால் விடப்பட்ட பதவியைத் தங்களின் நன்மைக்காக இறுகப் பற்றிக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு பணக்காரர்கள் சதி செய்தனர். அச்சதியின் முன்னணியில் ஒரு பெரும் நிலக்கிழார் நன்கொடை வசூலிக்கத் தொடங்கினார். திரு. காமராஜ் அவர்களைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் தோற்கடித்து, அவரை அரசியலிலிருந்து அகற்ற வேண்டுமென்பதே அவர்களுடைய நப்பாசை. "பணத்திற்குத் தலை வணங்காத பான்மையுடையர், தங்களுக்குத் தலைவராக இருக்கத் தகுதியுள்ளவர் அல்ல என்று அவர்கள் எண்ணினார்கள். பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்கிறார்கள். ஆனால் அது காமராஜின் நெஞ்சிலே பாயவில்லையே. இப்பாவத்தை நாங்கள் எப்படிப் போக்குவது? இது கொடுமையல்லவா? என்று அவர்கள் உள்ளம் குமுறினர். எல்லாம் வல்ல தங்களின் பணத்தையே படைக் கருவியாகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

திரு. காமராஜ் அவர்களின் காதுக்கு இச் செய்தி எட்டியது. அச்சமயத்தில் அவர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இல்லை. எனினும், அந்தப் பெருநிலக்கிழாரை வரச் சொன்னார். அவரும் வந்தார். அச்சீமானிடம் அவர் நயமாகக் கேட்கவில்லை. விளக்கம் எதையும் வேண்டவும் இல்லை. எடுத்த எடுப்பிலேயே அவரை விரட்டினார். "என்ன, எவ்வளவு ரூபாய் வசூலித்தீர்கள்? ஒழுங்காக இருக்க உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று சற்று அதட்டலுடன் கேட்டார். அச்சீமான் உடனே உடல் பதறிப் போய், உரை தடுமாற, "இல்லீங்களே, நான் ஒன்றும் அவ்வாறு செய்யலீங்களே" என்றார்.

விளக்கம் எதுவும் கேளாமலே அவர் உரைத்த விடையிலிருந்தே அவர் செய்த தவறு நன்கு விளங்கியது. அப்பதிலைக் கேட்ட திரு. காமராஜ் அவர்கள், "சரி, சரி. வசூலித்த பணத்தையெல்லாம் ஒழுங்காகத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் கொடுத்துவிடுங்கள். இல்லெனில்......" அச்செல்வர் உடல் குன்றி, முகம் கருகி - எழுந்து சென்றார். தன்னுடைய "புண்ணியச் செயலையும்" விட்டு விட்டார்.

இந்நிகழ்ச்சியிலிருந்து திரு. காமராஜ் அவர்கள் தன்னுடைய எதிரிகளைப் பணியச் செய்து—அவர்கள் எவ்வளவு செல்வமுடையவர்களாயிருப்பினும் அதற்குச் சிறிதும் அஞ்சாமல்—தான் எண்ணியதை நிறைவேற்றும் உள்ளத் திண்மையும் தூய்மையும் வாய்ந்தவர் என்பதை நன்கு உணரலாம்.

போர்க் காலத்தில் படைத் தலைவன் ஒருவனுக்கு வேண்டிய சிறந்த குணங்களுள் ஒன்று, அவன் தன்னுடைய படையின் ரகசியத்தைக் கட்டிக்காக்க வேண்டும். அதே சமயத்தில், எதிரியின் ரகசியத்தையும் அறிந்து அதற்கேற்ப, தன்னுடைய தாக்குதலைத் தொடங்க அவன் திட்டமிட வேண்டும். அவ்வாறு செயலாற்றும் படைத்தலைவன்தான் வெற்றி பெற முடியும். காமராஜ் அவர்களுக்கு இந்த இயல்பு இயற்கையாகவே அமைந்துவிட்ட ஒன்றாக இருக்கிறது. தன்னுடன் உரையாடுபவர்களின் பேச்சை மிகப் பொறுமையாகக் கேட்டுக் கொள்வார். அப்போதைக்கப்போது ஓரிரு கேள்விகளைக் கேட்பார். அதன் மூலம் அந்த மனிதனின் உள்ளக்கிடக்கையை உணர்ந்து கொள்வார். ஆனால் தன்னுடைய எண்ணத்தை மட்டும் அவர் பிறரிடம் கூறமாட்டார். அவர் என்ன நினைக்கிறார்? என்பது மற்றவர்களுக்குப் புரியாத ஒரு புதிராகவே இருக்கும். இந்த ஓர்

இயல்புதான் அரசியலிலே அவர் தன்னுடைய எதிரிகளின் மெலிவை நன்கு அறிந்து அதற்கேற்பத் தன்னுடைய திட்டங்களை அமைத்துக் கொள்ளும் ஒரு வாய்ப்பினைக் கொடுத்து வருகிறது. அதுவே அவருக்கு மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் வெற்றியை அளித்து வருகிறது.

இவ்வருங் குணங்களினால்தான் அவர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான உடனே அந்த அதிகாரத்தின் முழு வரம்பையும் உணர்ந்து அதற்கேற்பச் செயலாற்றினார். இயற்கையிலேயே கூரிய அறிவு படைத்த அவர் தன்னுடைய அனுபவத்தின் மூலமும் அறிந்த உண்மைகளைக் துணையாகக் கொண்டு, நாட்டின் மானத்தையே காப்பாற்றினார்.

''இந்திய நாட்டின் இணையில்லாத தலைவர் ஜவஹர்லால் நேரு. அவர் இருக்கும்வரை நாட்டில் அமைதி நிலவும், அப்பால் பூசலே நிலவும் பிரதம மந்திரியாவதற்காகப் பலர் போட்டியிடுவர். காங்கிரஸ்காரர்களிடையே குழப்பமும் பூசலும் பதவிப் போராட்டமும் தலைவிரித்தாடும், அதனால் காங்கிரஸ் இயக்கமே சிதறுண்டு போய் விடும்'' என்றெல்லாம் பலர் மனப்பால் குடித்தனர். அவர்களுடைய எண்ணங்களையெல்லாம், பேராசைக்காரன் ஒருவன், இரவிலே காணும் கனவாகச் செய்து விட்டார் திரு. காமராஜ் அவர்கள்

நேருவுக்கு அடுத்தாற்போல் பிரதமராக வர வேண்டியவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். இல்லெனில், உள்நாட்டிலே உள்ள குழப்பச் சக்திகளும், வெளிநாட்டிலே உள்ள தீய சக்திகளும் ஒன்று சேர்ந்து இந்தியாவை மறுபடியும் பொருளாதாரத் துறையிலே அடிமையாக்கிவிடும் என்பதை நன்கு உணர்ந்தார். அதற்காக உணவையும், உறக்கத்தையும் மறந்து, ஏகமனதாகப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் ஒரே பணியிலேயே தன்னுடைய ஆற்றலையும் அறிவையும் செலவிட்டார். நாட்டின் மானத்தைக் காப்பாற்றினார். அதன் மூலம் இந்திய மக்களின் மானத்தையும் அவர் உயரத் தூக்கியுள்ளார்

நாட்டின் பிணியைத் தீர்க்கக் காலதேவன் அளித்த நல்ல மருந்து—சிறந்த மூலிகை—திரு. காமராஜ் என்று வாயார வாழ்த்துவோம். இறைவன் அவருக்கு இன்னும் நீண்ட ஆயுளையும், நிறைந்த ஆற்றலையும் தந்தருள அவனை வேண்டிப் பணிவோமாக.

வாழ்க காமராஜ் !

*With the best compliments of :*

# JAYANTHI PAPER INDUSTRIES

*Manufacturers of Paper Bags with or Without Printing*

*

*We undertake Printing in three colours on Paper Bags.*

*

*We can Supply both flat and folded bags in any Size.*

*Factory*

**19, Sannadhi Street,**
**VILLIWAKKAM, MADRAS-49.**
Phone : 64026

*Office :*

**4, Bunder Street,**
**MADRAS - 1.**
Phone · 24554 Grams " Shipment "

*Branches :*

**VIJAYAWADA & BANGALORE.**



# கிடைக்காத தலைவன் கிடைத்து விட்டான்!

— கண்ணதாசன் —

நேருவுக்குப் பிறகு, இந்திய அரசியலில் பெருங் குழப்பம் ஏற்படுமென்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தார்கள்.

''அரசாங்கம் வாரிசு இல்லாமல் தவிக்கும்; நாம் அழைக்கப்படுவோம்'' என்று நாக்கை நீட்டிக் கொண்டு நின்றவர்கள், மயங்கி விழுந்தார்கள்.

**கவிஞர் கண்ணதாசன் திரைக் கலை உலகில் கவிக்கலை மன்னன். தமிழின் இனிமையும் நயமும் அவரிடம் களி நடம் புரிகிறது. சொல்லும் ஓசையும் குழைவு நெளிவுகளுடன் இழைந்தோடுகிறது. நீண்ட நெடுங்கால துயரப் பெரும் பயணத்தில் கர்ண 'கடூர'த் தலைமையின் கீழ்ச் சிக்கித் தவித்து விடுதலை பெற்று சுய நடை பயிலும் அவருக்கு கர்மவீரனாக கிடைக்காத தலைவன் ஒருவன் கிடைத்து விட்டான்!**

எத்தனையோ சிக்கல்களுக்கிடையில் வாரிசுப் பிரச்னை ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுவிட்டது.

இந்தியாவுடன் நட்புறவுகொண்ட நாடுகள், உற்சாகத்தில் மிதந்தன.

இந்தியாவின் இரண்டே இரண்டு பகை நாடுகளும் திகைத்தன.

''இந்தியாவில் பெரும் ஆச்சரியம்'' என்று லண்டன் பத்திரிகைகள் இதை வர்ணித்தன.

பிரிட்டிஷ் ஜனநாயகப் பெருமையைக் கூட, இந்திய ஜனநாயகம் தாண்டிவிட்டது என்று அவை எழுதின.

''இது மிகப் பெரிய காரியம்'' என்று அமெரிக்கப் பத்திரிகைகள் வர்ணித்தன.

இந்த மிகப் பெரியகாரியத்தைச் செய்து முடித்த அந்த 'மர்ம மனிதன்' யார்?

உலகத்தைக் குழப்பிக் கொண்டிருந்த பிரச்னையை, தன் ஆட்காட்டி விரலின் மூலம் தீர்த்துக்காட்டிய அந்த உன்னத மனிதன் யார்?

அவர் ஓர் கர்ம வீரர்.

அசைக்கமுடியாத லட்சியவாதி!

தன்னையே நாட்டுக்கு அர்ப்பணித்துவிட்ட மாபெரும் தலைவர்.

''உள்ளத்தாற் பொய்யா தொழுகி உலகத்தார் உள்ளத்துளெல்லாம்'' இடம் பெற்றுவிட்ட உத்தமர்.

தென்பாண்டி நாட்டில் செழுந்தமிழர் மரபில், நாடாண்ட மன்னர் இனத்தில், சான்றோர் குலத்தில் அவதரித்தவர். அந்தப் பெருமகன் நமது ரத்த நாளங்களில் புதிய எழுச்சியை ஏற்படுத்திவிட்ட காமராஜதான் அவர்.

'கார்டியன்' பத்திரிகையும், 'டைம்' பத்திரிகையும் அவரது ராஜ தந்திரத்தைப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றன.

நேருவுக்கு அவரே வாரிசு என்கிறது உலகம்.

''அவர் எங்கள் எஜமானர்'' என்கிறார் லால்பகதூர்.

''அவர் சொல்லை ஒருநாளும் தட்டமாட்டோம்'' என்கிறார் எஸ். கே. பாட்டீல்.

ஆனந்தக் கண்ணீரோடு அவர் புகழைப் பாடுகிறார் சஞ்சீவி ரெட்டி.

"குழப்பம் தீர்த்த கோமகன் அவரே" என்கிறார் ஆர். கே. கரஞ்சியா.

நேருவின் மரண படுக்கைக்கு அருகிலேயே சதி வேலைகளில் ஈடுபட்ட விஷமிகள் கூட, இன்று அவரது வாசலிலே காத்துக்கிடக்கின்றனர்.

"இப்படியும் நடக்குமா?" என்று திகைத்து நிற்கிறார்—ராஜகோபாலாச்சாரியார்.

இந்தோ - பாகிஸ்தான் உறவின் எதிர்காலம்பற்றி அவருடன்தான் பேசினார் பாகிஸ்தான் மந்திரி புட்டோ.

அதே காமராஜரைத்தான், அமெரிக்க மந்திரி 'டீன் ரஸ்க்' சந்தித்தார்.

டில்லிநகரில் அவர் தங்கியிருக்கும் மாளிகையில், வெளிநாட்டுத் தூதுவர்கள் அவரது பேட்டிக்காக காத்துக கொண்டிருக்கின்றனர்.

பிரதமர் தேர்தலில் குழப்பம் செய்தோர், தங்கள் எதிர்கால அரசியலைக் காப்பாற்றும்படி இன்று அவரிடம் மண்டியிடுகின்றனர்.

அவர் வெற்று ஆரவாரங்களால் அலங்கரிக்கப்பட்டவர் அலல.

காரியச் சாதனை அவருக்குக் கைவந்த கலை.

நேருவுக்குப் பிறகு, நாற்பத்தைந்து கோடி மக்களின் எதிர்காலமே அவர் கையில்தான் இருக்கிறது.

காணாத ஒளியைக் கண்டுவிட்டோம்.

கிடைக்காத தலைவன் கிடைத்து விட்டான்.

அந்தத் தலைவனுக்கு வருகிற ஜூலை 15உ அறுபத்திரண்டு வயது நிறைகிறது.

இந்த நேரம் பொன்னான நேரம்.

தமிழ்ச் சமூகம் எழுந்து நிற்கவேண்டிய நேரம்.

நமது தலைவன்தான் நாற்பத்தைந்து கோடி மக்களுக்கும் தலைவன் என்பதை உறுதிபடுத்த வேண்டிய நேரம.


தென்னாட்டுக்கு சிவன் !

திருப்பழனி வீட்டுக்கு முருகன்!

நம் நாட்டிற்கோர் காமராசர்!

அழகான கட்டுடலுக்கு

"மோகன் பனியன்கள்"

இது மாறாத வரலாறு

காமராசர் நீடு வாழ்க என

வாழ்த்தும்

மோகன் நிட்டிங் கம்பெனி

காமராசர் ரோடு,

திருப்பூர்

# நம் தலைவர் காமராஜ்



எஸ்.எஸ்.கரையாளர்

**திரு. எல். எஸ். கரையாளர் முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தவர். காமராஜருடன் நெருங்கிய ஈடுபாடுடையவர். சிறிது கால அரசியல் அஞ்ஞாதவாசத்துக்குப் பிறகு மீண்டும் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டுள்ளார். இன்று அவர் வெறும் அரசியல் வாதி மட்டுமல்ல ஒரு மதுரமான பத்திரிகாசிரியரும் கூட. அவர் நம் தலைவர் காமராசரை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறார் பாருங்களேன்!**

பண்டித ஜவாஹர்லால் நேரு பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகா நாட்டில் தலைமைப் பதவியை திரு தேபருக்கு சூட்டிய பொழுது காங்கிரஸ் அக்ராசனர் பதவியின் மதிப்பும், கௌரவமும் இனி குறைநதுவிடும் என்று பொதுவாக மக்கள் கருதினர். நேரு வகித்த பதவியை வேறுயாரும் அவ்வளவு திறமையாக வகிகக முடியாது என்பது ஒரு புறமிருக்க, மக்கள் நேரு மீது கொண்டிருந்த அனபை வேறு எந்தத் தலைவர் மீதும் வைக்கமாட்டார்கள் என்ற நிலைமையும இருந்தது. சென்ற ஆண்டுகளில் இந்த உண்மை புலனாயிற்று. காங்கிரஸ் அக்ராசனர் பதவி நாளுக்கு நாள் வலிமை இழந்து வநதது.

காங்கிரஸ் கட்சியின் இரண்டாந்தர தலைவர்களுக்கு அளிக்கப்படும் பதவியாகவும், மாகாணத்தில் இரு தலைவர்களுக்கிடையே தவிறக முடியாத மோதல் ஏற்படும் போது ஒருவரை டெல்லிக்கு அழைத்து காங்கிரஸ் அக்ராசனர் பதவி கொடுபபதையும் நாம் பார்த்திருக்கிறோம். காங்கிரஸ் தலைவர் யாராக இருந்தாலும் நேருஜியே தலைவர் என்ற நம்பிக்கையில் நாட்டு மக்கள் கவலைப் படாமல் அன்று இருந்தார்கள்!

காங்கிரஸ் கட்சியில் பதவிச் சண்டையும், பதவி கிடைத்தவர்கள் விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டிருப்பதையும் பொது ஜனத்தொடர்பு குறைந்து வருவதையும் கண்ட திரு. காமராஜர் கட்சியைப் பலப்படுத்த புதிய தொரு திட்டத்தை வகுத்தார். இந்த நேரத்தில் தான் ஓர் புதிய சகாப்தம் நாட்டில் உதயமாயிற்று. பண்டித ஜவாஹர்லால் நேரு உள்பட பதவியை விட்டு விலகுவதற்கும் தயாராக இருந்தார்கள். முதன் முதலில் திரு. காமராஜரே சென்னை முதன் மந்திரிப் பதவியை ராஜினாமா செய்தார்.

இதைக கண்டு நம் தேசம் மட்டுமல்ல, உலகமே வியநதது. இநத வழியை வகுத்துக் கொடுத்த திரு. காமராஜை அப்போது தான் ஐரோப்பாவும், அமெரிக்காவும் முதல முதலில் தெரிந்து கொண்டன.

கல்லூரிப படிப்பிலலாமல் சாதாரண தொண்டராக வாழ்க்கையை ஆரம்பித்த திரு. காமராஜர் எபபடி உலகமே வியக்கும் அரசியல மேதையானார்? பொதுவாக காமராஜர் தனனல மற்று சேவை செய்பவர். முதன் மந்திரியாக இருக்கும் போது கூட ஸ்தாபனத்தில் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். ஸ்தாபனம் பலமாக இல்லையேல் பதவி பிரயோசனமில்லை என்பதை நன்கு புரிந்து கொண்டவர் அவர். ஸ்தாபனம் பலமாக இருகக வேணடுமானால் பொது ஜனத் தொடர்பு வேண்டும். பொது ஜனத் தொடர்பை சென்னையிலும், மற்ற நகரங்களிலும் மட்டும் ஏற்படுத்தி விட முடியாது. கிராமம் கிராமமாகச் சென்று மக்களைக் கலந்து பேச வேண்டும். அவர்கள் இன்னல்களைத் தீர்க்க வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்.

இன்றைய காங்கிரஸ் தலைவர்களில் பல்லாயிரக்கணக்கானவர்களை ஒவ்வொருவராக சந்தித்துப் பேசியவர்களில் காமராஜரைப் போல் வேறு யாருமே இருக்க முடியாது. தம்மை வந்து யாரும் எந்தச் சமயமும் பார்க்க முடியும் என்ற எண்

ணத்தை பெர்து மக்களிடையே உண்டாக்கிய தலைவர் காமராஜர் தான். சாதாரண மனிதர்களுடன் சாதாரண மனிதராக பழகி வரும் இவர் வறுமை என்ருல் என்ன என்று தெரிந்தவர். ஏழைகளின் தோழனுக வாழ்பவர். பேசுவதைவிட செயலாற்றுவதில் சிரத்தை கொண்டவர்.

சாதாரணமாக பொதுக் கூட்டங்களில் இவரைப் பார்க்க வருகிறவர்கள் முதல் மந்திரியென்ருே காங்கிரஸ் அக்ராசனர் என்ருே பார்க்க வருவதில்லை. 'காமராஜ்' என்றே பார்க்க வருகிருர்கள்.

கடந்த மே மாத இறுதியில் நேருஜி மறைந்த போது நாடு ஆருத் துயரத்தில் ஆழ்ந்ததோடு அவர் தனக்குப்பின் வாரிசாக யாரையும் நியமித்துப் போக வில்லையே என்றும் கலங்கியது. வெளி நாட்டினர் இந்தியா குழப்பமடையும் என்று தான் எதிர் பார்த்தனர். உள் நாட்டிலும் பிரதமர் தேர்தல் எப்படி நடக்குமோ என்று கவலைப் பட்டார்கள். இந்தியப் பிரதமர் தேர்தல் ஜனநாயகத்திற்கே ஒரு சவாலாகவும் இருந்தது. இந்த சிக்கலை அற்புதமான முறையில் சமாளித்தவர் திரு. காமராஜர் தான். யாருக்கு அதிக மான ஆதரவு இருக்கின்றதோ அவரே பிரதமராக வரவேண்டுமென்று வழி வகுத்த எல்லோரையும் திருந்தச் செய்து ஏகமனதாக பிரதரமரை அவர் தேர்ந்தெடுக்கச் செய்தது உலக அரசியல் அரங்கில் காமராஜுக்கு நிலையானதோர் ஸ்தானம் கிடைக்கும்படி செய்து விட்டது.

தமிழர், தமிழிலே பேசுபவர், தமிழிலே எழுதுபவர் தனித் தமிழர் ஒருவர் இந்த அரிய சாதனைகளை செய்து முடித்தது தமிழனுக்கு பெருமை தருகிறது!

பத்து ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் காங்கிரஸ் அக்ராசனர் பதவி நாட்டில் மிகப் பெரிய பதவியாக இன்று கருதப் படுகிறது.

மக்களில் சிலர் பதவி வகிப்பதால் மதிப்பு பெறுகிருர்கள். மற்றும் சிலர் பதவிககே மதிபபுக் கொடுக்கிருர்கள், காங்கிரஸ் தலைமை பதவிககு காமராஜர் மீண்டும் பெருமை கொடுததார்

இன்று பாரத தேச காமராஜரின் அறுபத்திரண்டாவது பிறந்த தினத்தைச் சிறப்பாக கொண்டாடுகிறது. இந்த நல்ல நேரத்தில் இதை நாம் நினைவு படுத்திக் கொள்வோம். 'பதவி வெறியர்கள் சாலையோரத்தில் விழுந்து கிடக்கிருர்கள். பதவி துறந்த காமராஜ் முன்னேறிச் செல்கிருர். அந்த லட்சியப்பாதையை உலகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது!'

'நேருவுக்குப் பின்னுல் யார்?' என்று கலங்கிக் கண்ணீர் விட்ட பாரத அன்னைக்கு-தமிழ்த்தாய் இப்படிததான் ஆறுதல் சொல்கிருள். "உறுதி தவருதவன். நேர்மையிலே வளர்ந்தவன். பட்டம் பெற்றதில்லை. செல்வம் கண்டதில்லை. சாதாரண மக்களிடையே தோன்றி என்றும் மக்கள் தொண்டனுகவே வாழ விரும்பும் என் மைந்தன் ஒருவன் இருக்கிருன!"

"அவன் பெயர்?"

"காமராஜ்!"

காங்கிரஸ் அக்ராசனர் பதவியின் கௌரவத்தையும் மதிப்பையும் உயர்த்திய திரு. காமராஜர் நீடுழி வாழ்க என்று நாமும் வாழ்த்துவோம்.

## யார் மகராஜன் ?

ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருக்கிறவனைப் பார்த்து, "அவனுக்கென்னப்பா, மகராசன்" என்கிருேம், அதேசமயத்தில் நாள் பூராவும் வெய்யிலில் உழைத்துப் பாடுபடுகிருனே அவனைப் பார்த்து; "கூலிக்காரன்" என்கிருேம். இது நியாயமா? சோம்பேறியை மகாராசா என்று புகழ்வதும், உழைப்பாளியைக் கூலிக்காரன் என்று இழிவாகப் பேசுவதும் நல்லதா?

—காமராஜ்



# தனிப்பெரும் தலைவா வாழி!

அருணன்

தனிப்பெரும் தலைவா வாழி!
தமிழக முதல்வா வாழி!
எனப்புகழ் சூட்டும் நாளில்
இந்தியத் தலைவ னுனைய்.

குணத்தினில் குன்றே என்றார்
குவலயத் துறவி என்றார்
பணத்தினைப் பரவலாக பகிர்ந்திடும்
வாழ்வுதன்னை உலகினுக்கீய வந்தோய்

கணப்பொழு தோய்வே யின்றி
கருத்தினில் ஏழை வாழ்வை
உயர்த்திடல் ஒன்றே கொள்கை
உயிர்க்கொள்கை கொண்டு நின்றோய்.

பாரதஜோதியான பார்புகழ் நேருவைநாம்
பறிகொடுத் தேங்கும் போது
ஊரெலாம் என்ன வாகும்—என
உலகெலாம் எண்ணும் காலை
நாடெலாம் போற்றும் வண்ணம்
நல்லதோர் முடிவு கண்டாய்

படித்திடா அறிஞன்நீயே;
பாரத ஜோதிநீயே
தமிழ்த்திரு நாடுபெற்ற;
தனிப்பெரும் தலைவன் நீயே
இனித்திடும் பேச்சைவிட்டு;
முடித்திடும் செயலேகொண்ட
முழுமுதற் தலைவாவாழி!
முத்தமிழ் காக்கும் உன்னை.

# இந்திய மொழிகளில் உங்கள் தந்திகள்

எந்த
இந்திய மொழியிலும்
நீங்கள் தந்தியை
அனுப்பலாம்
ஆனால்
தந்திச் செய்தி
தேவநாகரி எழுத்தில்
எழுதியிருக்கவேண்டும்.

ஆங்கிலத்தில் அனுப்பப்படும், வாழ்த்துத் தந்திகள், (வாழ்த்து வாக்கியங்கள் இந்தியில்), டீலக்ஸ் தந்திகள், பத்திரிக்கைச் செய்தித் தந்திகள், உயிருக்கு ஆபத்தான செய்திகள் அடங்கிய அவசரத் தந்திகள், போனோ கிராம்கள், சுருக்கமான தந்தி விலாசங்களை பதிவு செய்துகொள்ளுதல், போன்ற தந்தி வசதிகள், தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டவைகளுக்கும் கிடைக்கின்றன.

**இவ்வசதி 2000 தந்தி காரியாலயங்களில் கிடைக்கிறது.**



## தபால் தந்தி இலாகா

DA 63/475

## நாங்கள் அபூர்வ சகோதரர்கள்!

காமராஜர் காங்கிரசின் சின்னமாக—எடுத்துக் காட்டாக இருக்கிறார். காமராஜர் சக்தி வாய்ந்த தலைவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அதிலும் படிக்காதவர். அப்படி இருந்தும் 45 கோடி மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் மாபெரும் தலைவராக காமராசர் விளங்குகிறார்.

காமராசரோடு நான் 30 ஆண்டு காலமாகப் பழகி வருகிறேன். தமிழகத்திற்கும், ஆந்திராவிற்கும் நல்லஉறவு இருந்து வருகிறது. ஆந்திரா பிரிந்தபோது கிளம்பிய தகராறுகள் எல்லாம் சுமுகமாகத் தீர்க்கப் பட்டன. அதற்கு காமராஜர் தான் காரணம்.

என்னை லட்சுமணனாகவும், காமராசரை ராமனாகவும் ஒப்பிட்டு கூறுகிறார்கள். என்னை லட்சுமணனாகவோ, காமராசரை ராமனாகவோ நான் கூறமாட்டேன். அதற்குக் காரணம் ராமாயணத்தில் ஒரு சீதை இருந்தாள். இங்குஅதைப் போல சீதை இல்லை. ராவணனும் தூக்கிப் போகவில்லை.

சீதை இல்லாத ராமாயணமோ, ராமரோ, லட்சுமணரோ கிடையாது. மூத்த அண்ணன் காமராசர். நாங்கள் அபூர்வ சகோதரர்கள்.

விருதுநகரில் வளைந்து, நெளிந்து போகும் சந்து பொந்துகளைக் கடந்து செல்லும்ஒரு அறை கொண்ட வீட்டில் காமராஜ்ஏழையாக பிறந்தார். அப்படிப்பட்ட தமிழக முதலமைச்சராகவும், இன்று அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவும் இருக்கிறார்.

ஆனால் காமராஜரின் சொத்து அந்த ஒரே அறை கொண்ட வீடுதான். அதில் தான் காமாராஜரின் தாயார் இருக்கிறார்.

'காமராசர் வாழ்க' என்று கோஷம் போட்டால் மட்டும் போதாது. காமராசரின் தத்துவத்தை ஏற்று பொது மக்களின் அபிப்பிராயத்தைத் திரட்டி காமராஜருக்குநாம்பக்கபலமாக நிற்போமாக.

—மத்திய அமைச்சர். என். சஞ்சீவ ரெட்டி.



## கருணை உள்ளம்

எங்கள் பள்ளியில் சென்ற ஆண்டில் (1963 ஜூன்) எட்டாம் வகுப்பில் படித்த மாணவர்களில் வெங்கடராமன் என்பவன் புத்தகங்கள் வாங்க வழியில்லாமல் இருந்தான். யாரும் எதுவும் சொல்லாமல் அப்பையன் ஒரு அஞ்சல் கடிதம் ஒன்று வாங்கி தனக்கு புத்தகங்கள் வாங்க பணம் இல்லை, ரூபாய் பத்து தயைக்கூர்ந்து அனுப்பவும் என்று முதலமைச்சர் உயர்திரு காமராஜ் அவர்களுக்கு கடிதம் எழுதினான். கடிதம் எழுதின ஒரு வாரத்திற்குள் எனக்கு (தலைமை ஆசிரியருக்கு) மணியாடர் ரூ 10 வந்தது. அதை மேற்குறிப்பிட்ட மாணவனிடம் கொடுத்து விடுமாறு வந்தது. பையன் பணத்தைப் பெற்று புத்தகங்களை வாங்கி வந்து காண்பித்து 'காமராசருக்கு கருணை உள்ளம்' என்று சொல்லி ஆனந்தகண்ணீர்பொழிந்தான். நானும் அவனுடைய இன்பத்தில் கலந்து கொண்ட போது தலைவர் காமராசர் தேசத்தொண்டு புரிவதில் தனிச்சிறப்பு பெற்றமைபோல் குழந்தைகள் கல்வித் தொண்டிலும் மிக்க ஆர்வம் படைத்த கருணை உள்ளம் உடையவர் என்று நினைத்து மகிழ்ந்தேன்.

அ. ஜெ. அப்பாவு நயினார்

தலைமை ஆசிரியர்.

நகராண்மைக் கழக

உயர்தர துவக்கப் பள்ளி

சேத்துப்பட்டு சென்னை-30.



## 'காமண்' ராஜா !

நேருஜியின் அஸ்தி நர்மதையில் கரைத்து விடப்பட்ட அன்றிரவு நான் லக்னோவுக்குப் பயணமானேன். ரயிலில் என் சக பிரயாணிகளாக ஒரு அமெரிக்கரும் ஒரு வடஇந்தியரும் இருந்தனர்.

பேச்சு வளர்ந்து அரசியலுக்கு வந்தது. காமராஜரைப் பற்றி பேச்சு வந்த பொழுது அவ்வடக்கத்தியர், அந்தப் பெயர் காரணப் பெயர் என்று வேடிக்கையாகச் சொன்னார். அவருடைய விளக்கப்படி காமராசா என்பது "காம்-கா-ராஜா'. இந்தியில் காம் என்றால் வேலை. நடைமுறையில் வழக்கத்தில் 'காம்கா ராஜா' என்றால் வேலையில் நிபுணர் என்று கருத்து. அதைக் கேட்ட அமெரிக்கர் (*Common man's Raja*) தான் காமராஜ் ஆயிற்று என்றார். காமராஜர் என்ற பெயர் ஆங்கிலத்திலிருந்தே வந்தது என்று கூறி அதைச் சரியென்று விளக்க தென்னாட்டில் ஆங்கில முறைப் பெயர் வைத்துக் கொள்ளும் வழக்கமுண்டு என்றும் குறிப்பிட்டார். அவர்கள் சொன்ன காரணங்கள் எப்படியிருந்தாலும் அந்த குணாதிசயங்கள் காமராசருக்கே உரியவை.

**திருமதி ராஜம் மூர்த்தி**
ஜபல்பூர்.

# மலரைப்படித்து முடித்துவிட்டீர்களா ?

பேரன்புடையீர்,

வணக்கம்! காமராஜ் மலரை படித்து முடித்து விட்ட களைப்பில் இருப்பீர்கள். இந்த களைப்பினூடே சலிப்பில்லாமல் இந்த முடிவுரையையும் படித்து விடுங்கள்.

காமராஜ் மலரை எங்கள் சுருங்கிய வாய்ப்பையும் வசதியையும் கொண்டு அதுவும் மிகக் குறியகால அளவில் முடிந்தவரை தயாரித்தளித்தோம். இதில் ஏதேனும் குற்றம் குறைகள் இருப்பின் மன்னித்து பொறுத்தருள்வீர்களாக.

காமராஜருக்கு என்று ஒரு மலர் வெளியிடும் பணியை 'உதயம்' தோன்றிய நாளிலிருந்து அது செய்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். அதுவும், எதையும் அந்தத் தூய தலைவனிடம் இருந்து எதிர்பார்த்து நாங்கள் செய்ததில்லை, செய்யவில்லை, செய்யப்போவதுமில்லை. ஆனால் இந்த ஐந்து காமராஜர் மலர்களையும் வெளிக்கொண்டுவந்த எங்களுக்குச் சிலப் புதுமையான அனுபவங்களும் நூதனமான படிப்பினைகளும் கிடைத்தன. வருகிற இதழ்களில் அதுபற்றி விளக்கமாக எழுதலாமென்றிருக்கிறோம்.

இந்த மலரை உருவாக்க எங்களோடு தோளோடு தோளாக நின்று உதவிய எண்ணற்றவர்களுக்கு 'உதயத்தின்' சார்பில் எங்கள் இதயம்கலந்தநன்றியும் வணக்கமும் உரித்தாகுக. அதிலும் குறிப்பாக, ஓவியர் ஆனந்தன் பாண்டியன் ஸ்டூடியோ திரு. சுப்பையா; சுடர் அச்சக உரிமையாளர், தொழிலாளத் தோழர்கள் ஆகியவர்களுக்கும், மற்றும் விளம்பரங்கள் தந்தும், கட்டுரைகள் அளித்தும் உதவிய அனைவருக்கும் எங்கள் பணிவன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் அன்புள்ள,

**கன்னிக்கண்ணன்**

Published by Sakunthala Krishnan, 27, Rajagopal Naicken St., Chintadripet, Madras-2, Printed by R. Ravi - Sudar Printers 38, Jones Street, Madras-1, Acting Editor Sakunthalakrishnan, Founder: Kannikannan